59

pproved by the Text-Book Committee Madras.
Consolidated List Page 149 F. S. G G. Dt. 1 B. Suppt Dated 2-6-36.

SREEMATH

RAMAYANAM.

[SARASANGRAHAM.]

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
20 APR 1937
MADRAS

BY

S. P. VENKATESA SARMA,

Teacher of Sri Sankara Vidya Sala, Kodumudi.

E. M. GOPALAKRISHNA KONE,

MADURA & MADRAS.

Rights Reserved.] 1937 [Annas. 6.

Excelsior Power Press, Madura.

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

ஸ்ரீமத்

இராமாயண சாரசங்கிரகம்

கோபிசெட்டிபாளையம் D. J. ஹைஸ்கூல் உதவி ஆசிரியராயும்,
மதுரை மீனாட்சிவித்யாசாலைத் தலைமை உபாத்தியாயராயும்
இருந்து, இப்பொழுது கொடிமுடி ஸ்ரீசங்கரவித்யாசாலை
உபாத்தியாயராயிருந்து வருகிற

எஸ். பி. வெங்கடேச சர்மா அவர்கள்

இயற்றியது.

சிறந்த சித்திரப்படங்களுடன் கூடியது.

மதுரை, புதுமண்டபம், புத்தகவியாபாரம்,

இ. மா. கோபாலகிருஷ்ணக் கோன்,

வெளியிட்டது.

1937.

Rights Reserved] [விலை அணா 6.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
21 APR 1937
MADRAS

Printed at
The Excelsior Power Press,
Madura.

21 APR 1937

INTRODUCTION.

IN recommending this little book to the attention to School Masters and the Public, I wish to say a few words on its necessity and use. Mr. S. P. Venkatesa Sarma has done a distinct service in reducing the Ramayana to such a simple form that it can be read and understood by boys and girls in the 2nd and 3rd standards, for it appears that there is not now in the homes of the children the same amount of story-telling that there was two generations ago, so that little boys and girls are often left to find what substance they may pick up from the casual conversation of their elders to fill their minds instead of being provided with special food for the imagination. Children outside School hours are not likely to occupy their minds with Arithmetic of Geography but if they are taught in a proper manner the elevating stories of the Ramayana they weave them into their own lives and imagine themselves into the beauty courage and unselfishness which these depict.

In a book so small at his which aims at a connected account of the lives of Rama and Sita. The stories cannot be dealt with in very concrete detail; but it is desirable that teacher should take one story each week expand it in the most concrete detail, so that the children may have a living mental picture before them and use it as a basis of simple conversation lessons and compositions in the vernacular and even in English where that is taught in the higher standards.

At the same time I would suggest that the teachers do not emphasise too much the interest of those points in

the stories which concern ornaments, ceremonial observances and the like but rather impress upon the class those bearings of the narrative which lead the mind with rational and purposeful thought and stir the emotions to an emulations of the noble and courageous actions. I do not wish to say that marriages and other ceremonial observances are irrational or without interest but it is generally admitted that such matters in the present state of our society often occupy too much of the feminine attention and they do not as a rule conduce to the devolopment of reason or the cultivation of character. It is will that girls should learn to regard character and principle, courage, effection and capability to be the real source of happiness in life and effort wisely directed to be the real source prosperity. I fear that at present many of the feminine kind are left a prey to those terrors which live in the clouds that surround the ignorant, and from the compelling force in superstition lives. For example, the birth of a son or the increase of wealth depend upon natural causes impregnated with that Karma which is a compound of actions originated in the past with efforts made in the present and it does not depend upon the favour of any being. There is perhaps no-book more rational than Ramayana inspired as it is with the idea of the divine Law of Karma and certainly none more inspiring to those whose ideals are to be worked out within the sphere of family life.

MADURA.
27—10—1935.

ERNEST WOOD,
Secretary T. E. T.

I glanced through your booklet Ramayanam for the young. It is written in an easy, elegant style, and is well adapted for standard III of boys' and girls' Schools as a text-book of morals. I intend introducing it into the 3rd Standard of the Setupathi High School, Madura.

C. Narayanaswami Aiyar, B. A., L. T.,

Madura,
6—4—1915.

Head Master,
Setupathi High School.

I have had the pleasure or perusing portions of "ஸ்ரீமத் இராமாயணச் சுருக்கம்" written by Mr. S. P. Venkatesa Sarma Headmaster of the Sri Meenakshi Vidyasala, Madura the moral teachings of the two immortal Epics RAMAYANA & MAHABARATHA have moulded the beliefs and conduct of the Hindus and any education of the boys and girls of this lead, which does not include a study of them especially Ramayana, should necessarily be defective. The work under reference gives a connect narrative of the great story and is written in very easy Tamil prose. I have no doubt that it would prove useful for the purpose for which it is intended; viz. as a Text-book for the students of the Second and Third class.

T. C. Strinivasa Iyengar, B.A., B.L.,

Madura,
6—6—1914.

High Court Vakil,
and Secretary, Madura Tamil Sangam.

It has given me a real pleasure in glancing through your compilation which gives in a simple, good and flowing style a connected series from the great Epic Ramayana so that even a child that comes across with it will hardly fail to be impresed with the fundamental moral principles necessary for the perfection of man............

(Sd.) **J. Rama Aiyar,** B. A., B. L.,

Vakil.

East Gate Madura.
7—7—1914.

முகவுரை.

இராமாயண சாரசங்கிரகம்'' என்பது "சாட்சாத் பகவான் இராவணுதி துஷ்டர்களைச் சங்கரித்து, விபீஷணுதி சிஷ்டர்களைப் பரிபாலிப்பதற்காக இராமாவதார மெடுத்த வைபவக் கதையின சுருக்கம்'' என்று பொருள்படும். சற்று ஆழ்ந்து யோசிப்போமானுல் "நமது நாடு புண்ணிய நாடு; ஆரியமும், தமிழும் ஆதிபாஷையாய் அமையப் பெற்று,'அறம், பொருள், இன்பம், வீடு' என்கிற புருஷார்த்தம் இன்னின்னது என்று சர்வ ஆன்மாக்களும் அறிந்துய்யும்பொருட்டே வேத புராண இதிகாக வடிவிற் பரவப் பெற்று, எல்லாவித நாகரிகங்களையும் முதல்முதல் தானடைந்து, பிற்பாடு பலவற்றுக்கும் நாளாவட்டமாயுதவிவருகிற திருநாடு'' என்று நாம் பெருமை பாராட்டிக் கொள்கிற மகிமையை நமக்குக் கொடுத்திருப்பனஇரண்டுபெரிய ஆதிகாவியமாகிய இந்த'இராமாயணமும், பாரதமும்தான்'' என்ற தீர்மானத்தில் வந்து முடியும். மேலும் ஆன்மகோடிகளாகிய நமக்கு எல்லா அவைவங்களினும் சிரேஷ்டமுற்றன இரண்டுகண்களே போன்று, நமது இந்தியநாட்டின்கண் எல்லா இதிகாச புராணங்களினும் சிரேஷ்டமுற்றன இவை இரண்டுமேயாம். இவைகளைப் பக்திமேலீட்டிணுல் இனிய செய்யுட்களின் வடிவில் தமிழில் மொழிபெயர்த்து, யாத்தருளியவர்கள் கல்வியிற் பெரியாராகிய கம்பநாட்டாழ்வாரும், கவியிற்பெரியாராகிய வில்லிபுத்தூராழ்வாருமே என்ப. இவைகளை அரும்பெரும்புலமைவாய்ந்த அரிய பெரிய புலவர்களே ஆய்ந்துணர்ந்துகொள்வர்.

ஆனுல் "இளமையிற் கற்பதுசிலையினெழுத்து ''என்ற முதுமொழிப்படி நந்தமிழ்நாட்டு மாணவர் சிறுவர், சிறுமிகள் தமது சிறுப்பவயதிலேயே இவைகளை உணருமாறெங்

னம்? இதுபற்றியே நமது தாய்ப் பாஷைக்கோர் தாய
கம் போன்றுவிளங்கும் இம்மதுரையம்பதியில் ஸ்ரீமீனுட்சி
வித்தியாசாலேத் தலேமையாசிரியரா யிருந்து, தற்போது
கொடுமுடி ஸ்ரீசங்கரவித்தியாசாலேஉபாத்தியாயரா யிருந்து
வருகிற பிரம்மஸ்ரீ எஸ். பி. வேங்கடேசசர்மா அவர்கள்
முறையே ஸ்ரீமத் இராமாயண சாரசங்கிரகம், ஸ்ரீமத் பாரத
சாரசங்கிரகம் என்னும் பெயரிய இப்பெரிய இரண்டு இதி
காசங்களேயும் 'சுருக்கிச்சொல்லல் விளக்கிக்காட்டல்'என்ற
முறைப்படி மாணவரும் ஏனையரும் மனதூன்றிப் படித்து
ணரும் வண்ணம் தெள்ளிய நடையும் ஒள்ளிய பொருளும்
சேர்ந்து மிளிர ஓரினிய தமிழ்நடைக்கதாரூப மாக்கினர்.

"கல்வி, கற்பு, காருண்யம், கடவுட்டன்மை, கைத்தொ
ழில், வேளாண்மை, வியாபாரம், விபகாரம், நீதிநியமம், சாந்
தம், வீரம் முதலிய ஒழுக்க வழக்கங்களினும் சிறந்து
விளங்கி வந்தது நந்தமிழ்நாடு" என்று தமிழர்கள் தமது
பூர்வீக நிலேயை அறிந்துகொள்வதற்கு இத்தகையகாவியச்
சுருக்க வசன நூல்களே தற்போது, சிறந்த கருவிகளா
மென்பது எமது துணிபு. 'இரண்டும் இரண்டு கண்களே'
போன்ற இவ்விரு சாரசங்கிரகங்களேயும் இனிதே ஏற்றுப்
பெரிதும்முயன்று அரிதின் வெளிப்படுத்தாராகிய மதுரை
ஸ்ரீகோபால்மஹால் புத்தகவியாபாரப் பிரமுகர் ஸ்ரீமான்
எங்கள் இ. மா. கோபாலகிருஷ்ணக் கோனூர் அவர்கட்கு
எந்நாட்டினுஞ்சிறந்த இத்தமிழ்நன்னுடு என்றுமறவா நன்றி
பாராட்டக் கடப்பாடுடையதாம்.

இங்ஙனம்,

நா. கிருஷ்ணசாமி நாயுடு,

தமிழ் வித்வான்,

மதுரை.

உ

ஸ்ரீ ராமஜெயம்.

ஸ்ரீ மத்

இராமாயண சாரசங்கிரகம்.

---

1. சாட்சாத்காரமே ஜனித்ததுராமனுய்.

அயோத்தி என்று ஒரு நகரம் இருந்தது, அது முன் காலத்தில் மிகவும் பெருமை வாய்ந்ததா யிருந்தது. அதில் **தசரதர்** என்று ஓர் அரசர் ஆண்டுகொண்டிருந்தார். அவர் அதிக பராக்கிரமசாலி. அநேக அரசர்களை ஜெயித்திருந்தார். அவர்களுக்கெல்லாம் மேலாக அரசாண்டார். ஆகையால் அவருக்குச் 'சக்கரவர்த்தி' என்ற பட்டம் ஏற்பட்டிருந்தது. அவருக்கு மூன்று மனைவிகள். கௌசலை, சுமித்திரை, கைகேயி என்பவர்கள். தசரதருக்கும், அவருடைய மனைவிமார்களுக்கும் எல்லாவித ஸம்பத்துகளிருந்தும், புத்திரபாக்கியமட்டும் இல்லாமலிருந்தது. அரசர் அக்குறை நீங்க அநேக தானதருமங்களைச்செய்து, 'புத்திரகாமேஷ்டி' என்கிற ஒரு மஹா யாகத்தையும் செய்தார். இந்த யாகத்தைச் சரியாய்ச் செய்துமுடித்தால், பகவான் அருளால் புத்திரர்கள் உண்டாவார்கள். அப்படியே தசரதருக்கும் நான்கு பிள்ளைகள் பிறந்தார்கள். கௌசலையினிடமாக இராமரும், கைகேசியினிடமாகப் பரதரும், சுமித்திரையிடமாக லக்ஷ்மணரும், சத்துருக்னரும் பிறந்தார்கள். இந்தக் குழந்தைகளைப் பெற்றோர்கள் மிகவும் சீராகவும், செல்வமாகவும் வளர்த்து வந்தார்கள். இவர்

களுக்கு எந்தெந்தச்சமயங்களில் எந்தெந்தச் சடங்குகளைச் செய்யவேண்டுமோ, அவைகளை யெல்லாம் ஒன்று விடாமல் வெகு விமரிசையாய்ச் செய்து முடித்தார்கள். இவர்களுக்கு ஐந்து வயதானதும் கல்வி கற்கப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பினார்கள். இவர்களும் கிரமமாய்ப் பள்ளிக்கூடம் சென்று, மிகவும் கருத்தாய்ப் படித்து வந்தார்கள்.

——

2. சகோதரர் நால்வரும் சார்ந்து படித்தனர்.

———

"வசிஷ்டர்" என்பவர் ஒரு பெரிய ரிஷி. அநேக தபசுகள் செய்தவர். சிறந்த நற்குணங்கள் வாய்ந்தவர். வெகு விமரிசையாய் விஷயங்களை எல்லாம் கற்றுணர்ந்த கல்விமான். தசரதருடைய வம்சபரம்பரைக்கே இவர்தாம் குரு. இராமர், லக்ஷ்மணர், பரதர், சத்துருக்னர் ஆகிய சகோதரர்கள் நால்வரும் இவரிடந்தான் கல்வி கற்று வந்தார்கள். இவர்கள் "சக்கரவர்த்தியின் குழந்தைகள்" என்று எள்ளளவேனும் கர்வம் கொள்ளவில்லை. வசிஷ்டரும் இவர்களிடத்தில் மற்றவர்களைவிட அதிக அபிமானம் பாராட்டவில்லை "யாராயிருந்தாலும், எந்த உன்னத பதவியிலிருந்தாலும் கல்வியினால் ஏற்படும் பெருமையே தான் ஒருவருக்கு உண்மையான பெருமை. மற்ற பெருமைகள் நிலைக்கக் கூடியவைகளல்ல" என்பதை இந்தக் குழந்தைகள் நன்றாய் அறிந்து கொண்டார்கள். சோம்பலில்லாமல் ஊக்கத்தோடும், 'உற்சாகத்தோடும் எல்லா விஷயங்களையும் தங்கள் குரு வசிஷ்டரிடமிருந்து கற்றுக்கொண்டார்கள். தங்கள் அந்தஸ்திற்கு வேண்டிய வித்தைகள் என்

னென்ன உண்டோ அவ்வளவையும் தெளிவாய் அறிந்து கொண்டார்கள். இவர்களுக்கு 'உபநயனம்' ஆனபிறகு கலியாணவயது வரும்வரையும் தங்கள் குருவினிடமே படித்துக்கொண்டிருந்தார்கள். சிறந்த கல்விமான்களாகவும், குணவான்களாகவும் விளங்கினர்கள். இவர்கள் நால்வரில் லக்ஷ்மணர் இராமரிடத்திலும், சத்துருக்னர் பரதரிடத்திலும் விசேஷப் பற்றுள்ளவர்களாய் அவர்களுடைய நிழல் போல் இணைபிரியாது இருந்துவந்தார்கள். இவ்விதமாய் இவர்கட்குப் பிரமச்சரியவிரதம் முறையே கழிந்து வந்தது.

---

3. செல்வத்தைப் பார்க்கிலும் சிறந்தது தவமே.

"விஸ்வாமித்திரர்" என்ற ஒரு பெரிய ரிஷி இருந்தார். இவர் முன்னல் அரசராயிருந்தவர். ஒரு காலத்தில் இவர் வேட்டைக்குச் சென்றிருந்தார். வேட்டையாடி, மிகவும் களைத்துப்போனர். அந்தச் சமயத்தில் இவர் வேட்டையாடிய வனத்தில் தவம் செய்துகொண்டிருந்த வசிஷ்டரால் உபசரிக்கப்பட்டார். வசிஷ்டரிடம் 'காமதேனு' என்கிற ஒரு தேவலோகப் பசு இருந்தது. அது யார் யாருக்கு எந்தெந்தச் சமயங்களில் என்னென்ன பொருள்கள் வேண்டுமோ அவற்றை யெல்லாம் கொடுக்கும்படியான சக்திவாய்ந்தது. அதைத்தனக்குக்கொடுத்து விடும்படி விஸ்வாமித்திரர் கேட்டார். அதன் மூலமாய் இரண்டு பேருக்கும் மனஸ்தாபம் ஏற்பட்டது. விஸ்வாமித்திரர் தன் சேனைகளை எல்லாம் சேர்த்துக்கொண்டு,

வசிஷ்டருடன் போர் புரிந்தார். வசிஷ்டர் தனிமையாயிருந்தும் விஸ்வாமித்திராவது, அவருடைய சேனைகளாவது அவரை ஒன்றும் செய்ய முடியவில்லை. வசிஷ்டருடைய தபோபலத்தால் அவருக்கு எவ்வித இடையூறும் ஏற்படவில்லை. இதனால் தபசின் மேன்மையைக் கண்டு வியந்து, விஸ்வாமித்திரர் தானும், "தவஞ்செய்து, வசிஷ்டரைப்போல் மேன்மையடையவேண்டுமென்று" எண்ணினார். உடனே தன் இராஜ்ஜியத்தைத் தன் புத்திரர்கள் வசம் ஒப்பிவித்து, வனம் சென்று, நெடுங்காலம் கொடுந் தவம் புரிந்து, வசிஷ்டரைப் போலவே இவரும் ஒரு தகுந்த ரிஷி ஆனார். இராமர், லக்ஷ்மணர், பரதர், சத்துருக்னர் இவர்களுடைய விவாக விஷயமாய்த் தசரதர் ஆலோசித்துக்கொண்டிருக்கும் சமயத்தில் தமது காரியார்த்த விஷயமாய்த் தசரதரைக் காண விஸ்வாமித்திரர் வந்தார்.

4. இன்றே ராமனை என்னோடனுப்பு.

விஸ்வாமித்திரர் ஒரு பெரிய யாகம் செய்ய உத்தேசித்திருந்தார். அந்தக் காலத்தில் கொடிய இராட்சதர்கள் மிகுதியாயிருந்தார்கள். பெரியோர்களையும், நல்லவர்களையும் ஹிம்ஸிப்பதும், அவர்கள் செய்யும் நல்ல காரியங்களைக்கெடுப்பதுமே அந்தத் துஷ்டஅரக்கர்கள் தொழிலாயிருந்தது. விஸ்வாமித்திரருடைய யாகத்தையுங்கூடப்பன்முறை அவர்கள் கெடுத்து வந்தார்கள். யாகம் செய்பவர்கள் யாகம் செய்யும் சமயத்தில் கோபத்தைக் காட்டலாகாது. ஆகையால் இந்தக் கொடியவர்களால் தன்னுடைய யாகத்திற்கு எவ்வித இடையூறுமில்லாதிருக்க இவர் யாரை

யாவது ஒத்தாசைக்கு அழைத்துவரவேண்டியது அவசிய மாயிற்று. அதற்காகவேதான் இவர் தசரதரிடம் வந்தார். தபோதனர்கள் முதலிய பெரியோர்கள் வரும் சமயங் களில் அரசன் அவர்களைப்போற்றித் தகுந்த உபசாரங் கள் செய்ய வேண்டியது அவனது கடமை. தசரதரும் விஸ்வாமித்திருக்கு வேண்டிய மரியாதைகளும், உபசார மும்செய்து, நல்வரவுகூறி, அவர் ஆஸனத்தில் இருந்தபின் தானும் உட்கார்ந்தார். பிறகு இருவரும் க்ஷேமலாபங்களைப் பற்றிக்கொஞ்சநேரம் பேசிக்கொண்டிருந்தார்கள். கடைசி யாய்த் தசரதர் விஸ்வாமித்திரரை நோக்கி, மரியாதை யாய்த் "தேவரீர் அடியேனிடத்தில் என்ன காரியமாய் விஜயம் செய்தீர்கள்? அந்தக் காரியத்தை நான் கட்டாயம் முடித்துத்தருகிறேன்" என்றார். விஸ்வாமித்திரரும் தன் விஷயங்களை எல்லாம் தசரதருக்குக் கூறி, யாகசம்ரக்ஷ ணார்த்தம் "இராமரைத் தன்னுடன் ஆரண்யத்திற்கு அனுப்ப வேண்டும்" என்று கேட்டுக் கொண்டார்.

5. ராட்சதர்க் கேமன் ராமனே யாவன்.

தசரதருக்கு நெடுங்காலம் புத்திர சந்தான மில்லா மல் "புத்திரகாமேஷ்டியாகம் செய்து, பகவானருளால் நான்கு புத்திரர்கள் பிறந்தார்கள்" என்று முன்னமேயே படித்திருக்கிறோ மல்லவா? அப்படிப் பிறந்த பிள்ளைகளை விஸ்வாமித்திரர் கேட்டபடி கொடுக்க மனம் வருமா? அதிலும் இராமர் மூத்தவர்; பெற்றோரால் மிகவும் நேசிக் கப்பட்டவர்; ஜனங்களால் அதிகமாய்க் கொண்டாடப்

பட்டவர்; வயதோ இளம் பிராயம்; துஷ்ட அரக்கர்களைக் கண்டால் எல்லா மனிதர்களுக்குமே நடுக்கம். அப்படி இருக்கச் சிறு பிராயத்தினராகிய இராமரால் அவர்களை வெல்லவும், எக்யாதியாகத்தைக் காப்பாற்றவும் முடியுமா? அவரை அனுப்பத் தசரதருக்கு மனம் வருமா? இந்த வார்த்தையைக் கேட்ட தந்தை புழுப்போல் துடிக்கிறார். "சுவாமி! இராமனோ சிறு குழந்தை: அவனால் என்ன ஆகும்? அவனைப்பிரிந்து நான் எப்படி இருப்பேன்? இந்த அபாயகரமான காரியத்திற்கு அவனை எப்படி அனுப்புவேன்? அந்தக் குழந்தை வேண்டாம். நானே வேண்டுமானால் நேரில் வருகிறேன். என் சேனைகளோடு வந்து, யாகத்திற்கு எவ்வித இடையூறுமில்லாமல் முடித்துத் தருகிறேன். இராமன்மட்டும் இங்கு இருக்கட்டும்" என்றார். "எது கேட்டாலும் கொடுக்கிறேன்" என்று சொன்ன நீர் இப்போது உம்முடைய பேச்சிலிருந்து தவறலாமா? சொன்னசொல் தவறுவது மனிதர்களுக்கு அழகா? அதிலும் அரசர்களுக்கு அடுக்குமா? இக்ஷ்வாகுவம்சத்தார்களுக்கு ஏற்றதா? கொடுத்தால் இராமரைக்கொடு, இல்லாவிட்டால் நான் போய்வருகிறேன்" என்று விஸ்வாமித்திரர் அதிகக் கோபத்துடன் புறப்பட்டார். அந்தச் சமயம் வசிஷ்டர் தசரதருக்குச் சில தேறுதல் சொன்னார். "அரசே பயப்பட வேண்டாம்; இராமருக்கு எவ்வித வருத்தமும் ஏற்படாது; நன்மையே உண்டாகும்; விஸ்வாமித்திரரால் இராமருக்கு எவ்வளவோ காரியங்கள் ஆக வேண்டும்; அவைகளுக்கெல்லாம் ஏற்றசமயம் இதுதான். ஆகையால் தைரியமாய் அனுப்பும்" என்றார் தசரதரும் ஒருவாறு தேறி, இராமரை அனுப்ப உடன்பட்டார். இராமர் புறப்பட்டால் லக்ஷ்மணர் இருப்பாரா? இராம

ருடன் புறப்பட லக்ஷ்மணரும் தயாரானர். இவ்விருவரையும் தசரதர் விஷ்வாமித்திரருடன் அனுப்பினர். அந்த ரிஷி சிரேஷ்டர் இவ்விரு குழந்தைகளையும் அழைத்துக் கொண்டு, எல்லாரிடத்திலும் விடை பெற்றுக்கொண்டு, மிகுந்த மகிழ்ச்சியுடன் வனம் நோக்கிப் புறப்பட்டார்.

---

6. கௌசிக ருஞ்சில கல்விகற் பித்தார்.

விஸ்வாமித்திரர் இராமரையும், லக்ஷ்மணரையும், அழைத்துக்கொண்டு, அநேக புண்ணிய தீர்த்தங்களையும். ஸ்தலங்களையும் கடந்து, தன்னுடைய ஸித்தாசிரமம் நோக்கிப் புறப்பட்டார். அப்படிப் போகும் வழியில் உள்ள ஒவ்வொரு விசேஷமான நதிகளையும், க்ஷேத்திரங்களையும் பற்றிக் குழந்தைகள் ஆவலோடு தம்மைக் கேட்க, அவரும் உற்சாகமாய் எல்லா விஷயங்களையும் தெளிவாய்ச் சொல்லிக்கொண்டே போனர். ஒழிந்த வேளைகளில் தங்கின இடங்களில் இராமருக்கும், லக்ஷ்மணருக்கும் அபூர்வமான அஸ்திர வித்தைகளை எல்லாம் கற்றுக் கொடுத்தார். தான் அரசராய் இருந்த காலத்தில் அறிந்திருந்த எல்லா விஷயங்களையும் உபதேசித்தார். அரசர்களுடன் போர்புரிய வேண்டிய விதங்களையும், அதற் கேற்ற ஆயுதங்களையும், அவை பிரயோகஞ்செய்யும் விதங்களையும் நன்ருய்ச் சொல்லிக் கொடுத்தார். இப்படி விஸ்வாமித்திரரால் உபதேசிக்கப்பட்ட ஸ்ரீராமரும், லக்ஷ்மணரும் 'பயம்' என்பதே சற்றுமில்லாமல் மஹா பராக்கிரம சாலிகளாய் விளங்கினர்கள். "துஷ்ட அரக்கர்களை வதைக்கவேண்டும்; உலகத்திற்கு நல்ல க்ஷேமத்தை உண்டாக்க வேண்டும்"

என்று உறுதி சொல்லிக்கொண்டே விஸ்வாமித்திர மகரிஷியுடன் போய்க்கொண்டிருந்தார்கள். வழியில் ஒரு கோரமான வனம் எதிர்ப்பட்டது. அந்த வனத்தில் இவர் தங்கும்படி நேர்ந்தது. அதுதான் தாடகாவனம் என்பது.

7. தாடகை மடிய ஸரமொன்று தொட்டார்.

தாடகை என்பவள் ஒரு கொடிய ராட்சஸி. அவள் நடந்து வருவது ஒரு பெரிய மலை பெயர்ந்து வருவதுபோலிருக்கும். மகா கொடியவள். மனிதர்களையும், மிருகங்களையும் கொன்று தின்பவள். ரிஷிகளையும், பெரியோர்களையும் ஹிம்சை செய்து வருபவள். முன்னால் சீரும் செழிப்புமா யிருந்த பிரதேசமானது இவள் கால்வைத்த நாள் முதல் ஆரணியமாய்விட்டது. எங்கு பார்த்தாலும் பாழாயிருக்கிறது. இந்த வனத்திற்கு யாராவது தப்பித் தவறி வந்துவிட்டால் அதுவே அவர்களுக்கு முடிவு. தாடகைக்கு இரையாக வேண்டுவதுதான். இந்த வனத்திற்குத்தான் இப்போது விஸ்வாமித்திரரும், இராமரும் லக்ஷ்மணரும் வந்திருக்கிறார்கள். தாடகையின் ஸாஹஸங்களையும், துஷ்ட கிருத்தியங்களையும் அவளை வதைப்பதால் உண்டாகும் பெருமையையும் இராமருக்கு விஸ்வாமித்திரர் எடுத்துச் சொன்னார். "அவள் பெண்பால் என்று இரக்கப்பட்டு, சும்மாவிட்டுவிடக்கூடாது" என்றார். இந்தச் சமயத்தில் தாடகையும் இங்கு வந்து 'நல்ல இரை அகப்பட்டது' என்று ஆரவாரம் செய்தாள். இராமரையும், லக்ஷ்மணரையும், நோக்கி வந்தாள். இராமர் பார்த்தார், "முதன் முதல் பெண்ணோடு சண்டையிடலாமா" என்று நினைத்

தார். பிறகு 'நாம் சும்மா விடக்கூடாது' என்றெண்ணி, சண்டைக்காயத்தமானர். இருவருக்கும் அகோரயுத்தம் நடந்தது, தாடகை மஹா மாயாவி; அவளுடன் யுத்தம் செய்வது சுலபமல்ல. இருந்தாலும் இராமர் சற்றேனும் சலிக்கவில்லை; கடைசியாய்த் தன்னுடைய ஒரே பாணத்தால் அவ் அரக்கியைக் கொன்றுவிட்டார். பிறகு இம்மூவரும் பிரயாணஞ்செய்து முடிவில் விஸ்வாமித்திரர் யாகம் செய்ய உத்தேசித்திருக்கும் ஸித்தாசிரமம் சேர்ந்தார்கள். சேர்ந்த மறுநாளே இவ்விரு குழந்தைகளையும் காவல் வைத்து விட்டு, விஸ்வாமித்திரர் யாகத்தை ஆரம்பித்தார்.

8. யாவரும் புகழ யாகம் முடிந்தது.

"எந்த மஹான்கள் என்ன காரியம் செய்யப்போகிறார்கள்! நாம் எப்போது அந்தக் காரியத்தைக் கெடுக்கலாம்" என்று சதாராட்சதர்கள் அலைந்துகொண்டேஇருப்பார்கள். விஸ்வாமித்திரர்யாகம்செய்வதைத்தெரிந்து அநேக கொடிய ராட்சதர்கள் அதைக்கெடுக்க வந்துவிட்டார்கள். மஹா துஷ்டர்கள்; நரமாம்சபட்சணிகள்; மாயத்தில் வல்லவர்கள். இவர்களுக்குத்தலைவர்கள் "சுபாகு, மாரீசன்' என்ற இரண்டு துஷ்டர்கள்; யாகம் ஆறு நாள் நடக்கவேண்டும்; யாகம் முடியும் வரை இவர்களால் எவ்வகைக் கெடுதியும் நேரிடாமல் ராமரும், லக்ஷ்மணரும் பாதுகாத்து வரவேண்டும். முதல் ஐந்து நாள் வரை ஒன்றுமில்லை. ஆறுவது நாள் "எந்தச் சமயத்தில் இவர்கள் இங்கு வந்து விடுவார்களோ" என்று இராமலக்ஷ்மணர்

திறந்த கண் மூடாமலே காத்துக்கொண் டிருக்கிறார்கள். ஆறாவது நாள் அரக்கர்கள் மறைந்திருந்து, குடம் குடமாய் யாகசாலையில் இரத்தத்தை வாரி இறைக்க ஆரம்பித்தார்கள். பார்த்தார் ராமர்; "இனி நாம் சும்மா இருக்கலாகாது" என்று அஸ்திரங்களை விடத்தொடங்கினார். ஓர் அஸ்திரம் மாரீசனை வெகுதூரத்திற் கப்பால் சமுத்திரத்திற் கொண்டுபோய்த் தள்ளிவிட்டது. இன்னொரு அஸ்திரம் சுபாகுவைக் கொன்றுவிட்டது. இந்த யுத்தத்தில் அநேக அரக்கர்கள் மாண்டார்கள். மிஞ்சின சிலர் ஓடிப்போய்விட்டார்கள். யாகமும் விக்கினமின்றி முடிந்தது. விஸ்வாமித்திரருக்கும், மற்றுமுள்ள ரிஷிகளுக்கும் இராம லக்ஷ்மணர்கள் பேரில் அதிக ஸந்தோஷம். எல்லோரும் இவ் இருவரையும் கொண்டாடினார்கள். யாகம் முடிந்த பிறகு விஸ்வாமித்திரரும், மற்ற ரிஷிகணங்களும் மிதிலா நகரம் போகவேண்டியிருந்தது. இராம லக்ஷ்மணர்களையும் கூடவே அழைத்துக்கொண்டு புறப்பட்டு விட்டார்கள்.

---

9. கல்லா யிருந்து கன்னிகை யானாள்.

இவர்கள் மூவரும் மிதிலையை நோக்கிப்புறப்படும் போது வழிநடுவில் ஒரு வனத்தில் புகுந்தார்கள். அவ் வனந்தான் கௌதமர் வனம். அங்குள்ள ஒருகற்பாறையின் மேல் இராமர் பாதம் பட்டது. உடனே அப்பாறைபிளவு பட்டு, அதிலிருந்து ஒரு அழகிய கன்னிகை வெளிவந்து, அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு முதலிய பெண்களுக் குரிய குணங்கள் பொருந்த ஓர்புறம் ஒதுங்கி நின்றாள். பார்த்தார் இராமர்; அவருக்கு ஆச்சரியம் உண்டாயிற்று.

விஸ்வாமித்திரரை நோக்கினர். "இது என்ன காரணம்" என்று வினவினர். அப்பொழுது விஸ்வாமித்திரர் "இராமா! இந்த அம்மாள் பெயர் அகலிகை; கௌதம ரிஷியினுடைய பத்தினி; முன்னர் ஒரு நாள் இந்திரன் கௌதமரைப் பார்க்கச் சென்றிருந்தான். அத்தருணம் இந்த அம்மாளைப் பார்த்து இச்சித்தான். அன்று இரவே ரிஷி கிரகஞ் சென்று, அவரை ஏமாற்ற எண்ணி, சேவல் ரூபமெடுத்துக் கூவினன். 'பொழுது விடிந்தது' என்று எண்ணி, கௌதமர் ஸ்நானஞ் செய்யப் புறப்பட்டார். இந்திரன் ரிஷி வடிவுடன் உட்பிரவேசித்தான். கங்கை உறங்கியதைக்கண்டு, ரிஷி வெகுண்டு திரும்பினர். இவர்கள் இருவரும் இருப்பது பார்த்து, ஞானதிருஷ்டியாலறிந்து, 'இந்திரா! உன் உடம்புமுழுதும்நீ இச்சித்தது ஆயிரம் பெறுவாயாக' என்று சபித்தார். இந்த அம்மாளை 'நீ கற்பாறை யாகுக' என்ருர். இந்த அம்மாள் தன் பர்த்தாவை வணங்கி 'விமோக்ஷணம் என்ருே' எனக் கேட்கத் 'தசரத புத்திரரான ஸ்ரீ இராம லக்ஷ்மணர் அவ்வழி செல்லுங்கால் இராமர் பாதம் பட்டதும் விமோக்ஷணம் ஆம்' என்ருர். அதன் படியே ஆயிற்று. அங்கு தாடகை சம்ஹாரத்தில் உன் கைவண்ணம் கண்டேன். இங்கு உன்கால் வண்ணம் கண்டேன்" என்ருர். அகலிகை ஸ்ரீராமரை வணங்கி நின்ருள். அனைவரும்சந்தோஷப்பட்டுக் கொண்டு, கௌதமரை அழைப்பித்து, அவர் பத்தினியை ஒப்புவித்தார்கள். கௌதமர் மகிழ்ச்சிகொண்டு, இராம, லக்ஷ்மணனை ஆசிர்வதித்துத் தன் மனைவியைக் கூட்டிச்சென்ருர். பின்னர் இவர்கள் மற்றய வனங்களையும் கடந்து, செல்வம் பொருந்தியுள்ள மிதுலைமாநகர் அடைந்தார்கள்.

10. ஜெகரட் சகியே சீதா தேவி.

மிதிலா நகரம் என்று ஒரு நகருண்டு. அதில் ஜநகர் என்று ஓர் அரசர் ஆண்டு வந்தார். அவருக்கு இரண்டு பெண்கள். அவர் தம்பி குசத்துவர் என்பவர். அவருக்கும் இரண்டு பெண்கள். நால்வர் பெயரும் சீதை, ஊர்மிளை மாண்டவி, சுதகீர்த்தி என்பவர்கள். சீதை ஜனகருக்குப் பூமியிலிருந்து கிடைத்த பெண். ஒருகாலத்தில் ஒரு யாகம் செய்வதற்காக ஜனகர் பூமியை உழுதார். அப்போது உழவுசாலில் ஒருபெண் அகப்பட்டாள். உழவுசாலில் அகப்பட்டது பற்றிச் சீதை என்று பெயரிடப்பட்டது. ஜனகர் சீதையை மிகவும் பிரியத்தோடு வளர்த்து வந்தார். ஜனகர் மகள் ஆனதுபற்றி ஜானகி என்றும் பெயர். மிதிலா நகரத்தரசன் மகள் ஆகையால் மைதிலி என்றும் பெயர். சீதைக்கும், அவள் தங்கைமார்களுக்கும் விவாக வயது வந்துவிட்டது. ஜனகரிடம் சிவபிரானுடைய வில்லொன்று இருந்தது. அந்த வில்லை எடுக்கவாவது, எடுத்து வளைக்கவாவது யாராலும் முடியாது. "அதை எடுத்து வளைப்பவருக்குத்தான் சீதையை விவாகஞ்செய்து கொடுப்பது" என்று ஜனகர் பிரதிக்கினை செய்திருந்தார். அதை எடுத்து வளைக்க ஒரு முகூர்த்த நாளும் ஏற்படுத்திஇருந்தார். சகல தேசத்து அரசர்களையும் அழைத்திருந்தார். ரிஷிகளையும் பெரியோர்களையும் வரும்படி வேண்டிக்கொண் டிருந்தார். 'இந்தக் காரியத்தை முன்னிட்டுத்தான் விஸ்வாமித்திரர், ரிஷிகணங்களுடன் ஸ்ரீராமரையும் லக்ஷ்மணரையும்உடன் அழைத்துக்கொண்டு, மிதிலாநகரத்திற்குப் பிரயாணமானார்" என்பதாய் முன்னமேயே சொல்லி இருக்கிறோம்.

11. சிவதனு வொடித்தால் சீதை கிடைப்பாள்.

"பெரிய அரசர் வீட்டுக்கலியாணம். அதிரூபசௌந்தரியவதியான பெண், பெண்ணை நாம் அடையலாம்" என்று ஆசைப்பட்டு வந்தவர்கள் அநேகர். வேடிக்கை பார்க்க வந்தவர்கள் அநேகர். தம்பதிகளைக் கண்டு களித்து ஆசிர்வதிக்க வந்தவர்கள் அநேகர், 'பூரி எதேஷ்டமாய்க் கிடைக்கும்' என்று எண்ணி வந்தவர் அநேகர். 'சம்பிரமமாய் இராஜபோஜனம் சாப்பிடலாம்' என்று வந்தவர்கள் அநேகர். ஜனகருடைய விஸ்வாசத்தையும், பெருமையையும் பாராட்டி வந்தவர்கள் அநேகர், 'சிறந்த வில்லாளி யார் பார்ப்போம்' என்று வந்தவர்கள் அநேகர். மிதிலா நகரமெங்கும் ஜனங்கள் கூடிவிட்டார்கள். ரிஷிகளும், சிஷ்யர்களும் ஒருபுறம். மன்னவர்களும், பரிவாரங்களும் ஒருபுறம். அவரவர்கள் அந்தஸ்திற்கேற்றவாறு அமைக்கப்பட்ட இடங்களில் எல்லோரும் அமர்ந்திருக்கிறார்கள். அநேக சிறந்த வீரர்கள் சேர்ந்து, வில்லைத் தூக்கிக்கொண்டு வந்து, சபை மத்தியில் போட்டார்கள். வில்லைப்பார்த்ததும் 'சீதை வேண்டாம்' என்று வெறுத்தார் பலர்; வில்லைத் தொட்டுப்பார்த்துச் 'சீதை நமக்குக் கிட்டாள்' என்றுசொன்னார் பலர். வில்லைத்தூக்கமுயன்று முடியாமல் சீதையின்மேல் ஆசையைத் துறந்தார் பலர். இப்படியாக, வில்லை எடுத்து வளைக்கவல்ல வீரர் எவரும் அச்சபையில் காணப்படவில்லை. அச்சமயம் ரிஷிகள் கூட்டத்திலிருந்து இரண்டு வாலிபர்கள் கம்பீரமாய் இளஞ்சிங்கங்களைப் போன்று சபைநடுவில் வந்து நின்றார்கள்.

அவர்கள் தாம் விஸ்வாமித்திரரால் அழைத்து வரப்பட்ட இராமரும், லக்ஷ்மணரும். இதற்காகத்தான் அவர்களை இங்கே அழைத்து வந்தார். மற்ற அரசர்களால் முடியாமற் போனதும், இராமர் விஸ்வாமித்திரருடைய நோக்கம் அறிந்து, சபை நடுவே வந்து நின்றார். லக்ஷ்மணரும் கூடவே வந்துநின்றார். அங்கிருந்த எல்லோரும் இவர்களைக் கண்டு "இவர்களா வளைப்பவர்கள்" என நினைத்தார்கள் சிலர் அதிசயப்பட்டு விழித்தார்கள். சிலர் நகைத்தார்கள்

12. வில்லை ராமர் விரைவி லொடித்தனர்.

சபைநடுவே வந்து நின்ற இராமர் தன் தம்பியிடம் தன் வில்லைக்கொடுத்தார்; கீழே கிடந்த வில்லை எடுத்தார், வளைத்தார்; ஒடித்தார், எல்லாம் ஒரு நொடிவேளை. அரசர்களும், மற்ற எல்லோரும் இராமருடைய பராக்கிரமத்தைக் கண்டு வியந்தார்கள். இவர் பலத்தைக்கண்டு பிரமித்தார்கள். பிறகு விஸ்வாமித்திரர் இராமருடைய பூர்வோத்திரத்தை எல்லாம் எடுத்துச் சொன்னார். தசரதருக்கு ஜனகர் தூதனுப்பினர். அவரும் வந்துசேர்ந்தார். எல்லோருக்கும் அத்தியந்த சந்தோஷம். தசரதர் குலமும், ஜனகர்குலமும் மகா மேன்மையான குலங்கள். தசரதருடைய நான்கு குமாரர்களும், விவாஹத்திற்கு ஏற்ற வயதுவாய்ந்தவர்கள். ஜனகர்வசத்திலும் நான்கு கன்யாரத்தினங்கள்; கல்யாணத்திற்குத் தகுந்த வயது வந்தவர்கள். முதற்பெண் சீதைக்கோ சிவதனுஸால் இராமர் கணவராய் ஏற்பட்டார். மற்றவர்களுக்கு இரண்டு சம்பந்திகளும் மனமொத்து, ஏற்பாடு செய்துகொள்ளவேண்டியதுதான். சீதாகலியாணம் வெகு



ஸ்ரீராமர் வில் வளைத்தல்.

வைபவமாய் நடந்தது. அதே ஸமயத்தில் மற்ற மூன்று சகோதரிகளுக்கும் கலியாணம் நடந்தது. ஊர்மிளையை இலக்ஷ்மணர் மணந்தார். மாண்டவியைப் பரதர் பாணிக்கிர கணம் செய்துகொண்டார். சுதகீர்த்தியை ஸத்துருக்கனர் திருமணம் புரிந்தார். கலியாண சம்பிரமங்கள் அதிக விமரிசையாய் நிறைவேறின. பிறகு ஸம்பந்திகள் உபசாரம் சொல்லிக்கொண்டார்கள். தசரதர் விஸ்வாமித்திரர் அனுமதியின்பேரில் தன் பிள்ளைகளையும், மருமக்கள் மாரையும் அழைத்துக்கொண்டு, அயோத்தி நகரம் புறப்பட்டார்.

---

13. பரசு ராமரே பங்கப் பட்டனர்.

இராம லக்ஷ்மணுள் முன்னும், தசரதர் முதலானோர் அவர்களுக்குப் பின்னும் முறையே வரிசை வரிசையாய் இரதத்தின் மீது ஆரோகணித்துக் கொண்டு, மிக்க விமரிசையாயும், மிகுந்த சந்தோஷமாயும் வருகிற தருணம், இம் முழக்கத்தைக் கேட்டறிந்த பரசுராமர் கையிலேந்திய சிலையுடன் இவர்கள் முன்வந்து நின்றார். இவரைக் கண்டதும் தசரதர் மனக்கலக்கங் கொண்டு, மெய்பதறி, பயம் அதிகரித்து, இரதத்தை விட்டுக் கீழே இறங்கிவந்து, பரசுராமரை வணங்கி "எனக்கும், என் அருமைப் பிள்ளைகளுக்கும் உயிர்ப்பிச்சை தந்தருளல் வேண்டும்" என்று பிரார்த்தித்தார். அவர் பரிதாப மொழிக்குச் செவி கொடாது, சரேரென்று முகத்தைத்திருப்பி, ராமரைப்பார்த்து, "ஹே ராமா! ஆதியில் வடமேருகிரியின்கண் ஒரு ஜோதியுண்டாய் அதிலிருந்து, இரண்டு அதிபலம் பெற்ற வில்லுகள்

ஜனித்தன. தேவராதியர் கூடி, "இவ்விரண்டுவில்லையும் உபயோகிக்கத்தக்க யோக்கியமுள்ளவர் பரமனும், விஷ்ணுவுமே" எனத்துணிந்து, ஒரு வில்லைப் பரமனுக்கும், ஒரு வில்லை விஷ்ணுவுக்கும் அளித்தார்கள். அந்தச் சமயமே பிரமன், "இவ் விரண்டு வில்லிலும் வலியுற்றது எது" என்று அறியும் பொருட்டு இருவருக்கும் சண்டை மூட்டுவித்தனன். இவர் வெகுகாலம் வரை வில் யுத்தம் புரிந்து, விஷ்ணுவின் வில்லினால் பரமன் வில் முறிபட்டுவிட, அவர் அதைப் பூலோகத்தி லெறிந்துவிட்டார். அது மிதிலையின் கண் வந்து கிடந்தது. பின்னர் தேவர்கள் இருவரையும் சமாதானப்படுத்த, விஷ்ணு தமது வில்லைப் பூலோகத்தில் தவம் பண்ணிக்கொண்டிருந்த "இரிசிக' ரிஷிக்குக்கொடுத்துச் சென்றார். அவர் அந்த வில்லை என் தந்தைக்களிக்க, என் தந்தை எனக்குக் கொடுத்துவிட்டனர். இப்போது அந்த வில் இதோ என்கையில் இருக்கிறது. சூரிய குலத்தரச பரம்பரையில் "கார்த்தவீரியன்" என்ற ஓர் அரசன் என் தந்தையைக் கொன்றதால் யான் சூரியகுலத்தையே கருவறுப்பதாய் விரதம் பூண்டு, அவ்வண்ணமே செய்து வருகிறேன். ஆனால் கங்கணக்கையுடன் உள்ளவர்களைக் கொல்வது மகாபாதகமானதால் அவர்களை ஒன்றுஞ் செய்வதில்லை. இஃதறிந்த உன் தந்தையாகிய இந்தத் தசரதன் பதினயிர வருடமாய்ப் பதினயிரம் ஸ்திரீகளை விவாகஞ் செய்துகொண்டு, நான் வரும்போ தெல்லாம் கங்கணக்கையோடிருந்தான். ஆகவே அவன் இதுவரை உயிர்வைத்திருக்கிறான். பெண்பாலான தாடகையை வதைத்ததாலும், இற்றுப்போன வில்லை எடுத்து வளைத்ததாலுமோ நீ இவ்வளவு கெருவங் கொண்டு, சற்றும் மனமஞ்சாது ஜயபேரிகை முழக்கிக்கொண்டு, இங்ஙனம் வந்தாய்? இதோ

இந்த வில்லைத் தருகிறேன். வாங்கி வளைப்பாய்; அல்லது இது சமயமே என்னுடன் யுத்தத்திற்கு வருவாய்" என்ருர். இது கேட்ட இராமர் புன்னகை கொண்டு, "நீர் தவசி; நீர் வில் வைத்துக்கொண்டிருப்பது பொருந்தாது; இது கொண்டே நீர் முறை பிசகியவ ராவீர்; உம்மோடு யுத்தம் தொடங்குவது எனக்கழகன்று. ஆகவே உமது கையிலுள்ள அந்த வில்லைத்தாரும்" என்று வாங்கி, அதை இரதத்திலிருந்த படியே வளைத்து, அதிலோர் நாண் ஏற்றி, 'இதற்கிலக்கெது?' என்ருர். பார்த்தார் பரசுராமர்; உள்ளம் கலங்கிற்று; மெய்நடுங்கினர்; சாஷ்டாங்கமாய் விழுந்தார்; நமஸ்காரம் பண்ணினர். 'நான் தவசி; என்னைக் கொல்லுவது பாவம்; எனக்கு உயிர்ப்பிச்சை தந்தருள வேண்டும். ஆனல் 'இந்த நாணுக்கிலக்கெது' என்று கேட்டாய்! இது வரை நான் செய்து வந்த தவமே இதற்கிலக்காகும்" என்று கெஞ்சி நின்ருர். உடனே ராமர் "ஹே பரசுராமரே! நீர் தவசியாயிருந்தும், தான் என்ற ஆணவம் மிஞ்சினீர். ஆகவே என்னல் பங்கமடைந்தீர்; இனி நீர் மீண்டும் தவம்புரியக் கடவது; உமது தவத்தின்மீது இப்பாணத்தைப் பிரயோகிக்கிறேன்" என்று அதை எய்தார். அது பரசுராமரின் தவத்தைச் சேதித்துச் சென்று கடலில் மூழ்கிற்று. பின்னர் வருண பகவானை நினைத்து, அந்த வில்லை அவன்பால் நீட்டினர். உடனே வருணன் அதை வாங்கி வைத்துக்கொண்டான். தசரதர் ஆனந்தக்கடலில் மூழ்கினர். உள்ளம் பூரித்தார். எல்லோரும் அளவுகடந்த சந்தோஷம் அடைந்தவராய்க் குதூகலமுற்று அயோத்திமா நகரம் போய்ச்சேர்ந்தார்கள்.

---

14. நமதுசெயலால் நடப்பதொன்றில்லை.

அரசர்கள் தங்கள் மூத்த குமாரர்களுக்குச் சரியான வயது வந்து விட்டால் அவர்கள் இராஜ்ஜிய காரியங்களை நன்குய்த் தெரிந்து கொள்வதற் காகவும், பெரிய அரசர் பகவத்தியானத்தில் தமது காலத்தைக் கழிப்பதற்காகவும் ஜேஷ்ட புத்திரர்களுக்கே பட்டங்கட்டித் தாங்களும் சகாயமாயிருந்துகொண்டு, குமாரர்கள் மூலமாய் ராஜகாரியங்களைப் பார்த்துவரும் சம்பிரதாயம் ஒன்றுண்டு. அவ்விதம் முடிசூட்டப் படுவதற்கு “யுவராஜ பட்டாபிஷேகம்” என்று பெயர். அவ்வாறு யுவராஜாவாக இருந்துகொண்டு, சகல பொறுப்புக்களையும் தாமே வகித்துத் தமது காரியங்களைப் பார்த்து வரும்படியான வயது இராமருக்கு வந்து விட்டது. அவருக்கு அவ்விதமாய்ப் பட்டம் சூட்ட ஓர் சுபதினமும் வசிஷ்டரால் குறிக்கப்பட்டது. எல்லோருக்கும் இந்த விஷயத்தில் அதிக சந்தோஷம். இராமர் அரசராவதென்றால் ஊரெல்லாம் கொண்டாட்டம். ஜனங்கள் எல்லோரும் தங்கள் தங்கள் வீடுகளையும், தெருக்களையும் பெருக்கி, மெழுகிக் கோலமிட்டு, வாழை, கமுகுமுதலிய மரங்களாலும், பலவகைப்பட்ட தோரணங்களாலும், கொடிகளாலும் சிங்காரித்திருந்தார்கள். சிறந்த ஆடையாபரணங்களணிந்து ,இராமர் பவனி வருவதையும், மகுடம் புனைவதையும் கண்டு, ஆனந்திக்கவும், வேடிக்கை பார்க்கவும் தயாராய் இருந்தார்கள். அநேக சிற்றரசர்களும் இச் சுப முகூர்த்தத்தைக் கண்டுகளிக்கக் கூடியிருந்தார்கள். அயோத்தியாவே வெகு ஆடம்பரமாய் இருந்தது. பட்டாபிஷேகம் நடக்க வேண்டியதுதான் பாக்கி.

எல்லாம் தயாராய்விட்டன. வசிஷ்டர் முதலிய ரிஷிகளும், சுமந்திரர் முதலிய மந்திரிமார்களும் இராமரைக் கோலா கலமாய் அழைத்துவரப் புறப்பட்டு விட்டார்கள். இவ் உலகில் நம்மிஷ்டப்படியே காரியங்களெல்லாம் முடிகின்றனவா? நாமொன்று நினைக்கத் தெய்வமொன்றாக்கி விடுகின்றதே! என்ன செய்யலாம்? இவ்வளவுதான் ஜனங்கள் கொடுத்து வைத்தது. இராமபிரான் பட்டாபிஷேகத்திற்கும் ஓர் 'இடையூறு, அது ஸமயத்தில் ஏற்பட்டுவிட்டது.

15. கரைப்பார் கரைத்தால் கல்லுங் கரையும்.

"கைகேயி என்றொரு மனைவி தசரதருக்குஉண்டு" மென்று படித்திருக்கின்றோ மல்லவா? அவள் மகன் பரதன் என்பதும் தெரியுமே? கைகேயிக்கு இராமர் பேரில் பிரியந்தான். இராமருக்குப் பட்டாபிஷேகம் நடப்பதில் அத்தியந்த சந்தோஷந்தான். இருந்தாலும் அவளிடத்தில் மந்தரை என்னும் பெயருடைய ஒரு கூனி தாதியாயிருந்தாள். அவளுக்கு இராமரைக் கண்டால் ஆகாது. அவர் பேரில் மிக்க வெறுப்புள்ளவள். இராமருக்குப் பட்டாபிஷேகம் நடப்பது அவளுக்குச் சுத்தமாய் இஷ்டமில்லை. கைகேயியிடம் வந்து என்னென்னமோ உபதேசங்கள் செய்து, அவள் மனதைக்கலைத்து, "அவள் மகன் பரதனுக்குப் பட்டம் வரும்படிக்கும், இராமர் வனத்திற்குச் செல்லும்படிக்கும் தசரதரைக் கேட்கும்படி" சொல்லிச் சரிப்படுத்திவிட்டாள். "கரைப்பார் கரைத்தால் கல்லுங் கரையும்" என்றபடி கைகேயியின் புத்தி மாறி விட்டது

"தன் மகன் பரதன் அரசாளவும், தான் எல்லாரையும் விட உயர்ந்த அந்தஸ்தில் பெரிய ராணியாயிருக்கவும்" எண்ணிவிட்டாள். வாய்கூசாது தசரதரை இரண்டு வரம் கேட்டாள். முன்னொரு ஸமயம் கைகேயி தசரதர் மனத்திற்கிசைந்த ஓர் நற்காரியம் செய்திருந்தாள். அதற்காகக்கைகேயிக்கு இரண்டு வரங்கள் கொடுப்பதாகச்சொன்னார். அவ்வரங்களைத் தனக்கு வேண்டும்போது கேட்டுக்கொள்வதாகச் சொல்லியிருந்தாள். இந்தச்சமயம் அந்தஇரண்டு வரங்களையும் கேட்டாள். "இராமர் 14-வருஷம் வனவாசம் செய்யவேண்டும் என்பது ஒன்று; பரதன் பட்டமாளவேண்டும் என்பது மற்றது. என்ன செய்வார் தசரதர்? சொன்னசொல் தவறக்கூடாதே! இராமரைவிட்டு அரைக்கணமேனும் பிரிந்திருப்பாரா? இந்தப் பேச்சைக்கேட்டு, மூர்ச்சை யடைந்து விழுந்தார். அந்தச்சமயம் தகப்பனைரைப் பார்க்க இராமர் வந்தார். இருக்கும் அலங்கோலத்தைக்கண்டார். 'காரணமென்ன' வென்று கேட்டார். கைகேயி இராமரைப் பார்த்து "நீ பதினான்கு வருஷகாலம் வனவாசம் செய்ய வேண்டுமென்பதும், பரதன் பட்டம் ஆளவேண்டுமென்பதும் உனதுதந்தையார் அபிப்பிராயம். அவ்விஷயம் ஞாபகத்திற்கு வரவே மூர்ச்சை அடைந்தார்" என்று சொன்னாள். இதுகேட்ட இராமர் பரமசந்தோஷமடைந்தார்; சிற்றன்னையை நமஷ்காரம் பண்ணிக்கொண்டார். "அம்மா! இது பிதாவின் உத்திரவுமட்டுமே யல்லாது, தாங்களும் உத்திரவளித்தீராகவே அடியேன் கிருதார்த்தமடைந்தேன்" என்று திரும்பினார். பெரியோர்களால் நிச்சயித்த பட்டாபிஷேக முகூர்த்தமே இராமர் வனவாஸத்திற் கென்று ஏற்பட்ட முகூர்த்தமாக மாறிற்று.

———

16. தந்தைதாய் வாக்யமே சகல சம்பத்தாம்.

இராமரோ நற்குணங்களே உருக்கொண்டவர். மாதா பிதாக்களைத் தெய்வமாக மதிப்பவர். அவர்கள் வார்த்தைகளை வேதவாக்காகக் கொள்ளப்பட்டவர். சொந்தத்தாயென்றும், மாற்றுந்தாயென்றும் வித்தியாஸம் பார்க்கப்பட்டவரல்லர். தகப்பனார் அபிப்பிராயம் இதுவென்றுசிற்றன்னை சொன்னாள். தகப்பனார் பேச்சுக்குப் பழுது வரப் பார்ப்பவரா? காட்டுக்குப்போகச் சம்மதித்தார். கௌசலையைத் தேற்றி, அநுமதி பெற்றுக்கொண்டார். குல குரு வசிஷ்டர் முதலிய பெரியோர்களுடைய ஆசீர்வாதங்களை அடைந்தார். லக்ஷ்மணரிடம் சங்கதிகளைச் சொன்னார். அவருக்கு உண்டான கோபத்தை அடக்கிச் சமாதானஞ் செய்தார். லக்ஷ்மணரும் கூடவே வந்திடுவதாகக் கூறினார். சீதையும் கணவனைவிட்டுக் கணப்பொழுதேனும் பிரியேனென்றாள். அவ்விருவரையும் அழைத்துக்கொண்டு, மூவரும் புறப்பட்டு விட்டார்கள். சற்று முன்னால் குதூகலமாயிருந்த அயோத்தியில் எங்கு பார்த்தாலும் அழுகைக்குரல் அதிகரித்து விட்டது. இராமரைப் பிரிய யாருக்குமே இஷ்டமில்லை. எல்லோரும் கூடவே புறப்பட்டார்கள். இராமர் எல்லோரையும் தேற்றி, அங்கு நிறுத்தி, சீதா லக்ஷ்மணசமேதராய்ப் புறப்பட்டுவிட்டார். மூவரும் கங்காநதிதீர்த்தத்தில் ஸ்நானம்பண்ணினார்கள். அந்நதியைக் கடக்க வேண்டி வந்தது. குகன் வந்து சந்தித்தான். அவனுக்குத் தரிசனம் தந்து கடாட்சித்து, அவனது ஓடத்திலேறி, ஆற்றைக் கடந்தார்கள். ஆரணியம் புகுந்தார்கள். தபோ ரிஷிகள் வந்து வரவேற்றார்கள். உபசரணை செய்

தார்கள். இராமர் அவர்களுக்கிதங் கூறி, இனிதே அங்கு தங்கினர். பின்னர் தசாரதர் சற்று மூர்ச்சை தெளிந்து, இராமா! இராமா! என்று கதறலானர். இராமரெங்கே அங்கிருந்தாராஞல் பிதா இரண்டு முறை கூப்பிட வைத்துக்கொள்வாரா? இராமர் வனஞ்சென்றுவிட்ட சங்கதியை அறிந்தார். மறுபடியும் மூர்ச்சையானர். அதுவே தசரதருக்கு முடிவு. இராமர்வனஞ்சென்றார். தசரதர் வானஞ் சென்றார். பெரியோரிட்ட சாபம் வியர்த்தமாகுமா? முன்னொருகால் தசரதர்வேட்டையாடச்சென்றிருந்தார். அன்று இரவு அங்கு தங்கினர். அவர் தங்கியிருந்த இடத்திற் கருகே ஒரு தடாகம். அதில் ஒரு ரிஷி புத்திரன் வந்து ஜலந் திரட்டினன். அந்தச்சத்தங்கேட்ட தசரதர் 'யானை வந்தது' என்று பாணம் போட்டார். அது அவன் மார்பில் தைத்தது. அவன் ஓடோடிவந்து பூமியில் வீழ்ந்து கதறினன். மனுஷ தொனியைக்கேட்ட தசரதர் அங்கேவந்து, 'நீ யார்' என்று வினவ 'ஐயா! நான் ஒரு ரிஷி புத்திரன்' என்றான். ''அந்தோ! பாவம்! யானை வந்து விட்டதென் றெண்ணியே பாணம் போட்டுவிட்டேன்! ஆய்ந்தோய்ந்து பாராது பதற்றத்தால் இது செய்துவிட்டேன்!'' என்று பரிதாபப்பட்டு, மனம் பதறி உபசரணை செய்தார். ''ஐயா! இதற்காகத் தாங்களினிக் கிலேசப்படவேண்டாம். விதியை வெல்ல யாரால் முடியும்? நான் என் தாய் தந்தையரின் தாகத்தின் பொருட்டு ஜலந்திரட்டவந்தவன். வந்த இடத்தில் இப்படி ஆய்விட்டது. அவர்கள் மிகுந்த தாகத்துடன் என்னை எதிர்பார்த்துக்கொண்டிருப்பார்கள் தாங்கள்தயவு செய்து இந்த ஜலத்தைக் கொண்டுபோய், அவர்களுக்குத் தந்து, அவர்கள் அருந்திய பின்னர்என்வரலாற்றைச்சொல்லி அவர்கள் புத்திர சோகத்தையும் தீர்க்க வேண்டியது.

தங்கள் கடமை" என்று தெரிவித்து, அவ்விடத்திலேயே இறந்து போனான். அவ்வண்ணமே தசரதர் ஜலங்கொண்டு சென்று, நடந்த வரலாற்றைத் தம்பதிகளுக்குக்கூற, அவர்கள் புத்திர சோகத்தால் மயங்கி, உள்ளவற்றை ஞான திருஷ்டியாலுணர்ந்து, "அரசே! நீர் இது வேண்டுமென்று செய்ததில்லை. ஆகவே உமக்குக் கடின சாபமிட எமக்கு மனமில்லை. நாங்கள் எப்படிப் புத்திரசோகமுற்று வருந்துகிறோமோ, அப்படியே நீரும் உமதுபுத்திரனைப் பிரிந்து, புத்திரசோகமுற்று மடியக்கடவது" என்று சபித்தனர். ரிஷிகளிட்ட சாபம் எக்காரணம் பற்றியும் தவறவே மாட்டாது. ,மகனைப் பிரிந்து ஆவியிழக்கவேணும், என்று பெரியோரிட்ட சாபம் தசரதருக்கு இந்தச் சமயம் பலித்துவிட்டது. முடிவில் மூர்ச்சையே மரணமாயிற்று.

17. அண்ணனை வஞ்சித்து அரசாளலாமா?

அயோத்தியில் எங்கும் அலங்கோலமாயிருக்கிறது. இவ்வளவுக்கும் பரதர் ஊரிலில்லை. அவருக்கு ஒரு ஸங்கதியுந் தெரியாது. தன் மாமன் ஊரிலிருக்கிறார். தசரதர் இறந்ததும் பரதருக்கு ஆளனுப்பினார்கள். அவரும் அயோத்திக்கு வந்தார். ஸங்கதிகளை அறிந்தார். மெத்த விசனப்பட்டார். தாயாராகிய கைகேயியை நிந்தித்தார். கௌசலையைத் தேற்றினார். தகப்பனார் உத்தரகிரியைகளைச் செய்தார் 'தன் தமையனே பட்டம் ஆளவேண்டும்' என்றார். 'தமையனில்லாமல் நான் அயோத்தியில் இருக்கமாட்டேன்' என்றார். தாயார் செய்த ஏற்பாடுகள்

அவர் மனதை வருத்தின. "தலையிருக்க வாலாடுமா? அண்ணனிருக்க நான் ஆள்வேனோ? எனக்கு எதற்கு இப் பெரியதனம்? யார் ஆட்சியை யார் கைக்கொள்வது? அண்ணனை அழைத்து வருவதே என்கடமை" என்றார். பெரியோர்களுக் கெல்லாம் தனது அபிப்பிராயத்தைத் தெரிவித்தார். 'வீணில் நான் கூனி பேச்சைக்கேட்டு, உலக நிந்தைக் காளானேன்' என்று இப்போது துக்கப் படுகிறாள் கைகேயி. இறுமாப் பெல்லாம் எங்கேயோ தொலைந்து விட்டது. பரதனைக்கண்டு பேசவே பயப்படு கிறாள். இருந்த இடம் தெரியாமல் அடங்கிவிட்டாள். பரதரும் எப்படியாவது "இராமரை அழைத்து வரவேண் டும். அவருக்கே பட்டம் தரிக்கவேண்டும். தான் அவரு டைய தாசனாக உழைத்துவரவேண்டும்" என்று எல்லோ ரிடமும் சொல்லி, வசிஷ்டர் முதலிய பெரியோரை முன் னிட்டுக் கொண்டு, இராமரை நாடிக் காடு சென்றார்.

18. பிதாவாக்யத்திற் பிசகவொண்ணாது.

வனஞ்சென்ற இராமர் தன் பத்தினியோடும், தம்பி யோடும் சித்திரகூடபர்வதத்திற்கு வந்து சேர்ந்தார். 'வன வாசமே மிகவும் யோக்கியமானது' என்று அதிக சந்தோ ஷத்துடன் காலம் கழிக்கிறார்கள். 'நாட்டைவிட்டு, நகரத் தை விட்டு, பட்டாபிஷேகத்தை இழந்து, பந்துக்களைத் துறந்து, ராஜபோகத்தை நீக்கி விட்டோமே' என் கிற விசாரம் சிறிதுமில்லை. இவர்களைக்கண்டு மறுபடி யும் அயோத்திக்கே அழைத்துச் செல்ல வசிஷ்ட ராதிய

பெரியோர்களை முன்னிட்டுக்கொண்டு, பரதரும் அங்கே வந்து சேர்ந்தார். தமயனைக்கண்டார். தந்தையின் கதியை விண்டார். இராமரும் தந்தைக்குச் செய்யவேண்டிய நீர்க் கடனை முடித்தார். பரதர் தமயன் பாதங்களில் சாஷ்டாங்கமாய் நமஸ்கரித்து, அயோத்திக்கு வரவும், ஆட்சியைக் கைக்கொள்ளவும் வேண்டினர். "தகப்பனர் வார்த்தைக்குப் பழுது வரக்கூடாது. குறித்தகாலம் வனத்திலேயே கழிப்பதை விரதமாகக் கொண்டேன். நீ என்ன வேண்டியும் இச்சமயம் நான் வருவது முடியாத காரியம் பதினன்கு ஆண்டுகளும் பூர்த்தியாக வேண்டும். அதன் பிறகுதான் இராச்சியத்திற்கு வருவேன்" என்ருர் இராமர். பரதருக்கோ துக்கம் சகிக்க முடியவில்லை. பெரியவர்களைக்கொண்டும் சொல்லிப்பார்த்தார். யார்தான் சொல்லி என்ன பிரயோஜனம்? "பதினன்கு வருஷம் வனவாஸம் செய்வதையே விரதமாகப்பூண்டேன். எனது தந்தையார் வாக்குத்தத்தம் நிறைவேற்றுவ தல்லவோ என் கடமை? என் தகப்பனர் மாண்டாரென்று நானும் கொண்ட விரதம் மாறலாமா? மாட்டேன்" 'என்றுமறுத்துவிட்டார். என்ன செய்வது! அவருடைய விரதத்திலிருந்தும் விலக்க வசிஷ்டர் முதலிய மஹான்களுக்கு இஷ்டமில்லை. முக்காலமு முணர்ந்த மூதறி வாளரன்ருே அவர்கள்! இந்த விரதந்தானே உலகத்திற்கு க்ஷேமத்தை உண்டாக்கப் போகின்றது? ஆகையால், இராமர் சொன்னதற்கு இவர்கள் ஒன்றும் பதிலுரைக்க வில்லை. பார்த்தார் பரதர். "ஆயினும் 'தமையன் ராச்சியத்தைத் தம்பி அபகரித்தான்' என்கிற அபக்கியாதி எனக்கு வேண்டாம். அயோத்திக்கு நான் போகவே மாட்டேன். அண்ணு! நானும் தங்களுடன் இங்கேயே இருந்துவிடுகிறேன்" என்ருர்.

---

19. பாதுகைவைத்தே பாரராசாள்வேன்.

வசிஷ்டர், சுமந்திரர் முதலிய பெரியோர்களெல்லோரும் பார்த்தார்கள். "இதேது! அநர்த்தம் விளைந்துவிடும் போலிருக்கிறது! என்னசெய்யலாம்" என்று யோசித்துப் பரதனைத்தேற்றினர்கள். இராமரைப்பார்த்து "அயோத்தி அரசற்றுப் போகும் காலம் வரவேகூடாது. அதை நீர் தான் எப்படியாவது விலக்க வேண்டும். உம்முடைய விரதமும்கெடாமல், பரதரும் பழிக்காளாகாமல் ஏதாவது ஒரு ஏற்பாடு செய்யவேண்டும்" என வேண்டினர்கள். பரதர் தமயனை நோக்கி, அதிக விசனத்துடன் 'நான் அரசாளவேமாட்டேன்' என்று உறுதியாய்ச் சொல்லி, மீண்டும் தமயன்பாதங்களில்நமஸ்கரித்து 'நீங்கள்கொண்ட கொள்கையிலிருந்து தவறக்கூடாதென்று உறுதி கொண்டிருந்த போதிலும், உங்களுடைய பாதுகைகளை யாவது அளிக்கவேண்டுமென்றும், அவைகளை முன்னிட்டு உங்கள் பேரால் நான் ராஜகாரியங்களைப் பதினன்கு வருஷகாலம் பார்த்து வருவே னென்றும், அந்தக்கெடு தீர்ந்ததும் தாங்கள் வராவிடில் நான் தீயிற்குளித்து, உயிர் துறப்பது உறுதி' என்றும் சொன்னர். எல்லோரும் அதற்குச்சம்மதித்தார்கள். பரதரும் இராமருடைய பாதுகைகளைப்பெற்றுத் தம் சிரசில் தாங்கிப் பெரியோர்களையும் அழைத்துக் கொண்டு அயோத்திசென்றர். சென்றதும் பாதுகைகளைச் சிம்மாசனமேற்றித் தாம் நந்திக்கிராமம் என்கிற ஊரிலிருந்து, இராஜ்ய காரியங்களை எல்லாம் பார்த்து வந்தார். 'எதையும்விரும்புவதில்லை' என்றுவிரதம்பூண்டு, பதினன்கு வருஷம் எப்போது தீரும்! இராமர் தரிசனம் எப்போது கிடைக்கும்!' என்று நாட்களை எண்ணிக் கொண்டு, ஒரு தவசியைப்போல் நந்திக்கிராமத்திலேயே இருந்து வந்தார்.



ஸ்ரீ ராமவனவாசம் பஞ்சவடி சீதாராம சல்லாபம்.

20. பர்ணசாலையில் பஞ்சவடி வாஸம்.

சீதா லக்ஷ்மணர் ஸமேதராய் இராமபிரான் சித்திர கூட பர்வதத்தை விட்டு நீங்கிப் பஞ்சவடியை நோக்கிச் சென்றார். போகும் வழியில் அத்திரி, ஸரபங்கர், ஸுதீக்ஷணர், முதலிய மகான்களைத் தரிசித்துக்கொண்டு, அவரவர்கள் ஆசிரமங்களில் ஒவ்வொரு நாள் தங்கியிருந்து, விடை பெற்றுச் சென்றார். பின்னர் ஆங்குத் தவஞ்செய்து கொண்டிருந்த அகஸ்தியரைக்கண்டு, அவரால் உபசரிக்கப் பெற்றார். அகஸ்தியர் சிவபெருமானால் தனக்குக் கிடைக்கப்பெற்ற வில்லொன்றும், அம்பறாத்தூணியும் இராமருக்குத் தந்து, சில மந்திரோபதேசமும் செய்துவைத்தார். இப்படி இருக்கும் காலத்தில் ஜடாயு என்ற கழுகு அரசனைக் கண்டு சிநேகம் செய்து கொண்டு, பஞ்சவடியில் லக்ஷ்மணரால் அமைக்கப்பட்ட பர்ணசாலையில் சௌக்கியமாயிருந்துவந்தார். ஜடாயுவும் பஞ்சவடியில் மற்றோர்பக்கம் வாஸம் செய்துகொண்டிருக்கிறது. சீதா பிராட்டி பர்ணசாலையிலிருந்து வீட்டுக் காரியங்களைப் பார்த்துக் கொண்டும், இராம லக்ஷ்மணர் ஷத்விஷயங்களைப் பற்றிப் பேசிக் கொண்டும். வேட்டையாடிக்கொண்டும், ஒழிந்த வேளைகளில் மூவரும் சேர்ந்து வனவாசத்தின் யோக்கியதையைப் பற்றிச் சிலாகித்துக் கொண்டும், முன் சங்கதிகளைச் சற்றேனும் மனதில் கொள்ளாமல் இப்போது அனுபவிக்கும் சுகத்தையே உயர்வாக எண்ணி, உல்லாஸமாய்க் காலங் கழித்து வருகிறார்கள். இராமரும் இங்கு வருமுன்னரே ரிஷிகளால் இராட்சதருடைய உபத்திரவங்களைப் பற்றிக் கேள்விப்பட்டிருந்தாராதலால் "அந்தத் துஷ்டர்களை ஹதம்செய்யவும், பெரியோர்களை ரட்சிக்கவும் இந்தப் பஞ்சவடி வாஸந்தான் நமக்கு ஏற்றது" என்று எண்ணித் தக்க சமயம் வரும்வரையில் மிக்க உல்லாசத்துடன் சமயத்தையே எதிர் பார்த்துக்கொண் டிருந்தார்.

21 சூர்ப்ப நகைமுன் துலங்கினர் மூவர்.

———

நமது பாரதகண்டத்திற்குத் தெற்கே இலங்கை என்று ஒரு பெரிய தீவிருக்கிறது. அக்காலங்களில் அந்தத் தீவை இராவணன் என்ற ஒருதுஷ்ட அரக்கன் அரசாண்டு வந்தான். அவனுக்குக் கும்பகர்ணன், விபீஷணன் என்ற இரண்டு சகோதரர்களும், சூர்ப்பநகை என்ற ஒரு சகோதரியும், இந்திரஜித்து, அதிகாயன் முதலிய பிள்ளைகளும் இருந்தார்கள். இராவணன் திக்குவிஜயம் செய்துவரும் காலத்தில் ஏதோ அவசரப்பட்டு முன் பின் ஆலோசியாமல் தங்கையின் புருஷனைக் கொன்றுவிட்டான். பிறகு தங்கையின் துக்கத்தைப்பார்த்துச் சகியாமல் பஞ்சவடிக்குச் சமீபமாக ஜனஸ்தானம் என்ற ஓர் இருப்பிடம் ஏற்படுத்தி, அவளை அங்கே இருக்கும்படி ஏற்பாடு செய்திருந்தான். கரன், தூஷணன் முதலிய அசுர வீரர்களை அவளுக்குத் துணையாக நியமித்திருந்தான். அவள் நாள்தோறும் எங்கும் சுற்றித் திரிவதும், கண்டமிருகங்களையும், மனிதர்களையும் கொன்று தின்பதும், பெரியோர்களை இம்ஸிப்பதும், யாகங்களைக் கெடுப்பதும், ஊரார்களைப் பாழாக்குவதுமாகவே இருந்து காலங்கழித்து வந்தாள். ஒருநாள் சீதைக்கு ஒழிவாயிருந்த சமயத்தில் இராமர், சீதை, லக்ஷ்மணர் மூவருமாகத் தங்கள் பர்ணசாலைக்கு வெளியே உலாவி, வேடிக்கையாய் வார்த்தையாடிக்கொண்டிருந்தார்கள். அந்தச்சமயம் கொடியவளாகிய சூர்ப்பநகை அங்கே வந்தாள். இந்த மூன்றுபேரையும் கண்டாள். கண் இமை கொட்டாமலே பார்த்தாள். பிரமித்து நின்றுவிட்டாள்.

———

22. சூட்சிபுரிந்த சூர்ப்பநகை பங்கம்.

இவர்களைக் கண்ட சூர்ப்பநகை தன் துஷ்ட செய்கைகளை முற்றிலும் மறந்து விட்டாள். இவர்கள் அழகைக் கண்டு பிரமித்துப் போனாள். "இராமரையாவது, லக்ஷ்மணரையாவது தான் மறுபடியும் விவாகம் செய்துகொள்ள வேண்டும்" என்று உத்தேசித்தாள். இவர்களா அதற்கு இணங்கப் பட்டவர்கள்? மகா மேன்மையான குணம் வாய்ந்தவர்கள். ஏகபத்தினி விரத முடையவர்கள். இவர்களிடம் சூர்ப்பநகை மும்மூர்த்திகளுங்கூடக் கண்டு மயங்கும்படியான கட்டழகு வாய்ந்த ஒரு ஸ்திரீ ரூபமெடுத்துச் சென்றாள். தன் எண்ணத்தை வெளியிட்டாள். இவள் காரியம் முடிவதாகக் காணப்படவில்லை. உடனே இவள் "சீதையை அபகரித்துச் சென்று, பின் தன் காரியங்களைப் பார்த்துக் கொள்ளலாம்" என்று எண்ணிச் சீதையைத் தூக்கிச்செல்ல எத்தனித்தாள். அந்தச் சமயம் 'ஆபத்து வாராமல் தடுக்கும்படி இராமர் லக்ஷ்மணரை நோக்கினார். உடனே லக்ஷ்மணர் சூர்ப்பநகை அவமானப்பட்டு ஓடும்படியாக அவளுடைய மூக்கையும், காதையும் அறுத்துத் துரத்திவிட்டார். சூர்ப்பநகை பயந்து அவமானப்பட்டு, ஓடிச் சேனாதிபதிகளான கரதூஷணர்களிடம் சங்கதிகளைச் சொல்லிமுறையிட்டாள். அவர்கள் உடனே ராச்சதப்படைகளைச் சேர்த்து, இராமரோடு யுத்தத்திற்கு வந்தார்கள். அகோர யுத்தம் செய்தார்கள். அநியாயமாய் அரக்கர்கள், சேனைகளைத் தாங்களே பாழாக்கிக் கொண்டார்கள். சேனாதிபதிகளும் மாண்டார்கள். இங்குக் கர தூஷணர்களைச் சங்கரிக்கும் பொருட்டு முன் பரசுராமரிடத்தில் வாங்கி, வருணனிடத்தில் கொடுத்து வைத்தவில்லைஇராமர்

திரும்ப வாங்கினர். அவ் வில்லைக் கொண்டு கரதூஷணர்களை வதைத்தார். மிஞ்சிய சிலர் இருந்த இடம் தெரியாமல் ஓடிவிட்டார்கள். பிறகு சூர்ப்பநகை இராவணனிடம் சென்று முறையிட்டாள். நடந்த சங்கதிகளை எல்லாம் விவரமாய்ச் சொன்னள். சீதையின் அழகைப் புகழ்ந்தாள். உடனே இராவணன் மிகுந்த கோபமும் தாபமும் அடைந்து, இராமரையும் லக்ஷ்மணரையும் கொல்லவும், சீதையைக் கொண்டுவந்து விடவும் தீர்மானித்தான்.

---

23. மாரீசன் மானுகி மனதைக் கவர்ந்தான்.

மாரீசனைப் பற்றி முன்னமேயே படித்திருக்கிறோம். விஸ்வாமித்திரர் யாகத்தில் இராமருடைய அஸ்திரத்தால் சமுத்திரத்தில் எறியப்பட்டானல்லவா? அது முதல் இராமர்பேர் கேட்டாலும் நடுக்கம். இராமர் கண்முன் வராமல் ஒளிந்திருந்தான். இவனைத் தேடிக்கொண்டு இராவணன் வந்தான். தன்மனதிலிருந்த எண்ணத்தை வெளியிட்டான். மாரீசன் இராமருடைய திறமையை நன்கு அறிந்தவனல்லவா? 'அவர்களை வெல்லமுடியாது' என்று இராவணனுக்குச் சொன்னான். "என்னலா முடியாது" என்று ஆர்ப்பாட்டம் பண்ணினன். சீதையை எடுத்துச் செல்ல வேண்டுமென்று ஆலோசித்தான். இராமர் லக்ஷ்மணர்முன்னிலையிலோ அந்தக் காரியம் செய்யமுடியாது. என்னசெய்வது! பார்த்தான் இராவணன். மாரீசனை மான் வேஷம் போட்டுக் கொண்டு. எப்படியாவது சீதையைவிட்டு அவ் இருவரையும் பிரிக்கும்படி சொன்னன். "ஏது இவன்

நம்மை விடுவதாகக் காணப்படவில்லை, என்னசெய்வது'' என்று பயந்து, முதலில் தன்னுல் முடியாதென்ருன். அப்படிச் செய்யாவிட்டால், இதோ இந்தக்ஷணமே உன்னைக் கொன்று விடுகிறேனென்ருன் இராவணன். பிறகு மாரீசன் யோசித்து "இத்துஷ்டன் காரியத்தைச் செய்யாவிட்டால் இவன் நம்மைக் கொல்வது நிச்சயம். நமக்கு இரண்டு விதத்திலும் சாவு சூழ்ந்துகொண்டே இருக்கிறது. ஆகையால் "இந்தத் துஷ்டனுக்கு அனுகூலம் செய்வது போலு மிருக்கட்டும். புண்ணிய மூர்த்தியாகிய இராமரால் உயிர் துறந்தோ மென்றும் இருக்கட்டும்'' என்று எண்ணி உடனே மாயையால் பொன்போல் மேனியை உடைய ஓர் அழகிய மானுக மாறினுன். சீதையும், லக்ஷ்மணரும், இராமரும் இருக்கும் பக்கம் விளையாடுவதுபோல் இங்குமங்கும் ஓடியாடிச் சஞ்சரித்துக்கொண்டிருந்தான்.

24. வஞ்சித்த மாரீசன் மரணமே யானுன்.

எதிரில் தோன்றும் அழகிய மானைச் சீதை கண்டாள். இராமரும், லக்ஷ்மணரும் வேறு காரியமாயிருக்கும் ஸமயத்தில் சீதைக்குப் பொழுது போக்க வேறு வழியில்லை. "இந்த மானுவது சமீபத்திலேயே இருந்தால், இத்துடனுவது விளையாடிக்கொண்டிருந்து, ஆனந்தமாய்ப் பொழுது போக்கலாம்'' என்று எண்ணினுள். அழகிய பதார்த்தங்களைக் கண்டால் யாருக்குமே ஆசை. அதிலும் 'பெண்களுக்கு ஆசை அதிகம்' என்று உலகத்தில் சொல்வார்கள். அன்றியும் சீதையோ ஏகாங்கியா யிருக்கிருள். 'இம்மானை

எவ்விதமாயாவது பிடித்துத் தரவேண்டும், என்று நாதனை வேண்டினாள். இராமரும் மானின் அபூர்வமான அழகை யும், வினோத விளையாட்டையும் பார்த்து, இதில் ஏதோ சூதிருக்குமென்றெண்ணி, 'இந்தமான் வேண்டாம், என்று பலவிதத்திலும் போதித்தார். சீதையோ கொண்ட எண் ணத்தைமாற்றவில்லை. 'அந்தமானேவேண்டும்' என்று பிடி வாதம் பண்ணினாள். இராமரும் வேறுவழியின்றித் தம் பியைச் சீதைக்குக் காவல் வைத்து, மானைத் தொடர்ந்து சென்றார். மானோ இவரை ஏமாற்றி வெகுதூரம் இழுத்துக் கொண்டு போய்விட்டது. இராமர் பல காரணங்களால் 'இது ஏதோ ராட்சத மாயையாயிருக்கலாம்' என்று நம்பி, மானின் மீது ஓர் அம்பெய்தார். அந்த அம்பு மாரீசனாகிய அம் மானின்மீது பட்டதும் துடிதுடித்து அதன்பிராணன் போகும் சமயத்தில் தன்குரலை ராமபிரான் குரல்போல் மாற்றிக்கொண்டு, 'சீதாலக்ஷ்மணா! அபயம்' என்று பேரிடி போல் அலறிக்கொண்டே வீழ்ந்து தன் உயிரை விட்டது.

25. செல்கின்றீரா தீயில் விழவா?

சீதா, லக்ஷ்மணா! என்கிற சப்தம் நம்முடைய நாதன் சப்தம்போ லிருக்கிறதே! அத்தியாவஸ்தையில் கூப்பிடும் குரல்போல் இருக்கிறதே! மானின் பின் சென்றவர்க்கு என்ன நேர்ந்ததோ! அப்போதே 'இது மாயமான், வேண் டாம்' என்றாரே? 'பெண்புத்தி பின் புத்தி' என்பதை நிரூ பித்து விட்டேனே! அவர் பேச்சைக் கேளாமல் பிடிவா தம் செய்தேனே! ஐயோ! என் பிராணநாதருக்கு என்ன

ஆபத்துவந்துவிட்டதோ? "லக்ஷ்மணரே! நீராவதுசென்று அவர் நிலைமையை அறிந்து, அவருக்கு வேண்டிய உதவி புரிந்து அழைத்து வாரும்" என்றாள் சீதை. லக்ஷ்மணர் "தாயே! தாங்கள் எதற்கும் அஞ்சவேண்டாம். என் தமையனைக் கொல்வாருமுளரோ? அவருக்கு இடையூறு விளைவிப்பாருமெவரோ? இது ஏதோ அரக்கர்கள் சூது. என் அண்ணன் சௌக்கியமாய்வந்து சேருவார். அவர் எனக்கு இட்ட கட்டளையை மீறி, நான் இப்போது அவரை நாடிச் செல்வது உசிதமல்ல" என்றார். இதைக் கேட்டதும் சீதை மிகுந்த வருத்தமும், கோபமும் அடைந்து, "லக்ஷ்மணரே! கொடிய வஞ்சகராகிய அரக்கர்கள் புரிந்த மாயையினால் என் நாதர் நம்மைவிட்டுப் பிரிந்து, தனிமையாய் உயிர் துறக்க நேர்ந்தும், உமது மனம் சற்று மிரங்காது, சமயமு மறியாது அவர் வல்லமையைப் பற்றிப் புகழ்வது ஏதோ என்னை ஏமாற்றுவதுபோ லிருக்கிறது. உலகத்தில் உத்தமர் ஒருநாள் பழகினும் ஆபத்துவேளையில் உயிரையும் விடத்துணிந்து உதவுவர். நீர் என் நாதருக்குத் தம்பியாயிருந்தும், எவ்வளவோ காலம் அவருடன் பழகியும் "சீதாலக்ஷ்மணனுளுக்கபயம்" என்று அவர் அபாயத்தொனியுடன் இட்டசத்தம் உமது காதிற் கேட்டுங்கூடக் கலங்காது நிற்கிறீர். நல்லது, நீர்போய் என்நாதருக் குதவி புரிந்தாலாயிற்று. இல்லையேல், நான் அக்கினியில் வீழ்ந்து இறப்பேன்" என்றனள். ஐயோபாவம்! என்ன செய்வார் லக்ஷ்மணர்? இருதலைக் கொள்ளிபோல் ஏங்கினர். தர்மசங்கடத்தில் சஞ்சலப்பட்டார். "இது சமயம் நாம் போகாவிடில் அன்னை அக்கினியிற் பட்டு இறந்து போவது திண்ணம். ஆனால் ஜடாயு அரசனே நமது அன்னைக்குக் காவலிருக்கக் கடவது" என்று மனதிலே நியமித்துக்

கொண்டு, அண்ணன் சென்ற திசையை நாடிப் புறப்பட்டு விட்டார். கொஞ்ச தூரம் சென்றதும் தமையனைக் கண்டார். இராமர்லக்ஷ்மணரைச் சந்தித்தார். "சீதையை விட்டு ஏன் வந்தாய்" என்றுகேட்டார். பர்ணசாலையை நோக்கி, இருவரும் அதிவேகமாய்ப் புறப்பட்டு வருகிறார்கள்.

---

26. கரவடசந்நியாசி கவர்ந்தான் சீதையை.

காவிவஸ்திரம் தரித்த திவ்ய புருஷர் ஒருவர் சீதையின் எதிரே நின்றார். கையில் தண்டமும், கமண்டலமும் பிடித்திருந்தார். உலக ஆசையையே அடியோடுவெறுத்த உத்தமபுருஷர். மகாயோகி, பிச்சைகேட்டார். யாருக்குமே இவர் பேரில் எவ்வித சமுசயமும் ஏற்படாது. அப்படியிருக்கச் சீதையா சந்தேகிக்கப் போகிறாள்? * கிருபணசிரோமணிகள்கூட இவர் வேஷத்தைக் கண்டு, 'பிச்சை இல்லை' என்று சொல்ல மாட்டார்கள். அப்படி இருக்கச் சீதாதேவி 'இல்லை' என்று சொல்வாளா? "இந்த மஹானுக்கு அதித்யம் செய்ய என்நாதரும் இங்கில்லையே! லக்ஷ்மணரும் இங்கில்லையே! பசியாய்த் துடிக்கிறாரே! ஆயினும் நானே பிச்சையிடலாம்" என்று அருகில் வந்தாள். சந்நியாசி ஸமயமறிந்து, பூமியோடு சீதையையும் பெயர்த்துச் சென்றார். இவர் யார்? இவன்தான் இராவணன். மாரீசன் சங்கதிகளை மறைந்திருந்து கண்டு, "இதுதான் தக்க ஸமயம்" என்று சந்நியாசி வேஷம் பூண்டு, பர்ணசாலை அருகிற்சென்று, 'பிக்ஷாம் தேகி' என்று கூவிச் சீதையை

---

*கிருபணசிரோமணிகள்- உலோபிகள். † அதித்யம்- உபசாரம்.

இராவணஸந்நியாசி சீதையைக் களவாடல்

அபகரித்துச் சென்றான். சற்று தூரத்தில் இவனுடைய இரதம் தயாராயிருந்தது. அதில் ஏறிக்கொண்டு, இலங்கையை நோக்கிப் புறப்பட்டான். வழியில் ஜடாயுவைக் கண்டான். விஷயங்களை அறிந்த ஜடாயு நெடுநேரம் இத் துஷ்டனோடு யுத்தம் செய்து, படுகாயப்பட்டு, உயிர்போகும் ஸ்திதியில்இருந்தது. "என் நாதரைக்கண்டு, இந்த வரலாறு செப்பும் வரை நீர் ஜீவித்திருக்கக்கடவது" என்று தேவி வாக்களித்தாள். இராவணன் சீதாதேவியுடன் இலங்கை சென்று, அசோக வனத்தில் தேவியைப் பத்திரப்படுத்தி விட்டுத் 'தன் காரியம் கைகூடிற்று' என்று களிப்புடன் நிர் விசாரமா யிருந்தான். "மாரீசன் மாண்டாலென்ன, சூர்ப்பநகை எக்கேடு கெட்டாலென்ன, 'சீதை நமக்கு வேண்டும்' என்பதுதானே அவன்நோக்கம்? "சீதையையோ அடைந்து விட்டோம். இனிச் சாவகாசமாய் அவளைத் தேற்றி, நம்மை விவாகம் செய்துகொள்ளச் செய்யலாம்" என்று தன்மனதில் எண்ணிக்கொண்டான்.

27. சீதையைக் கவர்ந்த திருடன் எவனே.

இராயரும், லக்ஷ்மணரும் பர்ணசாலை வந்து சேர்ந்தார்கள். உள்ளே பார்த்தார்கள். சீதையைக் காணவில்லை. பர்ணசாலை சூன்யமா யிருக்கிறது. அக்கம்பக்கமெல்லாம் பார்த்தார்கள். அம்மனைக் காணோம். வேற்றாள் ஒருவன் வந்ததும், போனதுமான அடிச்சுவடுகள் இருக்கின்றன. 'ஐயோ சீதையை யாரோ அபகரித்துப் போய்விட்டார்களே! எங்கு போனளோ! இது யார் செய்த வஞ்சகமோ!" என்று எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணி,

நெருப்பில் விழுந்த புழுப்போல் துடித்தார்கள். இராமர் லக்ஷ்மணரைச் சற்று கோபித்தார். பிறகு தானே தேறுத லடைந்தார். பாவம் லக்ஷ்மணர் என்னசெய்வார்! "ஒரு விதமாய் இந்தக் கஷ்டம் என்னுலன்றே ஏற்பட்டது? அண்ணன் பேச்சை மீறினதின் பலன் ஆபத்துக்கிடமா யிற்றே! என்ன நிந்தித்தாலும் நிந்திக்கட்டும்; நாம் இங்கே இருந்து விடலாமென உறுதி கொண்டு, தங்கிவிடாமல் அண்ணனே நாடிச் செல்லவும், அன்னையை இழக்கவும் நேர்ந்ததே" என்று லக்ஷ்மணர் புலம்புகிறுர். தமைய னைக்கண்டு விசாரப்படுகிறுர். இவ்வாறு இருவரும் புலம் புகிறுர்கள். 'அனர்த்தம் விளைந்துவிட்டதே' என்று அழு கிறுர்கள். இப்படி எல்லாம் இருந்தால் சீதை வந்துவிடு வாளா! கடைசியில் இருவரும் ஒருவாறுதேறி 'சீதையைத் தேடிப்பிடிக்கவேண்டும்' என்று இருவரும் புறப்பட்டுவிட் டார்கள். வழியிலே ஜடாயுவைக்கண்டார்கள். நல்லசம யத்தில்தான் அங்கே வந்துசேர்ந்தார்கள். "அந்தக்கழுகு அரசு இராமரைக் காணவும், துஷ்ட இராவணன் செய்கை யைக் கூறவும்தான் உயிர் வைத்துக்கொண் டிருந்தது" என்று தோன்றியது. இராமரைக் கண்டதும் சீதாபிராட் டியை இராவணன் தூக்கிச் சென்ற சங்கதியையும், அத ஞல் தான் அவனேடு போராடி அடிபட்டு, உயிர் துறக்க நேர்ந்த சங்கதியையும், அவருக்கு விபரமாய்ச் சொல்லிப் பிராணனே விட்டது. ஒரு முறையில் சிற்றப்பனுகிய ஜடாயு வின் உத்தரகிரியைகளே இராம லக்ஷ்மணர் செய்து விட்டு, அவர் சொன்னபடியே சீதையைத் தேடிச் சென்றுர்கள்.

---

28. கபந்த ராட்சஸன் கந்தருவன் ஆனான்.

இவர்கள் போகும் வழியில் 'அயோமுகி' என்னும் ஓர் அரக்கியைக் கண்டு, சூர்ப்பநகையைச் செய்ததுபோல் அவளையும் அவமானப்படுத்தி, அப்புறம் செல்லுகையில் கபந்தன் என்னும் ராட்சதனைக் கண்டார்கள். அவனுக்குத் தலை இல்லை. கழுத்திலேயே வாய். அவன் தன்இருகைகளை அகல விரிப்பதும், மறுபடி மடக்குவதும், கைகளின் இடையில் அகப்பட்ட பொருள்களை அப்படியே வாயில் போட்டுக் கொள்வதும் அவனுடைய வழக்கம். இராம லக்ஷ்மணர்கள் அவ்வழியே சென்றுகொண்டிருக்கையில் அவன் கையில் அகப்பட்டார்கள். அவன் அவர்களை இறுகப்பிடித்து இழுத்து வாயில் போட்டுக்கொள்ளும் ஸமயம் அண்ணன் ஒருகையையும், தம்பிமற்றகையையும் வெட்டி எறிந்தார்கள். பிறகு கபந்தன் பலம் குறைந்தவனாய் இவர்களுடைய சரித்திரத்தை விசாரித்துத்தெரிந்து கொண்டு, 'தன்னுடைய தேகத்தைச் சுட்டு விடும்படி' வேண்டிக் கொண்டான். அப்படியே இவர்கள் சுட்டு விட்டார்கள். உடனே சுட்ட இடத்திலிருந்து ஓர் திவ்விய கந்தருவனாக அவர்கள் முன் தோன்றி, 'சீதையை இராவணன் தூக்கிச் சென்ற விவரத்தையும்'சீதையைக்கண்டு மீட்கவும், இராவணனைக் கொல்லவும் சுக்ரீவன் முதலிய வானர வீரர்களைச் சிநேகம் செய்து கொள்ளவேண்டும்' என்கிற விஷயத்தையும், 'அவர்கள் அருகில் ஓர் மலையின் மீதிருக்கிறார்கள்' என்கிற சங்கதியையும் சொல்லி, இராமலக்ஷ்மணரை மனோ வாக்குக் காயங்களால் போற்றிக் கந்தருவலோகம் சென்றான். இவனுக்குச் சாபவசத்தால் இவ்வசுரதேகம் வரவும்

அது ஸ்ரீராமபிரான் அருளால் நீங்கி விடவும் ஏற்கனவே ஏற்பட்டிருந்தபடி இப்போது ஸம்பவித்தது. தன்னுடைய துஷ்ட கிருத்தியங்களுக் கேற்ற தேகம் நீங்கவும், சுபாவமான தேகம் வரவும் ஸ்ரீராமபிரான் ஸங்கதிகளை முற்றும் அறிந்தவனுய்த் தனக்குத் தெரிந்த விவரங்களை எல்லாம் அவருக்குச் சொல்லிவிட்டுத் தன்னுலகம் சென்றுன்.

---

29. வாலியாற் பயந்து மறைந்த சுக்ரீவன்.

வானரர்களுக்கெல்லாம் **வாலி** என்னும் ஒரு மகா பல பராக்ரமம் பொருந்திய வானரன் அரசனுயிருந்தான். அவன் தம்பி 'சுக்ரீவன்' என்னும் வானரன். அவன் மகன் 'அங்கதன்' என்னும் வானரன். ஒரு காலத்தில் வாலி ஒரு குகைக்குள் ஒரு அரசனேடு யுத்தம் செய்யும்படி நேர்ந்தது. அந்தச் சமயம் குகைக்கு வெளியே தன் தம்பியைக் காவல் வைத்து, அந்த அரசனேடு யுத்தம் செய்துகொண்டிருந்தான். நெடுங்காலமாயும் தமயன் திரும்பி வாராதது கண்டு 'அசுரனுல் உயிர் துறந்தான்' என்றெண்ணி, அவ்வசுரனுல் தனக்கும் மற்றவர்களுக்கும் யாதொரு கெடுதியும் நேரிடாம விருக்க ஒரு பெரிய கற்பாறையால் குகையின் வாயிலை அடைத்து விட்டுத் தமயனுக்குச் செய்யவேண்டிய உத்தர கிரிகைகளை எல்லாம் செய்துவிட்டுத் தமையன் அரசட்சியைத் தாமே நடத்தி வந்தான் சுக்ரீவன். அரசனேடு யுத்தம் செய்த வாலியோ அவனைக் கொன்றுவிட்டுக் குகையின் துவாரத்தண்டைவர அது அடைபட்டிருப்பதுகண்டு, அதைப்பெயர்த்தெடுத்துவெளியேவந்து

'தன் தம்பி ராச்சியத்தை அபகரிக்க இவ்விதம் செய்தான்' என எண்ணி, அவன் மனைவி, பொருள் எல்லாவற்றையும் அபகரித்துக்கொண்டு, அவனையும் கொல்ல எண்ணினான். இதையறிந்த சுக்கிரீவன் அந்த ராச்சியத்திற்கு அருகாமையிலிருந்த ஒரு மலையில் தன்னைச் சேர்ந்தவர்களோடு போய் ஒளித்துக்கொண்டான். ஒரு மகானுடைய சாபத்தால் வாலி அங்கேசெல்லமுடியாது. அந்த மலையில் சுக்ரீவன் தன்னைச் சேர்ந்தவர்களோடு சௌக்கியமாய் இருக்கிறான். சுக்ரீவன் வானரங்களில் முக்கியமானவன். நம் இராமாயணத்திற்கே முக்கியமானவர் ஹனுமார்தான். இவர்கள் வாலிக்குப் பயந்து இவ்விதமாய்க் காலங் கழித்துக் கொண்டு, அம்மலையின் மீதே இருந்துவருகிறார்கள்.

---

30. உத்தம ரிணக்கமே உயர்வுறத் தக்கது.

இராமரும், லக்ஷ்மணரும் கபந்தன் பேச்சைக் கேட்டு, அதன்படி சுக்ரீவனைச் சினேஹம் செய்துகொள்வதற்காக அவனிருக்கும் இடத்தை நாடிச்சென்றார்கள். சுக்ரீவனோ யாராவது ஆயுதபாணிகளாய் வரக்கண்டால் "தன்னைக்கொல்லத் தமயனால் அனுப்பப்பட்டவர்களோ" என்று, பயந்து ஒளிந்து கொள்வது வழக்கம். இராமரும், இளையபெருமானும் வில்லேந்திய கையராய் அம்பறாத் தூணியைத் தோளிற் சாற்றிக் கம்பீரமாய் வருவதைக் கண்ட சுக்ரீவன் தன் வழக்கப்படி பயந்து, ஒளிய யத்தனம் செய்தான். சிற்சில காரணங்களால் "நமக்கு நல்ல காலம் கிட்டியது" என்று நன்குணர்ந்த ஹனுமார் உண்

மை அறிய இவ் இருவரிடம்வந்து சங்கதிகளைத் தெரிந்து கொண்டு, இவர்களோடு சுக்ரீவனைச் சிநேகஞ் செய்வித்து வைத்தார். சுக்ரீவன் தன் குறைகளை எல்லாம் இராம ரிடத்திற் சொல்லிக்கொண்டான். இந்தச் சமயம் அநு மார் ஓர் அழகிய துணியில் கட்டிவைத்திருந்த சில ஆபர ணங்களை ஸ்ரீ ராமபிரான் முன்னர் கொண்டுவந்து வைத் தார். இராமர் அந்நகைகளைப்பார்த்து, மூர்ச்சையானார். ஏன் அப்படி? என்ன விசேஷம்? இந்த நகைகள் யாருடை யது? அந்தத் துஷ்டன் உலகமாதாவாகிய சீதையை எடு த்துச் செல்லுங்கால், சீதை தன் நகைகளையெல்லாம் வாங்கித் துணியில் முடிந்து, இவ்வானரங்கள் முன்பாய் எறிந்துவிட்டாள். "ஏதோ நற்காலத்தால் ஒருவேளை நாத னிடம் இந்தநகைகள்சேராதா? இதன்மூலமாகவாவது நாம் போன விவரத்தை அவர் அறியாரா?" என்ற எண்ணத் துடன் இவ்வாறு செய்தாள். சீதையின் நகைகளைக்கண்டு, மூர்ச்சை அடைந்த இராமரை அங்குள்ளவர்கள் ஒரு வாறு தேற்றவும் உடனே, அவ்விடத்திலேயே இராமர் சுக்ரீவனுக்குச் சகாயம் செய்ய வேண்டிய விபரமும் சுக்ரீவன் வானரப்படைகளுடன் இராம காரியத்தில் உழைத்து வரவேண்டிய விபரமும் ஒருவருக்கொருவர் உறுதிபேசி முடித்துக்கொண்டார்கள். சுக்ரீவனது சந் தேகந் தீரும்பொருட்டு, இராமர் துந்துபி எலும்பைப் பெருவிரலால் எத்தி எறிந்தும், வலிமையுற்ற ஏழு மரா மரங்களை ஒரேபாணத்தால் துளைத்துங் காட்டினார். இவ் இரண்டு காரியமும் செய்யத்தகுந்தவர்கள் யாரோ அவர் கள்தான் வாலியிடத்து எதிர்க்கவும், அவனை வதைக்க வும் தகுந்தவர்கள் ஆவர் என்பது ஒரு திருஷ்டாந்தம்.

———

31. சீதையைக்கண்டு திரும்புவைஹனுமா.

சுக்ரீவன் இராம லக்ஷ்மணர்களின் தயவு பெற்ற பிறகு "அவனுக்கு ஹிதம் செய்ய வேண்டும்" என்று உத்தேசித்து, அவனைக் கொண்டு வாலியொடு சண்டை செய்து கொண்டிருக்கும் ஸமயம் சுக்ரீவன் இளைத்துத் தோற்று, வாலியினிடம் அகப்பட்ட தருணம் பார்த்து, இராமர் மறைவில் நின்றுகொண்டு, தம்முடைய ஒரு பாணத்தால் வாலியைக் கொன்றார். பிறகு சுக்ரீவனுக்குப் பட்டாபிஷேகம் செய்து, அங்கதனை யுவராஜாவாக்கி, இனிமேல் நடக்க வேண்டிய காரியங்களைப் பற்றி யோசிக்கலானார்கள். அந்தச் சமயம் மழைகாலமான படியால் அது ஒழிந்த உடனே "சீதாபிராட்டியைத் தேடச் சுக்ரீவன் தன் ஆட்களை அனுப்ப வேண்டும்" என்று ஏற்பாடு செய்து கொண்டார்கள். சுக்ரீவன் 'வானரச் சேனைகள் எல்லாம் அதற்குள் ஒன்று சேர வேண்டும்' என்று உத்திரவு செய்தான். அந்தப் பிரகாரமே சுக்ரீவனுடைய ராச்சியத்திலும், வேறிடங்களிலு மிருந்த வானரங்களெல்லாம் ஒன்று கூடிவிட்டன. மாரிகாலமும் மாறிவிட்டது. இனிமேல் சேனைகளை எல்லாம் பிரித்து நாலா திக்குகளுக்கும் அனுப்பிச் சீதை இருக்குமிட மறிந்து, வர ஏற்பாடு செய்ய வேண்டியதுதான். சுக்ரீவன் எல்லாவற்றிற்கும் தயாராய் இராமலக்ஷ்மண ரிருக்குமிடம் வந்தான். "ஐயன் உத்திரவு என்னமாயிருக்குமோ" என்று எதிர்பார்த்துக்கொண்டிருந்தான். இராமர் சுக்ரீவனைக் கண்ட உடனே அத்தியந்த சந்தோஷமடைந்தவராய்ச் சீதையம்மனைத் தேட என்னென்ன பிரயத்தனங்கள் செய்யவேண்

டுமோ அவற்றை எல்லாம் தாமதமின்றிச் செய்யும்படி சுக்ரீவனுக்கு உத்திரவளித்தார். வானர வீரர்களிலே மிகவும் பராக்கிரமம் பொருந்தியவரும், உத்தமபக்தி வாய்ந்தவரும், தெய்வத்தன்மை உற்றவருமா யுள்ள ஹனுமாரை இராமர் அழைத்தார். தேவியினுடைய அங்க அடையாளத்தை அவரிடம் தெரிவித்தார். தமது விரலில் அணிந்திருந்த அழகிய கணையாழியைக் கழற்றி, ஹனுமாரிடந் தந்து, சீதையைக் கண்ட உடன் கொடுக்கும்படி சொன்னார். "சீதையைக்கண்டுபிடிக்குந் திறமைவாய்ந்தவர் ஹனுமாரே" என்பது இராமருக்குத் தெரிந்த விஷயமானதால் அவரை அன்போடு தம்மிடம் அழைத்துச் "சீதையைக் கண்டு திரும்புவை ஹனுமா" என்று கடாட்சித்தார்.

32. பிராட்டியைத் தேடப் பிரயத்தனங்கள்.

சுக்ரீவன் தன்னுடைய வானரச் சேனைகளை நான்கு பாகமாகப் பிரித்து, நான்கு திக்குகளிலும் சென்று சீதையைத் தேடிவர அனுப்பினன். அப்படித் தேடிப்போனவர்களில் கிழக்கு, வடக்கு, மேற்கு மூன்று திக்குகளிலும் சென்றவர்கள், தங்கள் பிரயத்தனம் பலிக்காமல் திரும்பி வந்து சேர்ந்து விட்டார்கள். தெற்கே போன வீரர்களில் அங்கதன், ஹனுமான் முதலிய வானரப் பிரமுகர்களும் 'ஜாம்புவான்' என்கிற கரடியரசரும் இருந்தார்கள். அவர்கள் தெற்கே சமுத்திரக்கரைவந்து சேர்ந்து விட்டார்கள். இராவணனுடைய ராச்சியமாகிய இலங்கைக்குப் போகவேண்டும். எப்படி இந்தச் சமுத்திரத்தைத் தாண்டிச் செல்கிறது? இந்தப் பராக்ரம காரியத்தைச் செய்ய யார்

துணிவார்கள்? "எல்லோருமே செல்லமுடியாது. அப்படி ஒருவர் இருவர் தாண்டிச் சென்றபோதிலும் இராட்சதர்களுடைய ராச்சியமாயிற்றே! என்ன ஆபத்து நேரிடுமோ; யார் கண்டது!" என்று எல்லோரும் மயங்குகிறார்கள். "சீதையைக்காணாமல் திரும்புவதே பெருத்த அவமானம், சும்மா திரும்ப மனம் வரவில்லை. மேலே செல்லவும் மார்க்கமில்லை. என்ன செய்யலாம்?" என்று யோசித்துக் கொண்டிருந்தார்கள். ஒவ்வொருவருடைய பராக்கிரமத்தைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தார்கள். 'எவ்விதத்திலாவது இலங்கை சேர்ந்து, அங்கு தேடிவிட்டுத்தான் வருகிறது' என்று பிரதிக்ஞை மட்டும் செய்துகொண்டார்கள். "சீதாபிராட்டியைக் காணாது திரும்புவதை விடத் தங்கள் பிராணனையாவது இழந்துவிடுவது உத்தமம்" என்று எல்லோரும் உறுதி செய்து கொண்டார்கள்.

---

33. ஆஞ்சநேயரே அதிபலம் பெற்றவர்.

'ஜாம்புவான்' என்பவர் கரடிகளில் சிரேஷ்டமானவர். வெகு காலமாய் இவ் உலகத்தில் வசிப்பவர். ஆதி காலத்திய ஸங்கதிகளை எல்லாம் நன்றாய் அறிந்தவர். இந்தச்சமயம் ஸ்ரீ ராமபிரான் காரியத்தை நாடித் தனக்குத் தெரிந்த ஓர் பழைய சங்கதியை ஞாபகப்படுத்தினார். அதாவது ஹனுமானுடைய பராக்கிரமமே. ஹனுமார் மகா பலசாலி. அவனுக்குச் சமான மானவர்கள். யாருமே இவ் உலகில் கிடையாது. ஆனால் தன்னுடைய பலம் தனக்கே தெரியாமல் இருக்கிறார். "தனக்கு அதிக

பலமும், சாமர்த்தியமும் இருக்கிற தென்ற எண்ணத்தினல் சிறுவயதில் ரிஷிகளையும், பெரியோர்களையும் சிறிது இடைஞ்சறப்படுத்தி வந்தார். அதனல் "அவருடைய பலம் அவருக்கேதெரியாமலிருக்கட்டும்" என்று ஒரு பெரியவர் சாபங் கொடுத்திருந்தார். "யாராவது ஏதாவது விசேஷ சந்தர்ப்பத்தில் இவரையும், இவருடைய பராக்கிரமத்தையும் பற்றிப் புகழ்ந்தால் இவருக்கு எல்லாச் சங்கதிகளும் ஞாபகம் வந்துவிடட்டும்" என்றும் அந்த மகான் அனுக்ரகம் செய்திருந்தார். இந்த விஷயத்தை அறிந்தவர்கள் ஜாம்பவானைத்தவிர வேறு யாருமே கிடையாது. இதை விசேஷமாய் எடுத்துச்சொல்ல வேண்டிய சந்தர்ப்பமும்இதுவரைஏற்படவில்லை. அந்தச் சாபத்தால் கட்டுப்பட்டவராய் ஒன்றும் தெரியாம விருந்தார் ஹனுமார். இந்தச்சமயமோ இராமர்காரியம் முடியவேண்டி இருக்கிறது. ஆகையால் ஜாம்புவான் ஹனுமாருடைய முன் சரித்திரங்களையும், அவருடைய பராக்கிரமச் செயல்களையும் அவருடையபலத்தையும் பற்றிவிசேஷசமாய்ப்புகழ்ந்துரைத்துச் "சமுத்திரத்தைத் தாண்டிச் செல்லத்தக்கவர் ஹனுமாரே! உம்மைத் தவிர வேறு யாருமே கிடையாது" என்றனர். எல்லோரும் ஹனுமாரை உற்சாகப் படுத்தினர்கள்.

---

34. சம்பாதி யாற்சில சங்கதி தெரிந்தது.

சம்பாதி ஓர் கழுகு. ஜடாயுவுக்கு அண்ணன். ஒரு காலத்தில் அதிக உயரத்தில் பறந்து போகும் போது, சூரிய வெப்பத்தால் அதன் இறகுகள் வெந்து போய் விட்டன. இது சமுத்திரக் கரையோரத்தில் வானரர்கள்

தங்கியிருக்கும் இடத்திற்குச் சமீபமாய் ஓர் பெரிய குகை யில் வசித்துக்கொண் டிருந்தது. வானரர்களின் இரைச் சலைக் கேட்டுத் "தனக்கு நல்ல இரை அகப்பட்ட தென் றெண்ணி" வெளியே சந்தோஷமாய் வந்தது. அப்போது வானரர்களெல்லாம் இராம காரியமாய்ப் பேசிக்கொண் டிருந்தார்கள். தன் தம்பி ஜடாயுவின் பிரஸ்தாபமும் வந் தது. இவர்களைத் தின்ன வந்த ஸம்பாதி இந்த விஷயங் களைக் கேட்டுத் தன் தம்பி மாண்டதற்கு விசனமடைந்து, வானரர்களைப் பார்த்துத் "தனக்கு ஒரு ரிஷியின் அனுக் கிரகத்தால் சில விஷயங்கள் தெரியுமென்றும், தன் மக னால் இராவணன் சீதையைக் கொண்டுபோன ஸங்கதி தெரியுமென்றும், இராம காரியத்தில் ஸகாயம் செய்வதற் காகவே தனக்கு இன்னும் இறகுகள் முளைக்க வில்லை என்றும், தன்னைச் சமுத்திரத்தின் ஓரத்தில் கொண்டு போய் விட்டால் சீதை இருக்குமிடத்தை அறிந்து சொல் லக் கூடும்" என்றும் சொல்லிற்று. வானரர்கள் அப்படியே செய்தனர். உடனே ஸம்பாதி தன் தம்பிக்குச் செய்ய வேண்டிய நீர்க்கடன் முதலிய எல்லாம் செய்துவிட்டுத் தனக்கு இறகுகள் முளைப்பதைக் கண்டு, அதிக உயரத் தில் பறந்து சென்று சுற்றிப் பார்த்து, "இராவணனுடைய அசோகவனத்தில் அன்னை இருக்கிறாள். அதோ என் கண் ணுக்குத் தெரிகிறாள் அந்த அம்மணி. இந்த மார்க்க மாய்ச்சென்றால் அங்குபோய்ச் சேரலாம். ஆனால் ஹனுமா ரைத்தவிரவேறுயாரும் போகமுடியாது. ஹனுமாருங்கூட வெகு ஜாக்கிரதையாய்ச் செல்லவேண்டும். அங்கு அநேக விபத்துகள் எல்லாம் உண்டாகும். அவைகளிலிருந்து மீளு பவர் அவரே" என்றுவானரவீரர்களுக்குச்சொல்லிவிட்டுச் சரசரவென்று ஆகாயமார்க்கமாய்ப்பறந்து போய்விட்டது.

35. சமர்த்தா யனுமார் சமுத்திரந் தாண்டினர்.

"ஹனுமார் ஜாம்புவானல் ஸ்தோத்தரிக்கப் பட்டார்" என்று முன்னமேயே சொன்னோமல்லவா? ஸ்தோத்திரம் செய்யச் செய்ய ஹனுமாருக்கு என்று மில்லாத ஊக்கமும் உற்சாகமும் கிளம்பிவிட்டது. தன்னுடைய பலமும், பராக்கிரமமும் தனக்கு ஞாபகம் வந்துவிட்டது. அத்துடன் அங்கதன் முதலிய பிரமுகர்களும் அவரை மிகவும் கொண்டாடினர்கள். உடனே ஹனுமார் தான்போய்க் காரியத்தை முடித்து வருவதாக அங்கிருந்தவர்களுக் கெல்லாம் தைரியம் சொல்லித் தன் இஷ்ட தெய்வங்களை வேண்டிக்கொண்டு, மகேந்திர பர்வதத்தின் மீது ஏறி நின்றர். உடனே ஆகாயத்திற் பாய்ந்தார். சமுத்திரத்தைத் தாண்டினர். இலங்கையை அடைந்தார். இலங்கையை நோக்கிப் போகும்போது 'ஸுரஸை' யின் வாயிற் புகுந்து வெளியே வந்ததும், ஸிம்கிகையின் வாயிற் புகுந்து அவளைக்கொன்று, பிரமாதமான காரியங்களைச் செய்தார். சமயங்களுக்குத் தக்கவாறு தன் உருவத்தைச் சிறிதாகவும், பெரிதாகவும், மாற்றிக் கொண்டார். "அஸ்தமித்த பிறகு இலங்கைக்குள் புகுந்து ஜகத்மாதாவாகிய சீதா பிராட்டியைத் தேடவேண்டும்" என்று சமுத்திரக் கரையில் தன்னை யாரும் அறியா திருக்கும்படி யான கோலத்தோடு மறைந்து திரிந்துகொண் டிருந்தார். இராமபிரானுடைய மகிமையை ஸதா நினைத்துக்கொண்டிருந்து, பொழுது அஸ்தமித்ததும் லங்கைக்குள் நுழைய யத்தனிக்கையில் கோட்டைவாயிலில் காவலாயிருந்துவந்த 'இலங்கிணி' என்னும் கொடிய பாதகியை முதற் களபலியாகத் தானே கொன்றெறிந்துவிட்டுப் பிறகு லங்கையிற்

புகுந்தார். ஸ்ரீஇராமபிரானைச் சதா ஸ்மரித்துக்கொண்டே "காரியம் அநுகூலமாக வேண்டும்" என்ற எண்ண முடையவராய்ச் சீதா பிராட்டியை எங்கும் தேடலுற்ருர்.

---

36. அசோகவனத்தில் அன்னையைக்கண்டார்.

இலங்கைக்குள் ஹனுமார் புகுந்தார். தெருத்தெரு வாய்ச் சென்ருர். வீடுவீடாய் நுழைந்தார். ஒவ்வொரு இட மாய்ப் பார்த்தார். எல்லா வீடுகளையும் சோதனை செய்தாய் விட்டது. அம்மனைக்காணேம். இராவணனுடைய அரமனை எங்கும் தேடினர். அங்கங்கே தனித்தனி ஸ்திரீகளும் புருஷர்களும், குதிரைகளுமாய் அயர்ந்து நித்திரை செய்துகொண்டு இருந்தார்கள். அங்கும் சீதை இல்லை. ஆஞ்சநேயர் சுற்றிப்பாராத தெருவில்லை. தேடிப்பாரத வீடில்லை. ஓரிடங்கூடப் பாக்கி இல்லாமல் பார்த்தாய் விட் டது. ஜானகி மட்டும் புலப்படவில்லை. "என்னசெய்வது! இனிமேல் எங்கு தேடுவது!" என்று ஏங்கிக் கொண் டிருக்கும் சமயத்தில் ஸம்பாதி சொன்ன அசோகவனம் ஞாபகத்திற்கு வந்தது. அர்த்த ராத்திரிக்கு மேல் ஆய் விட்டது. அங்கும் சென்ருர். அரக்கிகள் பலர்சூழ்ந்து, பல விதத்திலும் பயமுறுத்திக்கொண்டிருக்க அவர்கள் மத்தி யில் பிராட்டியார் முகம்வாடித் துக்கம்மேலிட்டு, அலங் கோலமான ஸ்திதியில் இருப்பதைக் கண்டார். "இப் போதே எதிரிற் செல்லலாமா! ஸங்கதிகளைச் சொல்ல லாமா! தாயை அப்படியே எடுத்துக்கொண்டு போய்விட லாமா!" என்று யோசித்தார். மறுபடியும் "நாம் ஏன் அவசரப்படவேண்டும்! பதருத காரியம் சிதருதல்லவா?

ஒரு வேளை நம்மை 'மாயாவியாகிய அரக்கன்' என்று எண்ணி, அம்மன் பயந்துவிட்டால் நம் காரியமெல்லாம் அபலமாகுமே! இன்னும் இங்கு நடப்பதையும் கவனிப் போம்" என்று அங்கு ஓர் மரத்தில் மறைவாய் இருந்தார். உடனே அந்த இடத்திற்குத் திடீரென இராவணன் வந்தான். சிதை இருக்கும் நிலைமையைக் கண்டான். "என் கண்ணே சீதா! என் உன் முகம் வாடியிருக்கிறது? நின் நாதனில்லாத சமயத்தில் நின்னைக்கொண்டு வந்து விட்டதைப்பற்றி மன வருத்தமா? அப்படி எண்ணுதே! என்னை இன்னுன் என்று நீ அறிந்திலைபோலும்! உலகத் தில் பெரியவன் 'ஈஸ்வரன்' ஒருவனே. அவனுக்குமேலான வனே அல்லது சமத்துவம் பெற்றவனே கிடையாது. அவனையும் அவன் நாயகியாகிய பார்வதி தேவியையுஞ் சேர்த்து அவர்களிருந்த கைலையங்கிரியை அடியோடு பெயர்த் தெடுத்தவனும் நான். அட்டதிக்குயானைகளோடு பொருதி, அதன் கொம்புகள் மார்பில் புகுந்து, அதைக் கழற்றிக்கொள்ள அவைகளால் முடியாமல் வாள் கொண் டறுத்து விட்டு, அத் தந்தங்களில் இரத்தினக் கற்களைப் பதித்துவைத்திருப்பவனும் நான். தேவேந்திரன் முதலிய தேவாதியரை எல்லாம் வென்று அவர்களை எனக்குச் சிற்றேவல் செய்யும்படி செய்வித்துக்கொண்டிருப்பவனும் நான். வாய்வு பகவான் எனக்கு விசிறிகொண்டு விசிறவும், வருணபகவான் எனக்குப் பன்னீர் தெளிக்கவும், சூரிய பகவான் தன் 'கிரணங்களை' ஒடுக்கிக்கொண்டு, எனக்குக் குளிர்ச்சியைத் தந்துகொண்டிருக்கவும், இத்தகையமேன் மையில் நான் இன்பமனுபவித்துக்கொண் டிருக்கிறேன். அதிகமாய்ச்சொல்லுவதேன்! ஈஸ்வரனுங்கூடஎனக்கேவல் செய்துகொண் டிருக்கிறுன். ஆகவே தேவாதியர் ஒருங்கு

கூடி, எனக்கும் 'ஈஸ்வரன்' என்னும் பட்டத்தைக் கொடுத்தார்கள். என்னுடைய பெயரும் அதிற்கூட்டி "ராவண-ஈஸ்வரன்—ராவணேஸ்வரன்" என்று சொல்வதுண்டு. இவ்வளவு பெருமையுங் கூடிய நானே உன்னை விரும்புவதென்றால். அது 'நீ செய்தபாக்கியம்' என்று எண்ணுவாய். 'வலியவந்த சீதேவியைக் காலாலுதைத்துத் தள்ளுவது' போல் நீ என்னை அலட்சியம் பண்ணுகிறாய். வேண்டாம், என்று கெஞ்சி நின்றான். இதைக்கேட்ட சீதா தனக்கு முன் கிடந்த ஒரு துரும்பைப் பார்த்தவண்ணமாய் "அடே படுபாவி! உனக்கு நாசகாலம் வந்துவிட்டது. ஆனதினால்தான் இந்த விபரீத புத்தி ஏற்பட்டு விட்டது. என் நாதரை நீ 'யாரோ' என்று நினைக்காதே. அவருடைய பெருமையைப் பற்றிக் கேவலம் உன்னிடத்தில் வியந்துரைக்க எனக்கு இஷ்டமில்லை. ஆனால் இங்கு முடிவான ஒரு விஷயமட்டும் உனக்குச் சொல்லுகிறேன். என்னைத்திரும்பவும் கொண்டுபோய் அவரிடம் விட்டுத் தெரியாமற் செய்த குற்றத்தை மன்னிக்கும்படி அவர் பாதார விந்தத்திற் சாஷ்டாங்க நமஸ்காரம் பண்ணிக் கேட்டுக்கொள். அவர் உன்னை மன்னிப்பார். அல்லேயேல், செஞ்சடையான் வெற்பை எடுத்து உன்னுடைய தோளையும், வாரணம் பொருந்திய உன்னுடைய மார்பையும், வேதங்கள் உரைத்த உன்னுடைய நாவையும், வெற்றிமாலை யணிந்த உன்னுடைய சிரங்கள் பத்தையும் என்னுடையநாதனிடத்துள்ள கைப்பாணங்களில் 'ஒன்று' கவர்ந்து, சின்னபின்னப்படுத்தி உன்னுயிரையும் போக்கி, உன் இனத்தாரையும் தொலைத்து, இந்த இலங்கையையுமே அழித்துவிடும்' என்பதை நீ திட்டமாய்அறிந்துகொள்" என்றனள். இதைக் கேட்ட இராவணன் "ஹேபேதாய்! அந்த மானுடனை என்

னைக் கொல்பவன்? இந்த லங்காபுரியின் திசையை அறிந்து இங்குவந்து, அவனு உன்னைத் திரும்ப மீட்ட வல்லவன்?" என்று நகைத்து, "உன்வார்த்தை நன்ருயிருக்கிறது. உன் மீதில் எனக்குள்ள பிரியத்தினுல் இன்றுன்னை மன்னித்தேன். இல்லையேல் இப்பொழுதே உன்னைக் கொன்றுவிடுவேன். நல்லது—இன்னு மிரண்டு வாரக் கெடுவிற்குள் என்னை மணக்காவிடில் உன் உயிர் துறப்பது நிச்சயம்" என்று சொல்லி, அங்குள்ள காவற்கார அரக்கிகளிடத்தில் எச்சரிக்கை செய்துவிட்டுச் சரேலென்று திரும்பி அரமனைக்குச் சென்ருன். எல்லாவற்றையும் ஆஞ்சநேயர் தான் மறைந்திருந்த இடத்திலிருந்து கொண்டே கேட்டுக் கொண்டும், பார்த்துக்கொண்டும் இருந்தார்.

---

37. கண்டேன் காதலன் கைக்கணை யாழியை.

ராவணன் சென்றதும் அரக்கிக ளெல்லாம் தூங்கி விட்டனர். சிதை தன் நாயகனை நினைத்து அழுதகண்ணும், சிந்தியமுக்குமாய்ப் "பிராணபதே! என்னலன்ருே இவ்வளவு துன்பம் எனக்கு வந்தது! மானின்மீது நானடைந்த பிரியமன்ருே இப்படிச்செய்தது! இத்தகைய சண்டாளியைத் தாங்கள் மீண்டும் விரும்புவீர்களா! விரும்பமாட்டீர்கள்! ஆகவே நான் என் உயிரைப் போக்கிக் கொள்ளுவதே உசிதம்' என்று ஆங்குள்ள ஓர் அசோக மரத்திற் கருகுசென்று, தன் சடையையே கயிருய்மாட்டிக் கழுத்திலணியப்போகும் சமயம் அம்மரத்தின் மீதிருந்து 'ராம்

ராம் ராம் ராம்' என்ற சத்தம் தன் காதிற்படவே பிரமித்தவளாய் அங்கு மிங்குமாய்ப் பார்த்தாள். இது கண்டு, ஆஞ்சநேயர் "நான் இன்னுனென்றும், இன்னகாரியார்த்தமாய் வந்திருக்கிறேன் என்றும் இங்கு தெரியப்படுத்த வேண்டுமே! என்ன செய்யலாம்" என்று யோசித்து, ஸ்ரீ ராமபிரான் சரித்திரத்தைக் கொஞ்சம் கொஞ்சமாய் அம்மன் காதில் விழும்படி சொல்லிக்கொண்டு வந்தார். அப்போது சீதாபிராட்டி அந்த வார்த்தைகளைக் கவனித்து, "இது என்ன ஆச்சரிசம்! நாமிருக்கும் நாடோ இராட்சதர்கள் பிரதேசம்; இங்கு நம்மவர் வரவோ வழியில்லை. இருப்பதோ அசோகவனம்; சுற்றியகாவலோ துஷ்ட இராட்சதர்கள்; நம்மைச் சூழ்ந்திருப்பவர்களோ கொடிய அரக்கிகள்; நேரமோ இராத்திரி காலம்; இச்சமயம் இவ்வனத்தில் எனது நாதர் சரித்திரம் என் காதில் படுகிறதே! இது என்ன விந்தை! எனக்கும் நல்ல காலம் பிறந்து விட்டதோ? நானிருக்கு மிடத்தையும் அறிந்துகொண்டாரோ? என்ன கஷ்டமெல்லாம் என் நாதருக்கு ஏற்பட்டு விட்டது! திவ்ய மூர்த்தியின் சரித்திரத்தை இன்று கேட்க நேர்ந்தது எனக்கு நல்லகாலம் கிட்டியதற்கு அடையாளமோ" என்று பலவாறு யோசித்து, சத்தம் வந்த இடத்தை உற்று நோக்கினுள். ஆஞ்சநேயரைக் கண்டாள். இதுவும் "இராவணன் செய்கிற சூதோ" என்று பயந்தாள். அச்சமயம் அனுமார் இராமர் சரித்திரத்தைச் சொல்லிமுடித்து அவர்கள் மேற்கொண்ட கருத்தையும் வெளியிட்டு அம்மனுக்கு நம்பிக்கையுண்டாக இராமச்சந்திர மூர்த்தியைப் பாதாதிகேச பரியந்தம் வர்ணித்து, அம்மன் திருவடிகளில் நமஸ்கரித்து, ஐயன்கொடுத்த அடையாளமாகிய கணையாழியை அம்மனிடம் கொடுத்தார். கணையாழியைப்

பெற்ற சீதாபிராட்டி அதை இரு கைகளாலும் இரண்டு கண்களில் ஒற்றிக்கொண்டு, மெத்த வியப்புஞ் சந்துஷ்டியு மடைந்து, இராமர் லக்ஷமணர்களுடைய க்ஷேமத்தைப் பற்றி மிகுந்த ஆவலோடு விசாரித்துவிட்டு, ஒருவாறுசந் தேகம் நீங்கி, அனுமாரை மிகவும் கொண்டாடினுள்.

---

38. இக்கடல் தாண்டி நீ எப்படி வந்தனே?

இராமரால் கொடுத்து அனுப்பப்பட்ட கணையாழி யைக்கண்ட சீதாபிராட்டி இராமரையே நேரிற்கண்டது போல் உடம்பும், உள்ளமும் பூரித்து, ஆனந்தக்கண்ணீர் பெருக ஆஞ்சநேயரைப் பார்த்து, "அப்பா! என் நாய கரும், இளையபெருமானும் மாயமானின் பின் பற்றிச் சென்ற பிறகு படுபாவியாகிய இந்த இராவணன் ஓர் தவ ரிஷி வேடமிட்டு, என்னைக் கவர்ந்து வந்தனன். நான் இவ்விடத்தில் அன்ன ஆகாரமின்றிச் சதா இராம மந்திரத் தையே ஜெபித்துக்கொண்டு இன்னும் உயிர் வைத்திருக் கிறேன். அவர்களை விட்டு நான் பிரிந்தபின் அவர்க ளுடைய வரலாற்றைப் பற்றி அறிந்துகொள்ள ஆவலடை கிறேன். அவர்கள் எங்கெங்கு சென்றூர்கள்? என் நிலை மையை எப்படி அறிந்தார்கள்?" என்று கேட்டனள். "தாயே! தாசரதியும், இளையபெருமானும் தங்களைவிட்டுப் பிரிந்த பின்னர் ஜடாயு அரசனைவந்து சந்தித்தார்களாம். ஜடாயு அவர்களுக்குத் தங்கள் வரலாற்றைச் சொல்லி, உயிர் விட்டபின், ஈமக்கடன் முடித்துக் கபந்தனைச் சங்க ரித்து, அவனுல் கிஷ்கிந்தையைப் பற்றியும், அதற் கரச

ராகிய வாலி சுக்ரீவன் முதலியவரைப் பற்றியும் கேள்வி யுற்று, கிஷ்கிந்தையை நாடி வருங்கால் நாங்கள்சென்று எதிர்கொண் டழைத்தோம். சுக்ரீவனுகிய எங்க ளரசர் அவரது அண்ணனுகிய வாலியால் துரத்தப்பட்ட நிலைமை யை ஸ்ரீராமபிரானிடம் சொல்லி, முறையிட அவருக்கு ஆதரவு செப்பி, மிகுந்த பராக்கிரமசாலி யாகிய வாலியை வதைத்து,சுக்ரீவனுக்குப் பட்டமளித்துத் தங்களைத்தேடு வதற்கும் ஆயத்தம் செய்தார்கள். மாரிகாலங் கழிந்த தும் நான்கு திக்குகளுக்கும் வானர வீரர்களை அனுப் பினுர்கள். அதில் தென் திசைநாடி வந்தவர்களில் அடி யேனும், ஜாம்புவந்தர், அங்கதன் முதலிய வீரர்களுமே. இவர்களில் ஸ்ரீ ராமபிரான் திருவருளினுலும், தங்க ளுடைய கிருபா கடாக்ஷத்தினுலும் அடியேன் மட்டும் அகண்ட இக்கடலைத்தாண்டி லங்கை புகுந்து, தங்களைக் காணும் பாக்கியம் பெற்றேன்" என்று சொல்லி, அம்மனு டைய பாதார விந்தங்களில் சாஷ்டாங்க நமஸ்காரஞ் செய்து நின்ருர். இச் சரித்திரத்தைக்கேட்ட அம்மனுக்கு வியப்பும், உள்ளக் கிளர்ச்சியும் உண்டாய் "அப்பா! நீயோ பார்வைக்குச் சிறு குரங்கு வடிவமா யிருக்கிருய். இந்த அகண்ட கடலைத்தாண்டி நீ எப்படி வந்தாய்?" என்று கேட்க, "தாயே! சாட்சாத்காரமாயுள்ள தங்களின் திரு வருளைமுன்னிட்டு, அடியேனுக்கு விஸ்வரூபமும் ஏற்பட் டிருக்கிறது. உத்திரவானுல் அந்த ரூபத்தை எடுத்துக் காண்பிக்கிறேன்" என்றனர், பிராட்டி அதற்குச் சம்ம திக்க உடனே விஸ்வரூப மெடுத்தார். ஆகாயத்திற்கும், பூமிக்கும் ஒரே வடிவமாய் அகண்டகாரமா யிருப்பதைக் கண்ணுற்றுப் பயந்து, "அப்பா ஆஞ்சனேயா! போதும் உன் விஸ்வரூபத்தை ஒடுக்கிக்கொள்', என்றனள். உடனே

தன் சொரூபத்தை ஒடுக்கிக் கொண்டு பழையபடி ஒருசிறு குரங்கு ரூபமாய் அம்மன் திருவடிகளை வணங்கி நின்றார். "நான் என் உயிரையே போக்கிக்கொள்ளத் துணிந்த இது சமயம் நீ வந்து என்னைக் காத்தனை யாதலால் நீ சிரஞ்சீவியாய் இருக்கக்கடவது" என்று வாழ்த்தித் தன் கரத்திலணிந்திருந்த சூடாமணியைக் கழற்றி, ஹநுமார் கையிற்கொடுத்து 'இதை எனது பிராணநாதர் திருவடியிற்சேர்த்துக் 'கூடிய சீக்கிரத்தில் வந்து என்னை மீட்டிக் கொள்ளவேண்டிய ஏற்பாடுசெய்யவேண்டும் என்று நான் கேட்டுக்கொண்டதாகவும் தெரிவி" என்றனள். "தாயே நாளையும் இங்கு இருந்து, இந்த அசோக வனத்திலுள்ள கனிவர்க்கங்களை நன்றாய்ச் சாப்பிட்டு, என் பசியைத்தீர்த்துக்கொண்டு, செல்லுவதற்கு எனக்கு உத்திரவு செய்ய வேண்டும்" என்று ஆஞ்சநேயர் கேட்டனர். 'அங்ஙனமே ஆகுக' என்று அம்மனது உத்திரவு கிடைத்தது.

---

39. ஹநுமா ரால்பல அரக்கர்கள் மாண்டனர்.

சீதையம்மன் உத்திரவின்படி மறுநாளும் ஹநுமார் லங்கையிலேயே இருக்கத் தீர்மானித்தார். தான் வந்த சங்கதியை இராவணன் அறியவும், தன் பராக்கிரமத்தை அவர்களுக்குக் காட்டவும் ஓர் உபாயஞ் செய்தார். அசோகவனத்தை அழிக்க ஆரம்பித்தார். காவலிருந்த ராட்சஸ வீரர்களைப் போருக்கழைத்து, எல்லாரையும் கொன்றார். காவலர்களிற்சிலர் இராவணனிடம் ஓடிக்குரங்கின் செய்கைகளைச் சொன்னார்கள். உடனே, இராவணன்

தன் அட்சய குமாரனையும், மந்திரி பிரதானியின் மக்களை யும் இன்னும் ஐந்து சேனாதிபதிகளையும் ஒருங்குசேர்த்து, இந்தக்குரங்கோடு யுத்தம்செய்ய அனுப்பினான். எல்லோ ரும் ஹனுமாரிருக்குமிடம் வந்தார்கள். ஹனுமாரும் இவ்வி ஷயத்தை எதிர்பார்த்தவராய்த் தம்முடைய உருவத்தைச் சிறிய தாக்கிக் கொண்டு, அசோகவனத்தின் வெளியே காத்துக்கொண்டிருந்தார். இராட்சத சேனையைக் கண் டார் 'தன்காரியம் பலித்தது' என்று சந்தோஷங் கொண் டார். ஒன்றும் தெரியாதவரைப்போல் சும்மா இருந்தார். பார்த்தார்கள் இராட்சதர்கள். ஹனுமாரைப் பிடிக்க எண்ணினார்கள். கிட்ட நெருங்கினார்கள். தங்கள் பராக் கிரமத்தை எல்லாம் காட்டினார்கள். பிரமாதமாய் யுத்தம் செய்தார்கள். "இந்த ஒரு குரங்குக்கு இவ்வளவு பலமா? இதையும் விட்டு விட்டுப் போவது வீரமா?" என்று ஆர்ப் பரித்தார்கள். பார்த்தார் ஹனுமார். இடம் விட்டு இடம் புகுந்தார். அரக்கருடைய பலத்தைப் பரீட்சிக்க எண்ணினார். அரக்கர்கள் ஹனுமார்முன் நிற்க முடிய வில்லை. எல்லோரும் மாண்டார்கள். யுத்தாரம்பமே இராவணன் மகன் களப்பலியாக நேர்ந்தது. எஞ்சிய சிலர் மட்டும் இராவணனிடம் ஓடிச் சங்கதி யறிவித்தனர்.

---

40. இச்சிறு குரங்கை என்ன செய்யலாம்?

இராவணன் காதில் இந்தச் சங்கதி எட்டிற்று. அவ னுக்கு மிகுந்த கோபம் வந்து விட்டது. "ஒரு குரங்குஇப் படிச் செய்யலாயிற்று?" என்று ஆக்கிரஹம் கொண்டான். குரங்கைக் 'கொல்லவேண்டு' மென்று எண்ணினான். குரங்

கோடு போர் செய்யத் தன் ஜேட்டபுத்திரனுகிய இந்திர ஜித்தை அனுப்பினுன். அவன் ஒரு பெரிய சேனையோடு யுத்தத்திற்குப் புறப்பட்டான். அகோரயுத்தம் நடந்தது. அரக்கர்களில் பலர் மாண்டார்கள். இந்திரஜித்தும் 'என்ன செய்வது' என்று மயங்கினுன். கடைசியில் பிரமாஸ்தி ரத்தை ஹனுமார்மேல் விட்டான். அதனுல் ஒரு முகூர்த்த காலம் 'கட்டுப்பட்டிருக்கவேண்டும்' என்று அவருக்கு ஓர் சாபம் உண்டு. அதன்படியே இப்போது கட்டுப்பட்டார். "இதுவும் ஓர் நல்ல காரியந்தான்; இதன் மூலமாக இராவணனைக் காணலாம்; ஊரின் ஸங்கதி அறியலாம்'' என்று எண்ணினுர், இந்திரஜித்தோ 'நாம் ஹனுமாரைக் கட்டி விட்டோம்' என்று அட்டகாஸம் செய்து; அவரைப் பிடித்து இழுத்துக்கொண்டு தந்தைபாற்சென்ருன். அவர் ஒன்றும் தெரியாதவர்போல் இழுத்தபடி யெல்லாம் ஆடினுர். இராவணன் சபையை அடைந்தார் 'இந்திரஜித்தின் பிரதாபங்களை யெல்லாம் கேட்டார். இராவணனுடைய கர்வத்தையும், அகங்காரத்தையும் கண்டார், தான் 'இராம தூதன்' என்று சொன்னுர். தன்னை இராவணன் மதியாதது கண்டு, அவனுடைய சிம்ஹாஸனத்தினெதிரே தன் வாலை வளர்த்துச் சுருட்டி, உயரமான ஆஸனமாக்கிக் கொண்டு உட்காந்தார். 'இக்குரங்குடன் நாம் சரியாய்ப் பேசுவதா' என்ற இருமாப்புடன் இராவணன் தன் பிரதானிகளையும், மந்திரிகளையும் கொண்டு அனுமாரைப் பல கேள்விகள் கேட்டான். யார்கேட்டாலும் அவர் பதில் சொல்லவில்லை. கடைசியில் இராவணனே விசாரிக்க ஆரம் பித்தான். அவனைச்சற்றேனும் லட்சியம்செய்யாமல் உதாசினமாகவே இவரும் பதிலுரைத்தார். அவனை வாயில் வந்தபடி யெல்லாம் தூஷித்தார். அவனுக்குக் கோபம்

அதிகரிக்கும்படி யெல்லாம் செய்தார். பார்த்தான் இராவணன். 'இந்தத் துஷ்டக் குரங்குக்கு இவ்வளவு வாயா? இதையும் நாம் சும்மா விட்டுவிடலாமா? இதை என்ன செய்யலாம்' என்று யோசித்துக் கோபத்தினால் கண்கள் சிவந்து "இதைக் கொன்றுவிட்டுத்தான் மறு வேலை பார்க்கவேண்டும்" என்று நிச்சயித்து, உடனே கொன்று விடும்படியாய்த் தன் சேவகர்களுக்கு உத்திரவளித்தான்.

---

41. நீண்ட வாலை நெருப்பிற் கொளுத்து.

இராவணனுக்கு 'விபீஷணர்' என்று ஒரு தம்பி உண்டு. கும்பகர்ணனுக்கும் இளையவர்; அவர் மஹா சத்தியவான்; தர்மாத்மா; தெய்வபக்தி நிறைந்தவர்; அரக்கர் குலத்தில் தப்பிப்பிறந்தவர். அண்ணன் காரியங்களை முற்றிலும் வெறுத்து, சீதை விஷயமாய்ப் பலமுறையும் அண்ணனுக்குப் புத்தி கூறினர். இவர் பேச்சை அக் கொடியவன் அணுவளவும் மதிக்கவில்லை 'குரங்கைக் கொன்றுவிடுங்கள்' என்று அண்ணன் உத்திரவுசெய்த உடனே, "இது என்ன கேடுகாலமோ! லங்கைக்கு என்ன விபரீதம் விளையப்போகிறதோ? ஏனோ என் தமையன் புத்தி இப்படிக் கெட்டுப்போயிற்று" என்று அதிக துக்கப்பட்டுத் தமையனை நோக்கி "அண்ணா! பிரதாப லங்கேசுவரரே! இது தங்களுக்குத் தருமமா? தூதனைக் கொல்வது நியாயமா? உலகத்தோர் நம்மைப் பழியார்களா? தயவு செய்து இவனைக் கொல்லவேண்டாம். இவன் செய்த அக்ரமங்களுக்கு ஏதாவது தண்டனை விதித்து, இவனை அனுப்பிவிடுவதே உத்தமம்" என்று போதித்தார்,

இராவணன் சற்று யோசித்துத் 'தன் தம்பி சொன்னது நியாயம்' என்று ஒத்துக்கொண்டு, "நல்லது, வானரங்களுக்கு வாலல்லவோ அழகு? அவ்வாலைக் கொழுத்தி, மூளியாக்கிவிடலாம். அவ்வண்ணமே அதைத் தூதனுப்பிய இராமரிடம் அனுப்பிவிடலாம். அதுவும் ஒரு வேடிக்கையே" என்றெண்ணித் தன் படர்களைப்பார்த்து "இக்குரங்கின் வாலுக்குக் கந்தைகளைச்சுற்றி இலங்கையைப் பிரதட்சணம் செய்வித்து, ஊருக்கனுப்பி விடுங்கள்" என்முன். படர்களும் அப்படியே செய்வதாய் ஒப்புக்கொண்டு ஹனுமாரை அழைத்துச் சென்றூர்கள்.

---

42. இலங்கையிற் பாதி எரிந்து கருகின.

அனுமாருடைய வாலுக்குக் கந்தைகளைச் சுற்ற ஆரம்பித்தார்கள். கந்தைகளைச் சுற்றச்சுற்ற வாலைப் பெரிதாக்கிக் கொண்டார். ஊரிலுள்ள கந்தைகளெல்லாம் தீர்ந்து விட்டது. அவர் வால் முழுவதும் சுற்ற முடியவில்லை. சுற்றின கந்தைகளோடு வாலை எண்ணெயில் நனைத்தார்கள். அதற்கு நெருப்பிட்டார்கள். வால் பந்தம்போல் எரிகிறது. அச்சமயம் அனுமார் ஸ்ரீ ராமபிரானையும் சீதாபிராட்டியையும் மனதில் தியானித்துக் கொண்டு, அக்கினி பகவானையும் தியானம் பண்ணினர். அவருக்கு எள்ளளவேனும் சூடு தாக்கவில்லை. வாலுக்கு எவ்வித கெடுதியும் ஏற்படவில்லை. கந்தைகள் மட்டும் எரிகின்றன. அதுவும் ஒரு விந்தையே. அதனாலும் 'நாம் ஒரு காரியம் ஸாதிக்க

லாம்'' என்று மனதில் நினைத்தார் ஹனுமார். இராவணனுடைய படர்கள் தீப்பிடித்துத்தெரியும் வாலோடுகூடியஹனுமாரைத் தெருத் தெருவாய் அழைத்துச் சென்றார்கள். ஹனுமார் அவர்கள் ஆட்டினபடி எல்லாம் ஆடினார். இழுத்த பக்க மெல்லாம் சென்றார். தம்முடைய வாலை மட்டும் இங்கு மங்கும் சுழற்றினார். பார்ப்பவருக்கு நெருப்பின் வேதனையில் சுற்றுகிறதுபோல் தோன்றியது. உடனே இலங்காபுரியைப் பாழாக்கக் கருதிவிட்டார். சுற்றுகிற வேகத்தினால் அங்குள்ள மாடமாளிகை, கூட கோபுரம் முதலிய இடங்க ளெல்லாம் தீப்பிடிக்க ஆரம்பித்து விட்டது. அரக்கர்கள் நாலா மூலையும் ஓடுகிறார்கள். எத்தனையோ ஆயிரம் அரக்கர்கள் நெருப்புக் கிரையானார்கள். ஹனுமார் அசோகவனம் சென்றார். அம்மனைக் கண்டார். சங்கதிகளைச் சொன்னார். தண்டம் சமர்ப்பித்தார். சமுத்திரத்தில் வாலை நனைத்தார். அங்கிருந்து ஒரே தாண்டாய்த் தாண்டினார். ஒரு நொடிக்குள் தம்முடைய வீரர்களிருக்குமிடம் வந்து சேர்ந்தார்.

43. கன்ம மகலக் கண்டேன் சீதையை.

அதிக குதூகலத்துடன் தான் கண்டதும் கேட்டதும், செய்ததுமாகிய ஸங்கதிகளை வானர வீரர்களுக்கு அனுமார் சொல்லவும் எல்லா வானரர்களும் அத்தியந்த சந்தோஷத்தோடு கூடியவர்களாய்க் கூத்தாடிக்கொண்டு சுக்ரீவனிடத்திற்கு வந்து சேர்ந்தார்கள். இவர்கள் இவ்

வளவு கோலாகலமாய் வந்திருக்கிற ஸங்கதி சுக்ரீவனுக்குத் தெரியவும் "காரியம் அனுகூலமாயிருக்கும்" என்று விசாரித்தறிந்து, சந்தோஷமடைந்து, தானுங் கூத்தாடிக் கொண்டு, ஒரே கும்பலாய் இராமபிரானிடத்திற்கு வந்தார்கள். ஹனுமான் கண்டேன் சீதை யம்மனே என்று சொல்லி இராமர் திருவடிகளில் நமஸ்கரித்துத் தான் இலங்கை சென்றதும், அம்மனேக் கண்டதும், அம்மனின் நிலைமை முதலிய எல்லா வற்றையும் ஒன்று விடாமற் சொல்லி, அம்மன் கொடுத்த அடையாளமாகிய சூடாமணியை இராமரிடம் காணிக்கையாக வைத்து, "ஐயனே! இன்னும் ஒருமாதத் தவணையில் அம்மனே மீட்டா விட்டால் அம்மன் உயிர் விடுவது உறுதியென நம்பும்" என்று கூறினர். இராமர் சூடாமணியைக் கண்டதும் பத்தினியின் குணங்களும், பழைய சங்கதிகளும் ஞாபகம் வர மூர்ச்சை யடைந்தார். சுக்ரீவனும் லக்ஷ்மணரும் தேற்றத் தேறி, "உடனே புறப்படவேண்டும். அம்மனே விடுவிக்க வேண்டும்" என்று எல்லோரும் புறப்பட்டுவிட்டார்கள்.

---

44. சேது பந்தனம் செய்து முடித்தார்.

ஸ்ரீராமபிரான் சுக்ரீவனுடையதிரண்டவானரப் படைகளேத் தனக்குத்துணையாக அழைத்துக்கொண்டு, தெற்குச் சமுத்திரக் கரை வந்து சேர்ந்து விட்டார். "சமுத்திரத்தைக் கடந்தல்லவா இலங்கைக்குச் செல்ல வேண்டும்? இது எல்லோராலும் முடியுமா? என்ன செய்வது? எவ்வாறு கடப்பது?" என்று யோசனே செய்துகொண்டு,

சமுத்திரராஜன்மீது ஸ்ரீராமர் பிரஹ்மாஸ்திரம் பிரயோகித்தல்.

சமுத்திர ராஜனை இராமர் வேண்டினர். சமுத்திர ராஜன் ஏதோ பாராமுகமாய்இருந்துவிட்டான். 'சமுத்திரத்தையே வற்றச் செய்கிறேன்' என்று, அஸ்திரங்களைவிட்டுவிட்டார். சமுத்திரம் பொங்கிக்கொத்தளிக்கின்றது. சமுத்திரராஜன் பயந்து, இராமரிடம் வந்து சமுத்திரத்தின் குறுக்கே அணை கட்டும்படியாகவும், தான் அவ்அணையைத் தாங்கிக் கொண்டிருப்பதாகவும் சொன்னான். உடனே கற்பாறைகளென்ன, விருட்சங்களென்ன, பெரியமலைகளென்ன, யார் யார் எவ்வளவுபெரியபொருள்களைத்தூக்கக்கூடுமோ அவ்வளவு பொருளையும் தூக்கிக்கொண்டுவந்து,சமுத்திரத்தில் போடஆரம்பித்துவிட்டார்கள் 'விஸ்வகர்மா' என்பவர் ஒரு தேவசிற்பி. அவருடைய அம்சத்தில்உண்டான நளன்என்கிற ஒரு வானரம் மற்ற வீரர்கள் கொண்டுவந்து சேர்க்கும்படியான பொருள்களைக் கொண்டு, சிறந்த அணை ஒன்று நிருமிக்க ஏற்பாடு செய்துவிட்டது. அணைவேலையும் அதிக துரிதமாய் நடந்து வந்தது. அச் சமயம் அங்கு விசேஷ சம்பவம் ஒன்று ஏற்பட்டது. அதுவும் ஸ்ரீ இராமபிரான் காரியத்திற்கு மிகுந்த அனுகூலமாகவே முடிந்தது.

---

45. விபீஷணர்புத்தியைவெறுத்தான்ராவணன்.

இராவணனுக்கு 'விபீஷ்ணர்' என்று ஒரு தம்பியுண்டென்று நாம் முன்னமேயே படித்திருக்கிறோமல்லவா? அவர் மஹா தர்மாத்மா. பரமதயாளு. சாட்சாத் பகவத் பக்தி நிறைந்தவர். கருணை மிக்கவர். சற்குணநிதி. சேற்றில் செங்கழுநீர் பூத்தது போல் துஷ்டர்கள் மத்தியில் வந்து

ஜனித்துவிட்டார். அண்ணன் செய்யும் காரியங்கள் ஒன்றும் இவருக்குப் பிடிக்க வில்லை. தமயனுக்கு எவ்வளவோ ஹிதோபதேசங்கள் செய்தார். ஒன்றும் பிரயோஜனப்படவில்லை. நிர்ப்பயமாய் அண்ணனுடைய அக்ரமங்களைக் கண்டித்தார். சீதாதேவியைக் கொண்டுபோய் இராமரிடம் விட்டு விடவும், அவரை மன்னிப்புக் கேட்டுக் கொள்ளவும் சொன்னார். இவர் பேச்சை இராவணன் ஒரு பொருட்டாக மதிக்கவே இல்லை. "ஐயோ! அண்ணன் புத்தி இப்படி விபரீதமாய் விட்டதே! நமது குலத்திற்கு விநாசகாலம் கிட்டிவிட்டதே! என்னென்ன அனர்த்தங்கள் விளையப் போகின்றனவோ" என்று மிகவும் பரிதாபத்துடன் இராமருடைய பெருமைகளையும் இராம பாண மகிமைகளையும் இராவணனுக்கு உத்தம பதிவிரதா சிரோமணிகளால் ஏற்பட்ட சாபங்களையும் எடுத்துச் சொல்லிப் பார்த்தார். 'கெடுவார்க்குக் கெடுமதி பிடரியில்'' என்பார்களே! அது பொய்யா? தம்பி பேச்சை இராவணன் மதிக்கவில்லை. தம்பியை வாயில் வந்தபடியெல்லாம் தூஷித்தான், மற்ற அரக்கர்களும் அப்படியே நிந்தித்தார்கள். "இந்தத் துஷ்டர்கள் மத்தியி லிருப்பதை விட ஸ்ரீராமபிரான் பாதஸேவை செய்துகொண் டிருப்பது உத்தமம்" என்று தன் மந்திரிமார்களை அழைத்துக் கொண்டு, விபிஷணர் இராமரிடம் சரணாகதி அடைய வேண்டுமென்று தீர்மானித்துப் புறப்பட்டுவிட்டார்.

———

46. ஒழுக்கம் நிறைந்த உத்தமர் இவரே.

விபீஷணுழ்வார் தன் மந்திரிமார்களுடன் ஆகாய மார்க்கமாய் வந்து, ஸ்ரீராமபிரான் திவ்ய தரிசனத்திற் காகக் காத்துக்கொண் டிருந்தார். அங்குள்ளவர்களோ அனுமார் ஒருவர் நீங்கலாக மற்றெல்லோரும் விபீஷணரை 'அங்கு வரவிடக்கூடாது' என்று ஆட்சேபித்தார்கள். "இவனே இராட்சதன்; அதிலும் இராவணன் தம்பி; உளவறிந்துபோகவந்தவன். பொய்சொல்லி நம்பக்கத்தில் சேர்ந்து, சமயம் பார்த்து நம்மை ஏமாற்ற எண்ணங் கொண்டு வந்தவன். இவனைச் சேர்க்கக்கூடாது" என்று சொன்னார்கள். அனுமாரோ "நடக்கிறதெல்லாம் நடக்கட்டும்; கடைசிவரை நாம் மௌனமாயிருக்கலாம். தீராத பட்சத்தில் நம் கருத்தை வெளியிடலாமென்று" சும்மா இருந்தார். ஸ்ரீராமர் அனுமாரைப் பார்த்து 'உம்முடைய அபிப்பிராயம் என்ன?' என்று கேட்டார். அனுமார் தான் இலங்கையில் கண்ட விஷயங்களை யெல்லாம் சவிஸ்தாரமாய்ச் சொன்னார். விபீஷணரைப்பற்றிக் கொண்டாடினர். "உத்தமகுணசீலர். கெட்ட எண்ணம் கொஞ்சமேனு மில்லாதவர். சதா சாட்சாத் பகவத் பக்தியும், தர்ம சிந்தனையும் மனதிற் குடிகொண்டவர். அண்ணன் காரியங்களை ஆற்ருதவர். சீதையைத் தாயெனக் கருதித் தன் மனவியையும், மகளையும், அம்மனுக்குப் பணிவிடை செய்ய ஏற்படுத்தியவர்; மனத்தில் கல்மஷம் சற்றேனு மில்லாதவர்; இவர் உண்மையாகவே துஷ்டர்கள் கூட்டுறவை விட்டு, ஐயன் பாதஸேவையை நாடி வந்திருக்கிருர். இவர் சொல்வது முற்றிலும் உறுதியே. இவரை இதுசமயம்

நிராதரவாய் விடலாகாது" என்றார். இராமரும் பார்த்தார் "அடைக்கலம் புகுந்தவரை ஆதரிப்பதே நோன்பாகக் கொண்டிருக்கிறேன். விபீஷணருக்கு அபயஸ்தானம் கொடுத்து ஆதரிப்பேன். இது உறுதி" என்றார்.

---

47. இன்றிருந்தே நீ இலங்கைக் கரசன்.

விபீஷணர் மனதில் ஏதேதோ யோசித்தார். என்னை இராமர் ஒருபொருட்டாக மதிப்பாரோ? எனக்கும் அபயமளிப்பாரோ? 'இராவணன் தம்பி' என்று என்னை நீக்கிவிடுவாரோ? 'இராட்சதன்' என்று வெறுத்துவிடுவாரோ? புண்ய குணசீலர் பாதஸேவை கிடைக்குமோ? இணைபிரியாமல் இவர் கழலிணைகளிற் பணிந்து போற்றும் பாக்கியம் எனக்குக் கிட்டுமோ? அந்தோ; வானரர்கள் வாயில் வந்த படியெல்லாம் பிதற்றுகிறார்களே! ஐயனும், அவர்கள் பேச்சையேமதித்து, என்னை அநாதரவு செய்துவிடுவாரோ?" என்று எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணிக் கொண்டிருந்தார். அச்சமயம் ஆஞ்சநேய மூர்த்தி சொல்லும் வார்த்தைகள் இவர் காதில் விழுந்தன. உடனே சந்தோஷமடைந்தார். தனக்கும் 'பகவான் அருள் கிட்டும்' என்று துணிந்தார். தன்னை அறியாமலே தாண்டவமாடினார். மாருதியைப்போற்றினார். அப்போது இராகவர் தீர்மானமும் காதில் பட்டது. மனத்திற்கொண்ட ஐயம் விட்டது. முகம் செந்தாமரையைப்போல் மலர்ந்தது. விபீஷணரை இராமரிடம் அழைத்துச்செல்ல வானரங்களும் வந்துவிட்டார்கள். ஆழ்வாருக்கு வேண்டிய உபசாரங்கள் சொல்லி, இராமபிரானது திருமுன்னர் அழைத்துச் சென்றார்கள்.

இராமர் தரிசனம் கிடைத்தது. குதூகல மடைந்தார். ஆனந்த பாஷ்பம் சொரிந்தார். அம்மன் படும் துயரங் களைச் சொன்னார், அண்ணன் காரியங்களை நிந்தித்தார். தாயாரை 'அழைத்து வரவேண்டும்' என்றார். இச்சமயம் இராமரும் தான் கொண்ட கொள்கையின் உறுதியை எல் லோருமறிய "இதோ இலங்கையை விபீஷணருக்குத் தத் தம் செய்தேன்" என்று அவர் கையில் ஜலத்தை வார்த் தார். "இராவணன் தொலைந்தான். இது உறுதி" என்று எல்லோரும் கொண்டாட்ட மடைந்தார்கள்.

---

48. சாரணர் தம்மாற் சங்கதி அறிவோம்.

நளனுடைய சகாயத்தாலும், வானரவீரர்கள் பராக் கிரமத்தாலும், சமுத்திர ராஜனுடைய அருளாலும் அணை கட்டித் தீர்ந்து விட்டது. அக்கரை சேரவும், அரக்கரை மாய்க்கவும், அம்மனை அழைத்துவரவும், ஐயனுத்திரவை எதிர்பார்த்திருந்தார்கள். எல்லோரையும், இராமபிரான் சுக் ரீவன் மூலமாய் மேலே செல்ல உத்திர வளித்தார். மஹா பாக்யசாலிகளாகிய மாருதியும், அங்கதனும் இராகவனை யும், இளையபெருமானையும், தங்கள் தோளின்மீது தாங்கி கொண்டார்கள். சேனைகள் எல்லாம் அணையின் மேல் நடந்தும், ககனமார்க்கமாய்ப் பாய்ந்தும், சமுத்திரத்தில் நீந்தியும் தங்களுக்குத் தோன்றிய விதங்களில் அக்கரை போய்ச் சேர்ந்தார்கள். வானரர்கள் 'உடனே சண் டைக்குப் புறப்பட வேண்டும்' எனத் துரிதப்பட்டார்கள். பார்த்தார் இராமர். "பதறாத காரியம் சிதறாது" "நாம் இன்னும் பார்ப்போம். அந்தத் துஷ்டனுக்குச் சொல்லி

அனுப்புவோம். வீணாக என் சண்டைக்கு ஆரம்பிக்க வேண்டும்" என எண்ணித் தன்சேனைகளுக் குள்ளாகவே மாறு வேஷத்தோடு திரிந்துகொண்டிருந்த 'சுகன், சாரணன்' என்கிற இராவணனுடைய தூதர்களை அழைத்து "ஹே தூதர்களே! உங்கள் அரசனாகிய இராவணனிடஞ் சென்று, இங்கு நீங்கள் கண்டதும், கேட்டதுமாகிய விஷயங்களை ஒன்று விடாமற் சொல்லுங்கள் 'உங்கள் அரசனைக் கொல்ல வேண்டும்' என்பது எங்கள் கருத்தல்ல. சீதையைக் கொண்டு வந்து விட்டுவிட்டால், நாங்கள் திரும்பிப் போய் விடுகிறோம். வீணாக யுத்தம் செய்து, கெட்டுப் போகவேண்டாம்' என்று நான் சொன்னதாக இராவணனுக்குச் சொல்லுங்கள்" என்றார். அவ்வாறே அவர்களும் போய்ச் சொன்னார்கள். யார் சொல்லித் தான் என்னபிரயோஜனம்?' 'இவர்களென்ன மனுடப்பூச்சி தானே' என்று இறுமாப்புடன் இருந்துவிட்டான்.

---

49. உன்னுயிர் நாதன் உயர்சிர மிதுவே.

தூதர்கள் வந்து சொன்ன பிறகு, இராவணன் தனது உப்பரிகையின்மேல் ஏறிக்கொண்டு, சமுத்திரக் கரையோரம் பார்த்தான். கண்ணுக் கெட்டின வரை எங்கே பார்த்தாலும் வானரச் சேனை. அவர்கள் செய்யும் ஆரவாரமோ சமுத்திர கோஷத்திற்கும் மீறி இருக்கின்றது. "மனிதர்கள் நமக் கெம்மாத்திரம்? பயந்து ஓடி விடுவார்கள்" என்று எண்ணியிருந்தோம். இவ்வளவு தூரம் வந்தவர்கள் இனிச் சும்மா திரும்பிப்போவார்களா? எது சண்டை நடந்தே தீரும். ஜயாபஜயம் யாருடை

யதோ யார் கண்டார்? ஏற்கெனவே என் குலத்தவர் களுக்குக் காலனுகத் தோன்றினவனுனது பற்றி, இவ்விதம் எண்ணவேண்டிருக்கிறது. இவனது பேரைக் கேட்ட மாத்திரத்திலேயே மாரீசன் தேகம் நடுங்க வில்லையா? அவனும் இவனது பாணத்தால் மாளவில்லையா? என்னை வென்ற வாலியைக் கொன்றவனல்லவா இந்த மானுடன்! ஆயினும், சண்டை ஆரம்பிக்கு முன்னமே ஓர் உபாயம் செய்துபார்ப்போம். நமக்காகவேண்டியதென்ன? "சீதை மட்டும் விவாகம் செய்துகொள்ள இணங்கி விட்டால், பின்னுல் இவர்களால் நடக்கவேண்டிய தொன்று மில்லையே?" என்றெண்ணித் தன் சிநேகிதனுகிய வித்யுஜிஹ்வனை அழைத்துக்கொண்டு, இராமர் தலையைப்போல் ஒரு மாயத்தலையைத் தன் கையிலேந்திச் சீதைபாற் சென்ருன். அச்சமயம் சீதாபிராட்டி 'வானரப் படைகளோடு தன் நாதர் இலங்கைக்கு வந்துவிட்டார்' என்று கேள்விப்பட்டு, 'ஏது எனக்கும் நல்ல காலம் கிட்டி விட்டதோ' என்று சற்று உற்சாகத்துடனே இருக்கிருள். உடனே இராவணன் எதிரில் தோன்றி, "இதோ உன்னுடைய இராமன் தலை. இதைவைத்துக்கொண்டு, உன்காலத்தைக் கழி. என்னுடைய அரக்கர்கள் முன் நரர்களும், வானரர்களும் எம்மாத்திரம்? ஐயோ பாவம்! நேற்று சாயந்தரம் இங்கு வந்துசேர்ந்தார்கள். இரவே என்மகன் இந்திரஜித்து எனக்குந் தெரியாமல் அங்குச்சென்று இருவர் சிரசையுங் கொய்து, லக்ஷ்மணன் சிரசைக் கடலில் எறிந்துவிட்டு, இதைக்கொண்டுவந்தான். இனி என்னைவிட உனக்குக்கதி வேறில்லையல்லவா? என்ன சொல்லுகிருய்?" என்ருன்.

———

50. இறைவ னிறந்தால் என்னுயிர் போகும்.

"ஐயோ இப்படியும் காலம் வருமா? என் நாதரா இந்தத் துஷ்டர்களால் ஆவிதுறந்தார்? நானும் யாருமற்ற பெரும்பாவியாய் அனுதையாய் அரக்கர்கள் இடத்தில் வாதைப்பட ஆயிற்று? 'வனத்தில் வந்தமானை எனக்கு வேணும்' என்று என் நாயகரிடத்தில் பிடிவாதம் பண்ணினேனே! அதுவு மன்றி அவரைத் தேடிப்போகுமாறு லக்ஷ்மணப் பெருமானிடத்தும் பிடிவாதமாய்ப் பேசினேனே! என் வாதனையைச் சகியாம லல்லவா அண்ணனை நாடிச்சென்றார்! அதன் பலனல்லவா இவ்வளவு விபரீதங்கள் விளைய நேர்ந்தன! துஷ்டனிடத்தில் அசம்பாவிதமான வார்த்தைகளைக் கேட்க நேர்ந்ததே! எதிரிலிருக்கும் தலை என் நாயகர் தலைதானே! இரத்தமும் வடிந்த வண்ணமாய் இருக்கிறதே! இராவணனே என்னென்னமோ பேசுகிறான்! இந்தத் துராத்மாவைத் தொலைத்து விட்டுப் பிறகு யோசிப்போம்" என்றெண்ணி அடா பதரே! பாதகா! ஏழை யழுதகண்ணீர் கூரியவாளன்றோ? என்னை இம்சிக்கும் நீ நெடுநாள் உயிரோ டிருக்க மாட்டாய்! என் நாயகரைக் கொன்றதாய்க் கூறுகிறாய். அவர் இறந்தால் நான் நின்வசமாவேன்' என்று இவ்வாறுரைத்தாய்? அறிவிலி! 'ஒழுக்கத்திற்சிறந்த தம்பதிகளின் உடல்தான் வேறன்றி, உயிர் ஒன்றே யாகும். கணவன் இறக்க நேர்ந்தால் கற்புடைப் பெண்டிர் உயிர் உடலை விட்டுத்தானே பிரிந்துவிடும். அங்ஙனமே நாயகி உயிர் துறந்தால் நாயகனுயிரும் போம்' என்பதை இதுவரை நீ அறிந்திலை போலும்! பேதாய்! உன்னுடைய 'மாயா வஞ்சம்' எவ்விதத்தும் என்னைப் பீடிக்கமாட்டாது' இராமர் இறந்தால் சீதை

யும் இறந்தாள்' என்று நம்படா! மதிகெட்டவனே! வீணில் பெண்பாவம் கட்டிக்கொள்ளாதே! என் முன் இராதே" என்று ஏசினுள். "இராமன் மாண்டும் இவ்வளவு இறுமாப்பா? இனி நீ எங்குச் செல்கிருய் பார்ப்போம்" என்று பயமுறுத்தி இராவணன் சென்றுன். அங்கிருந்த மாயத் தலையும் மாயமாய்ப் போய்விட்டது. 'இராமர் உண்மையிலேயே இவ்வரக்கரால் கொல்லப்பட்டார்' என்று சீதை மூர்ச்சை அடைகிருள்; ஐயோ பாவம்! என்னசெய்வாள்! அரக்கிகள் சூழ்ந்திருந்தார்கள். அம்மன் படும் அவஸ்தையைக் கண்டு பரிகாசம் செய்தார்கள். அப்போது விபீஷணுழ்வார் மனைவி ஸரமை என்பவளும், அவள் புத்திரி திரிசடை என்பவளும் அம்மனைத் தேற்றினுர்கள்.

---

51. மாயச் சிரமிது மயங்கிட வேண்டாம்.

"தாயே! வீணில் ஏன் விசாரப்படுகிறீர்கள்? இந்த துஷ்டனே அவரைக் கொல்பவன்? இவனுடைய ஆட்கள் கையில் மாளத் தக்கவரா உன் மன்னவர்? அரக்கர் குலத்தை வேரறுக்க வந்த காலாந்தகர். தர்மத்தை நிலைநாட்டவந்த தர்ம சொரூபர், பாபிகளை ஹதம் செய்து, பாபத்தைத் தொலைக்க வந்த புண்ணியமூர்த்தி. என்னாதனுக்கு அபயமளித்து, அருகில் சேர்த்துக்கொண்ட கருணுநிதி. 'இவர் மாண்டார்' என்று அந்தத் துஷ்டன் சொன்னல் தாங்கள் நம்பலாமா? இப்படித் துக்கப்படலாமா? தாயே! இங்கிருந்த தலையெங்கே? உண்மையான தலையா

யிருந்தா லல்லவோ இங்கிருக்கும். அந்தத்தலை எவ்வாறு உற்பத்தியாயிற்றோ அவ்வாறே மறைந்து விட்டதம்மா! அரக்கர்கள் மாயத்தைக்கண்டு மயங்கவேண்டாம். தைரியத்தைக் கைவிடலாகாது. இன்னும் இரண்டொரு நாளில் அழைத்துச் செல்வார்; இது நிச்சயம் தாயே'' என்று பலவகையிலும் தேற்றினார்கள். அம்மனும் இது மாயமென நம்பிக் காலத்தை எதிர்பார்த்துக்கொண்டு, இஷ்ட தெவேங்களைப் போற்றித் 'தன்னை இராமர் எப்படியாவது இரட்சிக்க வேண்டும்,' என்று ஸதா சிந்தனைசெய்து கொண்டிருந்தாள். விபீஷணாழ்வார் மனைவியும், மகளும் அருகில்லாவிடில் அம்மன்கதி அதோ கதியாய் முடிந்திருக்கும். ஐயர் பிரயத்தனங்களும் வானரவீரர்களது பெருமுயற்சியும் பிரயோசனமற்றதா யிருக்குமல்லவா?

---

52. சண்டை துவக்கியே சயம்பெற வேண்டும்.

சீதையை இவ்வாறு பயப்படுத்தி விட்டு, இராவணன் ராஜசபை போய்ச்சேர்ந்தான். அங்கு மந்திராலோசனை நடந்தது. துஷ்டர்களே நிறைந்திருந்தார்கள். ஹிதமான ஆலோசனை சொல்லத் தகுந்தவர்கள் யாருமே கிடையாது. "மனிதர்களைக் கொசுக்களாய் நாம் மதித்து வந்தோம் இதுவரை! இப்போது இரண்டு மனிதர்களுக்குப் பயந்து, நாம் நம்முடைய காரியத்தை விட்டுவிடுவதா?'' என்றார்கள். "சீதை தங்களைச்சார்வதே நிச்சயம். வானரர்களுடைய ஆயுளும், இராம லக்ஷ்மணருடைய ஆயுளும் முடிந்தபடியினாலேதான் தங்கள் கையினாலேயே இந்த லங்கையில் மடிய எமன் அவர்களை இங்கு இழுத்து வந்திருக்கிறான்''

என்றார்கள். மாலியவான் என்ற ஓர் அரக்கன் இராவணனுக்குப் பாட்டனாக வேண்டும். அங்கிருந்தவருக் கெல்லாம் விவேகி; சகலமும் அறிந்தவன்; முன்பின் ஆலோசித்துக் காரியங்களைச் செய்பவன், 'ஏதோ நாமும் நம் பேரனுக்கு இச்சமயம் போதிப்போம்' என்று துணிந்து, ராவணனைப் பார்த்து "இலங்காதிபதியே! உன் காரியங்களெல்லாம் விபரீதத்தை விளைவிக்கத்தக்கவைகளாயிருக்கின்றன. முந்தானையில் நெருப்பைக் கட்டிக்கொண்டு இருப்பவர் செய்கையை ஒத்திருக்கின்றன உன் செய்கைகள். சீதையைக் கேவலமாய் நினையாதே. லங்கையைப் பாழாக்க வந்த ,ஊழிகால அக்கினி' எனக் கருது. இராமரைக் கேவலம் இதர மனிதர்கள்போல் பாவிக்காதே. அரக்கர் குலத்தை ஹதமாக்க வந்த எமன்' என்று தெரிந்துகொள். இவ் வானரர்களைக் கேவலம் 'இதர குரங்குகள்' என்று எண்ணி, ஏமாந்து விடாதே. இராம கைங்கரியத்தில் தலையிட்டு, அவதரித்திருக்கும் 'தேவதாம்சங்களென' நம்பு. ஸ்ரீ மகாவிஷ்ணுவே இராமராக உன்னைத் தொலைக்க அவதரித்திருக்கிறார். இது உண்மை. அவரோடு போர் புரிய முடியாது. லக்ஷ்மிதேவியாகிய சீதையை அவரிடம் அழைத்துச் சென்று, உன்னை மன்னிக்கும்படி கேட்டுக் கொண்டு வந்தால் நமக் கெல்லாம் சுகிர்தம் உண்டு. இல்லாவிடில் நாமெல்லோரும் அடியோடு அழியவேண்டியது தான்" என்றான். இந்தச்சமயம் இராவணனுக்கு ஹிதம் சொல்பவர்கள் பேச்சை அவன் மதிப்பானா? 'பாட்டன்' என்று சற்றேனும் மதியாமல் வாயில்வந்தபடி யெல்லாம் நிந்தித்துவிட்டுத்தானே சைன்யஸ்தானம் புகுந்து, யுத்தத்திற்கான சேனைகளைப் பகுக்க ஆரம்பித்து விட்டான்.

53. சுக்ரீவன் அறையால் துடித்தான் ராவணன்.

இலங்கை சேர்ந்த அன்றிரவில் இராமபிரான் கரையோர மிகுந்த சுவேத பர்வதத்தில் இரவைக் கழிக்க எத்தனித்து, அங்குச்சென்றிருந்தார். அச்சமயம் இராவணன் தன் உப்பரிகையின்மேல் ஏறிவானரப் படைகளிலிருக்கும் திக்கை நோக்கி வேடிக்கை பார்த்தான். இதைக் கண்டதும் சுக்ரீவனுக்கு மிகுந்த கோபம் வந்துவிட்டது. "நம் ஐயன் அவஸ்தைதப்படவும், இச் சண்டாளன் கொண்டாட்டமாய் இருக்கவுமா ஏற்பட்டது! இதைப்பார்த்து நாமும் சும்மா இருக்கலாமா?" என்றெண்ணி மேலேபாய்ந்தான். இராவணனிடம் வந்தான். வந்த வேகத்திலே தன் காலால் கிரீடங்களை உதைத்துத் தள்ளினன்; 'அடே துஷ்டா! நான் இராம தூதனடா' என்று சொல்லிக்கொண்டான், பலவிதத்திலும் அவனை அவமானப் படுத்தினன். இராவணன் 'ஏதடா எதிரிலோர் குரங்கு எங்கிருந்து வந்தது? என்ன காரியம் செய்கிறது? எல்லாம் விபரீதமா யிருக்கின்றதே? நேரில் யுத்தம் செய்வது இது ஸமயமல்ல. மாயஞ்செய்து இதனைக் கொல்வோம். முதல் களபலி இதுவாகட்டும்' என்று மனதில் எண்ணினன். சுக்ரீவன் இதை அறிந்தான். இவ்வளவு தூரத்திற்கு இப்போது இடம் வைத்துக் கொள்ளக் கூடாதெனத் துணிந்தான். இராவணனுடைய கன்னங்களில் அறைந்தான். அங்கிருந்து பாய்ந்தான். சுவேதபர்வதமே வந்து சேர்ந்தான். தன்னினத்தாரிடம் சங்கதிகளைச் சொல்லிக் குதூகலித்தான். இதை யறிந்த இராமர் சுக்ரீவனை நோக்கி "ஆபத்துக்கிடமான விஷயங்களில் ஆராயாமல் தலையிட்டுக்

கொள்ளலாகாது. உன்னை நம்பி யல்லவோ இவ்வளவு பேரும் ஒருமனப்பட்டு இங்கு வந்தது? ஆகவே நீ இங்கே இருந்து அவர்களுக்குத் தைரியங் கூறிக்கொண் டிருக்க வேண்டும். உனக்கு ஏதாவது இடையூறு நேரிட்டு விடுமானுல் வானராதிய ரெல்லாம் மயங்குவாரன்ரே" என்று போதித்தார். இரவெல்லாம் கழிந்தது. சூரியனும் தன் வம்ஸ சிங்கமாகிய இராமர் போர் ஆரம்பித்ததைப் பார்க்க வருவான் போல் கிழக்கில் உதயமானுன்.

54. மானுட ரிருவரும் மடிந்து போயினர்.

மறுநாள் பொழுது விடிந்ததும் "இன்னும் பார்ப்போம். கடைசி முறையாக இன்னும் ஒரு முறைசொல்லி யனுப்புவோம்" என, இராமர் அங்கதனை அழைத்து, இராவணனிடம் சென்று, அவனுக்குப் புத்தி சொல்லுமாறு அனுப்பினர். இராவணன் "என்ன நேர்ந்தாலும் சரி; சீதையை விடேன்; இராமருக்குப் பயந்தவனல்லேன்; மனையாளை மீட்டுப்போக வந்தானு? என்னேடு சமாதானம் செய்துபோக வந்தானு? உண்மையான ஆண்மை உள்ள வீரனுயின் இப்படிப் பலமுறை தூதனுப்புவானு? இதோ இந்த நிமிஷமே யுத்தாரம்பம் தான் என்று சொல்லி, அங்கதனைக் கொல்லஎண்ணித் தூதர்களை ஏவினுன். அங்கதன் அரக்கர்கள் பிடிக்கும் வரை சும்மா இருந்து, அவர்களுடன் உயரக்கிளம்பி, அவர்களை உதறித்தள்ளி, இராவணனுடைய பல அரண்மனையைப் பாழாக்கி, இராமர் பால் திரும்பிவந்து சங்கதிகளைச் சொன்னுன். இதற்குள் அரக்கர்படைகளும் வந்து விட்டன. இந்திரஜித்து சண்டைக்கு வந்திருக்கிருன். அகோரயுத்தம் ஆரம்பித்து விட்டது.

அனேக அரக்கர்கள் மாண்டார்கள். வானரர்களில் பலர் மாண்டார்கள். அங்கதன் முன்னுக்கு நின்று போர் புரிந்தான். அரக்கர்கள் சேனையை நிர்தூளி யாக்கினான். இந்திர ஜித்தும் அதிக வீராவேசத்துடன் போர்புரிந்தான். 'ஏதேது அங்கதனால் நாம் தோல்வி யடைய வேண்டியது தான். அவமானப்பட வேண்டியதுதான். எதிரில் நின்று இப்போது போர்புரிய லாகாது' என்று மாயமாய் மறைந்தான். இருட்டும்வரை காத்திருந்தான். இருட்டிய பிறகு அனேக வானரர்களை ஹதம் செய்து இராமரையும், லக்ஷ்மணரையும் நாகபாசத்தாற் கட்டிவிட்டான். அவர்கள் மூர்ச்சை யடைந்தார்கள். இராமலக்ஷ்மணர் மாண்டார்களென்றெண்ணி, இந்திரஜித்து தன் தகப்பனிடஞ் சென்று, தன் பிரதாபங்களைப் பற்றி விமரிசையாய்ச் சொன்னான். இராம லக்ஷ்மணரைக் கொன்று விட்டேன்' என்று கூத்தாடினான். எல்லோரும் நம்பிவிட்டார்கள். இராவணனுடைய இருபது புயங்களும் இறுமாப்படைந்து இருபது மலைபோல் பருத்தன. 'இராம லக்ஷ்மணரும் இறந்து போயினரா!' என்று குதூகலித்தான். இலங்கை முழுதுமே பலதானங்கள்நடத்தி, 'இந்திரஜித்துஜயமடைந்தான்' என்று மகரதோரணங்கட்டி, ஆங்காங்கு கொண்டாடும்படி அரக்கர்களுக்கு உத்திரவளித்தான்.

55. இந்திர ஜித்தன் இசைத்தது பொய்யே!

இராமரும், லக்ஷ்மணரும் இவ்வாறு நாகபாசத்தால் கட்டுண்டு, மூர்ச்சையாய்க் கிடக்க, வானரர்கள் எல்லோரும் துக்க சாகரத்தில் அமிழ்ந்தவர்களாய் 'நாம் ஒன்று நினைக்கத் தெய்வமொன்று நினைத்ததே, இவ்வித ஆபத்

திற்குள்ளாகவா இவர்களை நட்புக் கொண்டு, இவ்வளவு தூரம் கூட்டிவந்தோம்' என்று புலம்பினார்கள். இதுசமயம் விபீஷணர் அங்கு வந்து "இது நாகபாசத்தின் மகிமை. இதன் வேகம் சற்று நேரத்தில் மட்டுப்பட்டுவிடும். நீங்கள் சஞ்சலப்படவேண்டாம். எல்லோரும் உத்ஸாகமாயிருங்கள். எவ்விதஆபத்தும்நேராது" என்று தேற்றினார். கொஞ்சநேரத்திற்குப் பின் இராமர் மூர்ச்சை தெளிந்து, பேசலுற்றார். தம்பியைப் பார்த்தார். விசாரம் வந்துவிட்டது. தம்பியோ இன்னும் மூர்ச்சை தெளிந்தபாடில்லை. "ஐயோ! நம்பினவனுக்கு இவ்வித ஆபத்து நேர்ந்து விட்டதே! என்ன செய்கிறது" என்று விசாரப்பட்டார். ஒன்றும் செய்யத் தெரியாமல் மயங்கினார். மறுபடியும் மூர்ச்சை அடைந்தார். இவ்விதமாய் இவர்கள் இங்கு அவஸ்தை அடைந்துகொண் டிருந்தார்கள். இன்னும் எவ்வளவுநேரம் செல்லுமோ இவர்கள் மூர்ச்சை தெளிந்து எழுந்திருக்க! இங்கு இப்படியிருக்க இராவணன் அதிக சந்தோஷத்துடன் 'திரிசடை' என்கிற விபீஷணன்பெண்ணை அழைத்துச் சீதைக்குப் போர்க்களத்தில் இராமலக்ஷ்மணரிருக்கும் அலங்கோலத்தைக் காட்டிவரச் சொன்னான். அவ்வாறே அவ்விருவரும் வந்து, பரிதாபக் காட்சியைக் கண்டார்கள். சீதை துக்கப்பட்டு அழுதாள். தேவி அழுததும் தேவநாட்டு ஸ்திரீகளும் அழுதார்கள். 'சரஸ்வதி, லட்சுமி, பார்வதியுங்கூட அழ ஆரம்பித்தார்கள், அழுதார்கள்' என்றால் அம்பாள் அடைந்த துக்கத்திற்கு அளவு சொல்ல முடியுமா? துக்கத்தினாலேயே பிராட்டி மூர்ச்சையடைந்து, விழுந்துவிட்டாள். இதைக்கண்ட திரிசடை அம்மையைத் தூக்கி, மூர்ச்சைதெளிவித்துத் "தாயேபயப்படவேண்டாம். எவ்வித ஆபத்தும்நேரவில்லை. வானரச்சேனைகளைப்பாரும்.

அதோ என் தந்தையைப் பாரும். யார் முகத்திலாவது விசனக்குறி இருக்கிறதா? எல்லோரும் எவ்வளவு உல் லாசமாய் இருக்கிருர்கள் பாரும்? நாளேயே மறுபடியும் யுத்தம் நடக்கும். ஏதோ காரணத்தால் மூர்ச்சை அடைந் திருக்கிருர்களே யன்றி, இறந்து போகவே இல்லே. இந்திர ஜித்தன் இசைத்தது முற்றிலும் பொய்யே" என்று தேற் றித் தைரியப்படுத்த, அம்மனும், சிற்சில காரணங்களேக் கொண்டு மூர்ச்சை அடைந்திருப்பதாய்த்தெரிந்து, திரும் பவும் அசோகவனம் சென்ருள். அர்த்த ராத்திரி யாயும் இராமரும், லக்ஷ்மணரும் மூர்ச்சை தெளிந்த பாடில்லே. வானர வீரர்கள் மாறி மாறி ஒரு ஸமயம் துக்கிப்பதும், ஒரு ஸமயம் தைரியப் படுவதுமா யிருந்தார்கள். அச் சமயம் மரங்கள் வேரோடு விழுவது போலும் 'என்ன பிர மாதம் விளேயுமோ' என்று எல்லோரும் திகைக்கும்படி பிரசண்டமாருதம் கிளம்புவது போலும் ஓர் பேரொலி உண்டாயிற்று. இந்த ஆர்ப்பாட்டம் கருடாழ்வார் பறந்து வரும் வேகத்தால் ஏற்பட்டது. இவர் சிறந்த விஷ்ணு பக் தர், ஸ்ரீமது நாராயணருடைய தாசர். இரண்டு சகோதரர் களுக்கும் ஏற்பட்ட ஆபத்தை ஞானதிருஷ்டியா லறிந்து, உடனே இவ்விடம் வந்தார். "பாம்புக்குப் பகை கருடன்" என்பார்களே! அதுபொய்யா? கருடாழ்வார் பறந்துவரும் காற்றுப் பட்டதோ இல்லேயோ? நாகபாசக்கட்டு விடுபட் டது. இராம லக்ஷ்மணர்கள் நித்திரையிலிருந்து எழுந்தது போல் எழுந்தார்கள். கருடாழ்வார் ஸ்ரீராமதரிசனம் செய்து கொண்டு, குதூகலத்துடன் சென்ருர். வானரப் படைகளுக் கெல்லாம் உற்சாகமும், கொண்டாட்டமும் ஏற்பட்டன. அத்தியந்த சந்தோஷத்துடன் அனேவரும் ஒருங்குகூடி,மிக்க ஆரவாரம் செய்துகொண் டிருந்தார்கள்.

56. சேனை இழந்தனை சென்றுவா நாளை!

மறுநாள் விடிந்ததும், இராவணன் சந்தோஷமாய்ச் சபாமண்டபம் வந்து சேர்ந்தான். இந்திரஜித்தும் இறுமாப் புடன் அங்கு வந்து சேர்ந்தான். சபையி லிருந்தவர்க ளெல்லோருமே அதிகக் கொண்டாட்டத்துட னிருந்தார் கள். இராமலக்ஷ்மணுள் 'இறந்துபோய்விட்டார்கள்' என் றே எல்லோரும் நிச்சயமாய் எண்ணிவிட்டார்கள். இச் சமயம் இரண்டு தூதர்கள் ஓடோடியும் வந்து "அரசனே! அபயம். இலங்கையின் நாயகனே! அபயம். வானரர்களின் சேஷ்டைகள் சகிக்க முடியவில்லை. அண்ணன் தம்பி இரு வரும் குரங்குகளும் சண்டைக்குத் தயாராயிருக்கின்றனர்" என்று சொல்லு முன்னமே சபையில் எல்லோரும் பிர மித்து 'எமாந்தோம்' என்றேங்கி அரக்கர்சேனையை ஆயத் தம் செய்யலானார்கள். யுத்தத்திற்குப் புறப்பட்டார்கள். அகோரயுத்தம். அரக்கர்களுக்குக்கஷ்டம் அதிகமாய்விட் டது. வானரர்களால் மாண்ட அசுரர்களுக்குக் கணக்கே இல்லை. இராவணன் இச் சங்கதிகளைக் கேள்விப்பட்டுத் தானே நேரில் போர்க்கோலம் பூண்டு புறப்பட்டான். மூண்டபோர் ஆரம்பமாய் விட்டது, 'மானுடர்களும், குரங் குகளும் தானே' என்று சற்று மமதையாய் இராவணன் இருந்தான். காரியம் மீறிவிடும்போல் இருந்தது. பிறகு மும்மரமாய் யுத்தத்திற்கு ஆரம்பித்தான். இருபக்கத்தாரி லும் இறந்தவர்கள் அநேகர். 'எமாந்திருப்பது இனி நமக் கேற்காது' என்று இராம பிரானே இராவணனோடு நேரில் கை கலக்கலானார். கடைசியில் லங்கையரசன் ரதத் தையு மிழந்து, ஆயுதங்களையு மிழந்து, படையாட்களையும்

இழந்து, தனியே நின்று தத்தளித்தான். 'இச்சமயம் இவனை எளிதில் கொன்றுவிடலாம். ஆனால் கருணைநிதியாகிய காகுத்த சிங்கம் அவ்விதம் செய்வாரா? தர்மசொரூபியாகிய தாசரதி அதர்ம யுத்தத்திற்கு ஆரம்பிப்பாரா? இராமர் இராவணனைப் பார்த்து "போர்வீரர்களிற் சிறந்தவனே! போர்க்கோலங்களையு மிழந்து, ரதத்தையுமிழந்து, நிராயுதபாணியாய்ப் பாதசாரியாகினை. போர்புரிந்து மிகவும் களைத்தனை. இப்போது என் கையிலுள்ள இப் பாணத்தால் உன் உயிரைப் போக்கிவிடலாம். ஆனாலும் அது எனக் கழகல்ல, இனியாவது நீ என் தேவியை என்னிடத்திற் கொண்டுவந்து சேர்த்து, நின் தம்பியாகிய விபீஷணனுக்கு லங்கையை முடிசூட்டி, வைப்பாயானல் நின் ஆவியை நினக்களிக்கிறேன். பிறகு நின் இஷ்டப்படி செய்க. இன்று நீ இவ்வளவு யுத்தம் செய்தது போதும். இன்றிரவு இளைப்பாறி, ரதமும் ஆயுதங்களும் சேகரம் செய்துகொண்டு, நாளை வந்தால் மறுபடியும் போர் புரியலாம். இப்போது இல்லம் சென்றுவா'' என்றார். இதைக்கேட்ட இராவணன் 'இத்துடன்விட்டதேபோதும்' என்று ஓட்டமெடுத்தான். இருந்தாலும் இராமபிரான் வார்த்தையால் துக்கமும், கோபமும் அடக்க முடியவில்லை. என்ன செய்வான் பாவம்! 'மறுநாளைக்காவது தக்க ஏற்பாடு செய்யலாம்' என்று எண்ணிக்கொண்டே தலைகுணிந்தவண்ணமாய் அரண்மனைக்குச்சென்றான். யுத்த களத்தில் அடிபட்டதும் அவமானப்பட்டதும் இராமபிரானால் ரட்சிக்கப்பெற்றதும் பற்றி அவனுக்கு யாதொரு கவலையும் இல்லை, ஆனால் "சீதை மட்டும் தன்னைப்பற்றி எப்படி நினைப்பாளோ" என்ற ஒரு வருத்தமும், வெட்கமும் அவன் மார்புருகிச் சென்றுகொண்டே நின்றது.

57. நிகும்பலை யாகம் நிகழ்த்தி வருவேன்.

———

அரண்மனை வந்து சேர்ந்ததும் மறுநாள் யுத்தத்திற்குப் போகத் தன் தம்பி கும்பகர்ணனை எழுப்பி அழைத்து வரச்சொன்னான், 'குளிக்கப்போய்ச் சேற்றை வாரிப் பூசிக் கொண்டது'போல நித்தியத்துவம் அடையத் தபசுசெய்து, நித்திரையைச் சம்பாதித்துக் கொண்ட இந்தத் தம்பியோ அந்தச்சமயத்தில் அயர்ந்து தூங்கிக்கொண் டிருந்தான். யாராலும் என்ன பிரயத்தனம் செய்தும் எழுப்ப முடிய வில்லை. கடைசியில் பற்பல யுத்திகள் செய்து, பிரயாசைப் பட்டு எழுப்பினர்கள். எழுந்ததும் எதிரிலிருந்த மலை போன்ற மதுமாம்ஸங்களைப் புசித்த பின்னர் தன்னை எழுப்பியதின் காரணத்தைக் கேட்டு அறிந்துகொண் டான். உடனே 'சரி நமக்கு அந்திய காலம் கிட்டியது' என்று உறுதி செய்து கொண்டான். அண்ணனிடம் சென்றான். அவன் செய்யும் அக்ரமங்களை எடுத்துச் சொல்லி, நல்ல வழிப்படுத்த முயன்றான். அண்ணன் இணங்குவதாகக் காணோம். 'உண்ட வீட்டிற்கு இரண்டகம் செய்யலாகாது' என்று உடனே யுத்தத்திற்குப் புறப் பட்டான். மஹா வீர பராக்கிரமசாலி. நடுத்தூக்கத்தில் எழுப்பப்பட்டவன் அல்லவா? தூக்கமயக்கத்தோடு யுத்தம் செய்தான். அகோர யுத்தம். எதிர்ப்பட்டவர்களையெல்லாம் ஹதாகுதம் செய்து, தவிடு பொடியாக்கினன். இருந்தாலும் வானரவீரர்கள் சற்றும் சலிக்காமல் யுத்தம் செய்து, இவனை இம்சித்தார்கள். கேவலம் தனக்கு இரையாகக்கூடிய மனிதர்களோடும், குரங்குகளோடும் போராட முடியாமல் அவர்களால் நன்றாய் அடிபட்டு, இடிபட்டு,

உதைபட்டு, அவமானப்பட்டுத் 'தனக்கு அந்தியகாலம் சமீபித்துவிட்டது' என்று உறுதியாய் நம்பி, உக்கிரமமாய் யுத்தம் செய்து உயிர் துறந்தான். பிராணன் போகும் சமயத்தில் இராமருடைய சொரூபத்தை அடைந்தவனாய் "அடைக்கலம் புகுந்த விபீஷணனை ஆதரிப்பது உமது பாரம்" என்று சொல்லிப் பிராணனை விட்டான். தம்பி மாண்ட விபரம் தெரிந்து, இராவணன் அதிக துக்கத்தோடும், கோபத்தோடும் இந்திரஜித்தனை மறுபடியும் சண்டைக்கு அனுப்பினான். முன்னொரு முறை ஏமாந்தது போல் ஏமாறாமல் இந்தத்தடவை இவ்விருவரையும் 'எமனுலகமே அனுப்பவேண்டும்' என்று உறுதி செய்து கொண்டு, அதிமும்மரமாய் யுத்தம் செய்தும், இவர்களை வதைக்க முடியாதென்று கண்டு, ஒரு மாயாஸ்திரத்தினால் இராம லக்ஷ்மணர்களையும், மற்ற வானர வீரர்களையும் கட்டிவிட்டு, யாவருக்கும் தெரியாமல் மறைந்துவிட்டான் அந்தச்சமயம் 'ஜாம்புவன்' என்கிற கரடி அரசனால் சஞ்சீவி இலைகளின் மகத்துவத்தை அறிந்து கொண்ட ஹனுமான் 'அந்த இலைகளின் மகத்துவத்தால் எல்லோரையும் பிழைப்பிக்கலாம்' என்று அறிந்து, அவைகளிருக்குமிடத்தைத் தெரிந்துகொண்டு, 'தேடிப்பார்க்கத் தாமதப்படுமே' என்று துணிந்து, அந்த இலை இருக்கும் பர்வதத்தையே நொடிக்குள் பெயர்த்துக்கொண்டு வந்து எல்லோரையும் பிழைப்பித்தார். இதை அறிந்த இந்திரஜித்தன் "இவர்கள் மஹாவீரர்கள். நமது நிகும்பலை யாகத்தைப் பூர்த்தி செய்தாலன்றி இவர்களைஜெயிக்கமுடியாது" என்று கண்டு, சீதையைப்போல் ஓர் உருவம் மாயத்தா லுண்டாக்கி, இராமலக்ஷ்மணர்களும், வானரவீரர்களும் காணும்படி அதை வெட்டி யெறிந்துவிட்டு "இதோ போகிறேன்

அயோத்திக்கு அங்குப் போய்ப் பரதன், சத்துருக்கனன் முதலிய அனைவர்களையும் கொல்லுகிறேன்'' என்று உக்ரா வேசங்காட்டி, அவர்கள் துக்கப் பட்டுக்கொண்டிருக்கும் சமயத்தில் அயோத்திக்குப் புறப்படுவதுபோல் பாவனை காட்டித் தன் யாகத்தை நிறைவேற்ற இலங்கை சென்றான்.

---

58. இறந்து போனன் இந்திர ஜித்து.

மாயாசீதை மாண்டதைக் கண்ட இராம லக்ஷ்மணர்களும், வானரவீரர்களும் "உண்மையிலேயே சீதை மாண்டாள்'' என்று எண்ணித் துக்க சாகரத்தில் ஆழ்ந்தவர்களாய்ப் பிரமித்து, "ஐயோ! இனி என்ன செய்வது! பட்ட பாடெல்லாம் வியர்த்த மாயிற்று! சீதையை அழைத்துச் செல்ல வந்த நாம் சீதையை இழந்து, அவதிப் பட நேர்ந்ததே! இப்படியும் துஷ்டர்கள் ஸ்திரீ ஹத்தி செய்வார்களோ'' என்று புலம்புகிறார்கள். இராமர் "இப்படியும் இருந்ததா என் தலைவிதி'' என்று அலறி அழுதார் ஒரு சமயம். துக்கம் சகிக்க முடியாமல் மூர்ச்சையாய் விழுந்தார் மற்றொரு சமயம். இதை யெல்லாம் அறிந்த விபீஷணர் "அந்தோ! நமது ஐயன் உண்மை அறியாமல் மயங்குகிறார். சீதையே மாண்டதாக எண்ணி, ஏங்குகிறார். இச் சமயம் நாம் தேற்றாவிடில் அனர்த்தம் விளையும்'' என்று எண்ணி, இராமச்சந்திரரை நோக்கி, "சுவாமி! தேவரீர் சங்கதி யறியாமல் விசாரப்படலாமோ? இது அந்த 'இந்திரஜித்தன் மாயம்' என்றே நினைக்கிறேன். ஆனால் இப்பொழுதே நான் அசோகவனஞ் சென்று,

உண்மை அறிந்து வருகிறேன். உத்திரவு கொடுங்கள் சுவாமீ!'' என்று வணங்கி நின்ருர். ஐயன் உத்திரவு பெற்ருர். ஓர் வண்டு ரூப மெடுத்தார். அசோகவனம் சென்ருர். அம்மனைக் கண்டார். யாதொரு குறைவு மில்லாது பிராட்டி ஜீவித்திருப்பதையும், தம் நாயகியும் மகளும் அருகிருந்து பணிவிடை செய்துகொண்டி ருப்பதையும் கண்டு, தாம் வந்த விபரம் மற்றவர் அறியாவண்ணம் திரும்பி வருகிற போது இந்திரஜித்தன் நிகும்பலை யாகத்துக்கு வேண்டிய பிரயத்தனத்துடன் சென்றிருப்பதை அறிந்து, ஓடோடி வந்து சுவாமி பாதங்களில் வீழ்ந்து, நமஸ்காரம் பண்ணி, விவரத்தை அறிவித்தார். "இந்திரஜித்து நிகும்பலையாகம் முடித்து விட்டால் அவனை ஜயிப்பதற்குத் தேவராலும் முடியாது. ஆகவே இப்பொழுதே சென்று, அதைக்கெடுக்கவேண்டும்'' என்ருர். இராமருக்கு வியப்பும், ஆத்திரமும் பெருகிற்று. உடனே லக்ஷ்மணரைக் கடைக்கண்ணல் பார்த்தார். "இந்த க்ஷணத்திலேயே இந்திரஜித்தனது சிரசைத் தங்களது பாதத்திற் சேர்க்கின்றேன், இதோ புறப்படுகிறேன்'' என்ருர் லக்ஷ்மணர். விபீஷணுழ்வாரும், ஹனுமாரும், சிலவானரவீரர்களுமாய் இளைய பெருமானேடு சென்ருர்கள். உடனே துஷ்ட இந்திரஜித்தன் இஷ்டம் நிறைவேருவண்ணம் அவன் யாகம் செய்யுமிடத்திற்கு வந்து சேர்ந்தார்கள். எங்கு பார்த்தாலும் வேத கோஷம். யாகமோ அதி தீவிரமாயும் மும்மரமாயும்நடந்தது. பார்த்தார் லக்ஷ்மணர். இந்திரஜித்தை நோக்கி, வாயில் வந்தபடி யெல்லாம் தூஷித்து, அவனது யாகத்தைக்கெடுத்து, அவனைப் போருக்கழைத்தார். யாக பூமியிலேயே அகோர யுத்தம் ஆரம்பித்துவிட்டது. சற்று முன்னல் வேதகோஷம் நிறைந்திருந்த இடமெல்லாம்

இப்போது யுத்தகோஷம் முழங்கிற்று. சில சமயம் லக்ஷ்மணப் பெருமான் சோர்ந்து போனார். சில சமயம் இந்திரஜித்தன் சோர்ந்து போனான். சில சமயம் அரக்கர் சேனைகள் ஆர்ப்பாட்டம் செய்தன. சில சமயம் வானர வீரர்கள் ஆரவாரமே அதிகமாயிருந்தது. கடைசியாய்ப் போர் முகத்தில் லக்ஷ்மணர் பாணத்தால் இந்திரஜித்து மாண்டான். சில தூதர்கள் ஓடி, இராவணனிடம் இந்தத் துக்க சமாசாரத்தை வெளியிட்டார்கள். லக்ஷ்மணர் தாம் சொன்ன சபதப்படியே இந்திரஜித்தின் சிரசைக்கொண்டு வந்து; இராமருடைய அடிக்கமலம் சேர்ப்பித்தார்.

---

59. பெண்ணைக் கொல்பவன் பேடி யல்லவா?

"தம்பீ கும்பகர்ண! எங்கே சென்றாய்? உன் நித்திராலயத்தைச் சூனியமாக்கி, இப்போது எங்கே நித்திரை செய்கிறாய்? என் அருமை மக்களெங்கே? எல்லோரும் களபலி யானார்களே! யார் போனாலும் போகட்டும், மேகநாதனாகிய இந்திரஜித்து ஒருவனாவது தப்பிப் பிழைத்திருக்க லாகாதா? அநியாயமாய் அவனும் தொலைந்தானே! ஐயோ! அனைவரையும் இழந்து, பரதேசியாய்த் தவிக்கலானேனே! இப்படியும் காலகதி ஏற்பட்டதே! என்ன செய்யலாம். நமக்கு இரையாகக் கூடிய மானுடர்களாலும், வானரர்களாலும் அவமானமடைய நேரிட்டதே! திரிமூர்த்திகளும் என் பேரையும், கும்பகர்ணன் பேரையும், இந்திரஜித்தன் பேரையும் கேட்ட மாத்திரத்தில் நடுங்குவார்களே! இப்போது அந்தப் பராக்கிரம

மெல்லாம் எங்கே தொலைந்தன? இவ்வளவும் ஏற்படக் காரணம் சீதை யல்லவா? லங்கையைப் பாழாக்க வந்த காலாந்தகி; என்னைத் தனியே தவிக்கவிட்ட துராத்மா; கொண்ட கணவனையே பரதேசியாக்கிய பாதகி; இவளால் இன்னும் என்ன அனர்த்தம் விளையுமோ? இந்தச் சண்டாளி உயிரோ டிருத்தல் கூடாது; இவளைக் கொன்று விட்டு மறுவேலை பார்க்கிறேன்" என்று உருவின கத்தியுடன் ஆவேசங்கொண்டு, அசோகவனம் நோக்கி ஓடினான். உடனே அருகிலிருந்த மந்திரி "ஐயா லங்கேசா! என்ன செய்யத்துணிந்தீர்! இதற்காகவா அரக்கர்குலத்தை அழித்தீர்? தீராப்பழியைத் தேடிக்கொண்டீர்! பெண்பாலிடம் உமது பராக்கிரமத்தைக் காட்டப்பறந்துசெல்கிறீர். நன்று! நன்று! நீர் செய்ய உத்தேசித்த காரியம் வெகு நன்று! ஆதியிலேயே இக்காரியம் செய்திருக்கலாமே! இப்போது இப்படிச் செய்தால் உலகம் நகைக்காதா? வீணாகப் பெண் பழிக்கு என் ஆளாகின்றீர்! "பெண்ணைக் கொல்பவன் ஒரு பேடி" என்பதை நீர் அறிந்திலீரா? மனிதர்களிடத்திலும் வானரங்க ளிடத்திலும் உமது பராக்கிரமத்தைக் காட்டலாமே! ஜயித்துத் திரும்பினால் சீதையை அனுபவிக்கலாமே" என்று போதித்தான். இராவணன் 'நாம் செய்ய எத்தனித்தது தவறு' என்று கண்டு, வெகு நேரம் ஆலோசித்துக்கொண் டிருந்து, ஒருவாறு மனந்தேறிப் பின்னர் தனது மூலபலத்தைத் தயாராக்கச் சென்றான்.

———

60. மூல பலத்தொடும் மோதினரிருவர்.

"ஆபத்தான காலத்தில் உதவவேண்டும்" என்றே அதிவீரதீர பராக்கிரம சாலிகளாகிய அனுபோக முள்ள மஹா வீரர்கள் அடங்கிய ஒரு பெருஞ்சேனை எப்போதும் சித்தமா யிருந்தது. "எப்போது சண்டைக்குச் சமயம் வாய்க்கும்; எப்போது நமது பராக்கிரமங்களைக் காட்டலாம்" என்று சதா சமயத்தை எதிர் பார்த்துக் கொண்டிருந்தது. அரக்க சிரேஷ்டர்கள் கணக்கிட முடியாத அவ்வளவுபேர் இந்தச் சேனையில் இருந்தார்கள். இதற்குத்தான் மூலபலம் என்று பெயர். மற்ற எவராலுமே காரியம் சாதிக்க முடியாமல் போனால்தான் இந்தச் சேனையை வெளிப் படுத்துவது. அவ்வித சமயம் இப்போதுதான் ஏற்பட்டது. இந்தச் சேனையின் பராக்கிரமத்தால் அனுகூலம் ஏற்பட்டால் உண்டு. இல்லாவிட்டால் அவதிப்பட வேண்டியதுதான். லங்காதிபன் இந்த மூலபல வீரர்களை யுத்தத்திற்குஅனுப்பினான். "இராமலக்ஷ்மணுள் மூலபலத்திற்கு முன்னிற்க மாட்டார்கள்" என்று ஆர்ப்பரித்தான். வானரப் படைகளுக்கும், மூலபலப் படைகளுக்கும் யுத்தம்நடந்தது. வெற்றி தோல்வி உள்ளபடியே அறிய முடியவில்லை. அதி உக்ரமயான யுத்தம்; மாயமான போர். அரக்கர்கள் மாய்கையை யார் அறிவார்கள்? மூலபலமே முற்றிலும் ஜயித்து விடும்போ லிருந்தது. வானரர்கள் இன்னது செய்வதென்று அறியாமல் ஓடினார்கள். "இவ்வளவு பாடுபட்டதும் வியர்த்தமாய் விடும்போ லிருக்கிறதே! வானரர்கள் அடியோடு தொலைந்து விடுவார்கள்

போலிருக்கிறதே! சும்மா இருப்பது கூடாது" என்று இராமர் மனதில் தீர்மானித்து, மோஹனாஸ்திரத்தை மூல பல சேனைகள் மேல் விட்டார். இதன் மகிமையால் மூல பல சேனை எங்குப் பார்த்தாலும் ஒவ்வொருவருக்கும் தங்கள் தங்கள் பக்கத்தி லிருப்பவர்களே இராமர் போல் தோன்றினார்கள். தங்களுக்குள்ளாகவேஒருவரையொருவர் 'இவர்தாம் இராமர்' என்று எண்ணிக்கொண்டு வெட்டியும், குத்தியும் வீழ்த்தினார்கள். அம்மூலபலம் தானாகவே அழிந்து எங்கும் பிணக்காடாய் நிறைந்தது. இவ்விதம் அன்றி வேறெவ் விதத்தாலும் இதை அழிக்க முடியாது. 'இத்தன்மை வாய்ந்த மூலபலமும் மாண்டுவிட்டது' என்கிற சமாச்சாரம் லங்கேசன் காதிற்பட்டது. புழுப்போல் துடித்தான். 'அனர்த்தம் வந்ததே' என்று அலறினான். ஆதியில் ஏற்பட்ட சாபங்க ளெல்லாம் ஒவ்வொன்றாய் அவன் ஞாபகத்திற்கு வந்தது. மனதை வருத்தினது. விசாரமடைந்தான் ஒரு சமயம். ஆவேசத்தில் ஆர்ப்பரித்தான் மறு சமயம். "இந்த மனிதர்களையும், வானரர்களையும் விட்டேனோ பார்" என்று அட்டகாசம் செய்தான் ஒரு சமயம். 'இனி யாரும் கதி இல்லை' என்று தானே நேரில் போர்க் கோலம் பூண்டு, யுத்தத்திற்குப் போவதெனத் தீர்மானித்தான். முன்னொரு தடவை யுத்தத்திற்கு வந்து, அவமானப் பட்டவனல்லவா இவன்? ஆகவே கணக்கற்ற ராட்சதசேனைகளுடனும், அனேக தண்டுதளங்களுடனும் புறப்பட்டான். இலங்கை முழுவதும் விதவையான ராட்சத ஸ்திரீகளே அன்றி, ஒரு புருஷ ராட்சதன் மருந்துக்குக்கூட அங்குஇல்லை. ஆகவே அது பயங்கரமான தன்மையாயும், அமங்கலமாயும், நிர்ச்சப்தமாயு மிருந்தது.

———

61. இராமரை எதிர்த்தான் இராவணேஸ்வரன்.

'உலகத்தில் எந்தப் பொருளையாவது, எந்த விஷயத்தையாவது பற்றிப் பேசும்பொழுது ஒன்று மற்றொன்றைப்போ லிருக்கிறதென்று, அதாவது 'இதற்கு இது இணை அல்லது சமானம்' என்று உபமான உபமேயங்களால் விளக்கிக் காட்டுவது வழக்கம். அப்படி இணை காட்டி விளக்க முடியாத விஷயங்களே கிடையாது' என்று உறுதி சொல்லலாம். ஆனால் அதற்கும் ஒரு விலக்கு உண்டு. அதுதான் இராம ராவண யுத்தம். 'இந்த யுத்தம் வேறு எந்த யுத்தம்போ லிருக்கிறது' என்று யாராவது கேட்டால் வேறொரு யுத்தத்தை இணைகாட்டிச் சொல்ல வழியின்றி 'இராம ராவண யுத்தம்போல்தான் இருக்கிறது' என்றுதான் சொல்லமுடியும். இவ்வித இணையற்ற அகோர யுத்தம் முன் நடந்தது மில்லை. இனி நடக்கப் போகிறது மில்லை. இராவணனே நேரில் யுத்தத்திற்கு வந்து எதிரில் நின்றான். அவன் யார்? ரிஷிகளையும், பிராமணர்களையும், மாதர்களையும், அரசர்களையும், இம்சிப்பதும், அவமானப் படுத்துவதும், கொல்வதுமாகிய தொழில்களையே மேற்கொண்ட கொடிய துஷ்டர்களின் தலைவன். 'எந்த அரக்கர்களுடைய இம்சையினின்றும் தண்டகாரண்ய ரிஷிகளைக் காப்பாற்றுகிறேன்' என்று பிரதிக்ஞை செய்தாரோ அந்தப் பரம புருஷரின் தர்ம பத்தினியாகிய சீதா பிராட்டியாரைக் கவர்ந்த கள்வன். இவ்வளவு பிரமாதத்திற்கும் ஆதிகாரணமாய் ஏற்பட்டவன். என்னதான் நல்லபுத்தி சொல்லியும் கேளாதவன். 'இனி இவனை எக்காரணத்தும் சும்மாவிடக்கூடாது' என்று உறுதியாய்ப்

பிரதிக்கினை செய்து கொண்டார் இராமர். இராவணேஸ்வரன் இராமர் சேனையைக்கண்டான். அரக்கர்களின் பிரேதத்தைக் கண்டான். இந்திரஜித்தைக் கொன்ற லக்ஷ்மணர் எதிரில் நின்ருர். தன்னை அவமானப்படுத்திய ஹநுமார், சுக்ரீவன், அங்கதன் முதலியவர்களும் நின்ருர்கள். தன்னுடன் பிறந்தே தனக்கு விரோதமாய் ஏற்பட்ட விபீஷணரும் இருந்தார். இவர்கள் மத்தியில் நடுநாயகம் போல் தன் 'சத்துரு' வாகிய இராமர் விளங்கினர். இவற்றைக் கண்டதும் ஆக்கிரோஷம் பொங்கிவந்து, முன்பின் பாராது, 'இன்னதுதான் செய்கிறேம்' என்று கருதாமல் "எல்லோரையும் ஹதம் செய்த பிறகே லங்கைக்குத் திரும்புகிறது" என்று உறுதி செய்து கொண்டான். இருகட்சியிலும் அதி வீராவேஷத்துடன் யுத்தம் ஆரம்பித்து விட்டது. பார்த்த விடமெல்லாம் ஒரு நொடிக்குள் பிணக்காடாய் இருந்தது.

---

62. வஞ்சரா வணனை வதைத்ததோர் பாணம்.

"மஹா மாயாவியும், அரிய பெரிய வரங்கள் பெற்றவனுமாகிய தசகண்டனே போர் செய்கிருன்" என்ருல் அவனை வெல்வது எளிதா? அரக்கர்கள் கொக்கரிக்கிருர்கள். வானரர்கள் திண்டாடுகிருர்கள். "இராவணனே வெற்றி அடைவான். இராமர் பிரதிக்கினை நடவாது. நாமெல்லோரும் ஊர் திரும்பப் போவதில்லை. எமனுலகு தான்கிட்டும்" என்று ஏங்கினர்கள் இராமர் பக்கத்துள்ள சேனுவீரர்கள். இராமர் தம் வில்வித்தை முதலிய போர்த்திறனை யெல்லாம் காட்டிச் சலித்தார். "இது ஏது! இவனை

ஜயிக்க முடியாதுபோலிருக்கிறதே" என்று கலங்கினர். பாவம் வேறு என்ன செய்வார்? இராவண னுடைய தலைகளை வெட்ட வெட்ட அவைகள் முளைத்துக் கொள்கின்றன. இதற்கென்ன செய்யலாம்? இராமர் கட்சி யெல்லாம் நடுங்கினர்கள். இன்னது செய்வ தென்று தெரியாமல் விழித்தார்கள். இராவணனே பிரசண்டமாருதம் போல் வானரப் படைகளை மாட்டுகிருன். முன்பின் பாராமல் எல்லோரையும் ஓட்டுகிருன். யாரும் எதிர்த்துவர முடியாமல் வாட்டுகிருன். தன் போர்த் திறமை எல்லாம் ஒருங்கே காட்டுகிருன். "ஏதேது அனர்த்தம் விளைந்து விட்டதே! இனி என்ன செய்வது" என்று பிரமித்துப் போய் இராமர் "பார்ப்போம்; நாம் ஏன் தைரியத்தைக் கைவிடவேண்டும்? இவன் ஆரவார மெல்லாம் எந்நேரம் நடக்கும்? தர்மமே வெல்லும். அதர்மம் வெல்லுமோ? அட்டகாசங்கள் பலமாக இருந்தாலும் என்ன பிரயோசனம்" என்று சற்று யோசித்துப் பிரம்மாஸ்திரத்தைக் கையிலெடுத்தார். கோதண்டத்தின் கண் தொடுத்தார். இராவணன்மேல் விடுத்தார். அதைத் தடுக்க அவன் எவ்வளவோ பிரயத்தனப் பட்டும் முடியாமற் போய்விட்டது. பாணமோ இராவணன் மார்பில் தைத்தது. உலகத்திற்கே க்ஷேமத்தை விளைவித்தது. இருபது கைகளோடும், பத்துச் சிரங்களோடும் இராவணன் தொப்பென்று பூமியிற் சாய்ந்தான். அவன் சாய்ந்தபோது, பாவமே திரண்டுருண்டு, உருக்கொண்ட ஓர் பெரிய விருக்ஷமானது வேரற்றுப் பூமியிற் சாய்ந்தால் எப்படி இருக்குமோ அப்படி இருந்தது. இராமபிரானுற் பிரயோகிக்கப் பட்ட ஒரு பிரம்மாஸ்திரம் இராவணன் மார்பிற் புகுந்து, நேரே ஊடுருவாது மார்பு முழுதினுமே எள்ளிருப்பதற்கும் இடமின்

றிச் சல்லடைக் கண்களாகத் துளைத்துவிட்டுச்சென்றமை யால், அவன் மரணவஸ்தையிற் கிடந்து, வேதனையுற்று, மடியும்படி நேர்ந்தது. அந்த ஒரு பாணம் அவனை அவ் வாறு செய்ததற்குக் காரணம் "அவனது உயிரைத்தான் தேடியதோ; அல்லது 'பிராட்டியின்மீது அவன் வைத் துள்ள காதல் எங்கிருக்கும்' எனத் தேடியதோ" என்று சந்தேகிப்பதற் கிடமாயிருந்தது. இவ்வளவு அலங்கோ லத்துடன் இராவணன் மாண்டான். இவ்வளவு காலம் வரை இராவணனுக்குப் பயந்து, சாய்வாக உதயமாகி வரும் சூரியன் அப்போது பயமற்று, இவனது அலங்கோ லத்தைக் கண்டு களிக்கும் பொருட்டே லங்கைக்கு மத் தியில் உதயமாயினன். அரக்கர்கள் ஓடி ஒழிந்தார்கள். வானரர்கள் ஆர்ப்பரித்தார்கள். "கொண்டகாரியம் நிறை வேறியது" என்று பிரமானந்தமாய்க் கூத்தாடினார்கள்.

63. உத்தர கிரியை உடன் நிறைவேற்று.

சண்டை ஒழிந்தது. அரக்கர்கள் உபத்திரவம் தீர்ந்தது. "இனிமேல் அரக்கர்களுக்கு அரசன் லங்காதி பனன விபீஷணர்தான்" என்று நிச்சயமாய் ஏற்பட்டது. "சிறந்த இராமபக்தர்; பரமபாகவதோத்தம சிரோன்மணி; இவரால் எல்லோருக்கும் இனி க்ஷேமமே ஏற்படும்" என்று சகலருங் கொண்டாடினார்கள். அரக்கிகள் அனே கர் அல்லோல கல்லோலப்பட்டு, மாண்ட தங்கள் கண வர்களின் பிரேதங்களைத் தேடித் தலைவிரி கோலமாய் அழுதுகொண்டு, யுத்தகள மெல்லாம் அலைந்தார்கள்.

தங்கள் தங்கள் கணவர்கள், புத்திரர்கள், சுற்றத்தார் தேகங்களைக் கண்டு புலம்பினார்கள். அவ்விதம் வந்தவர்களில் மண்டோதரியும் ஒருத்தி. இராவணனுடைய பட்டமகிஷி. மகா உத்தமி, பதிவிரதா சிரோன்மணி. இவளை நினைத்தாலும் சகல பாவமும்தொலைந்துவிடும். தன் புருஷனுக்கு எவ்வளவோ நற்புத்தி கூறினாள். சீதை விஷயமாய் எவ்வளவோ எடுத்துக் கூறினாள். "இந்த யுத்தம் வேண்டாம், வீண் அபவாதம் வேண்டாம்" என்று கெஞ்சிக் கேட்டாள். இராவணன் ஒன்றையும் சட்டை செய்யாமல் சண்டைக்கு வந்து, தன் இனத்தாரைத் தொலைத்தும், தானும் தொலைந்தான். 'கணவனேதெய்வம்' எனக் கருதும் காரிகையார் தங்கள் கணவர்கள் எவ்வளவுதான்கொடியவர்களா யிருந்தாலும், மகா பாபிகளா யிருந்தாலும் அவற்றை யெல்லாம் கருதமாட்டார்கள். பதி பக்தியில் குறையமாட்டார்கள். இச்சமயம் மண்டோதரி தன் நாதனை இழந்து பரிதபித்தாள். அவனுடையபராக்கிரமங்களை யெல்லாம் எடுத்துச் சொல்லிப் புலம்பினாள். 'இப்படியும் காலம் வந்ததே' என்று புழுப்போல் துடித்தாள். இச்சமயம் விபீஷணருக்கும் மஹத்தான துக்கம் வந்தது. கருணையே உருக்கொண்ட உத்தம புருஷனல்லவா? "அநியாயமாய் அண்ணன் தன் கேட்டைத் தானே தேடிக்கொண்டானே! யார் என்ன சொல்லியும் கேளாமல் மாண்டானே" என்று வருத்த மடைந்தார். இவ் உலகத்தில் துஷ்ட கிருத்தியங்களைச் செய்யும் பாபிகளது காரியம் இப்படித்தான் முடியும். "முதல் முதலில் எல்லாம் அனுகூலமாய் முடிவதுபோல் ஏற்பட்டுக் கடைசியில் 'கஷ்டத்திற் குள்ளாகும்' என்பதற்கு என் அண்ணனே சாட்சியாய் ஏற்பட நேர்ந்ததே" என்று பிரலாபித்

தார். "அப்பா! விபீஷணா! உன்னுடன் பிறந்த சுற்றத்தார் களுக்கும், பந்துக்களுக்கும் நீயே நின்று உத்தரகிரியை உடனே நிறைவேற்றுவை" என்று ஸ்ரீராமபிரானால் உத்தி ரவு பிறந்தது. அதைச் சிரம் வகித்து, உயிர் துறந்த தனது சகோதரர்களுக்கும், பந்துக்களுக்கும் உத்தரகிரியைகளை விபீஷணாழ்வாரே முன்னின்று நிறைவேற்றினார். பிறகு எல்லோரும் ஏகோபித்து லங்கைக்குச் சென்றார்கள்.

64. அபவா தத்திற் காளாக மாட்டேன்.

முன்னரேயே ஸ்ரீராமபிரானால் தனக் களிக்கப்பட்ட லங்காதி பத்தியத்தைக் கைக்கொண்ட விபீஷணருக்கு லக்ஷ்மணர், சுக்ரீவன், ஹனுமார், அங்கதன், ஜாம்பு வந்தன் முதலியவர்கள் முன்னின்று, இராட்சதப்பிராமணர் களைக்கொண்டு, வேதவிதிப்படி விமரிசையாய்ப் பட்டாபி ஷேகம் நடத்தினார்கள். 'தாம் கொண்ட விரதத்திற்குப் பங்கம் வரக் கூடாது' என்று இராமர் லங்கைக்குட்செல்ல வே இல்லை. விபீஷணர் லக்ஷ்மணரையும், ஹனுமாரையும், மற்ற இராம கைங்கரிய துரந்தரர்களையும் அழைத்துக் கொண்டு, சீதாபிராட்டி இருக்குமிடம் சென்று, அவ்வம் மனுக்குத் தண்டம் சமர்ப்பித்து ஸ்ரீ ராம ஜெயத்தைக் கூறி, அம்மனைப்பல்லக்கிலமர்த்தி, இராமரிடம் அழைத்து வந்தார். தாயாகிய சீதை, 'தன் நாதர் பொற்பாத தரிச னம் செய்யும் சமயம் வந்ததே' என மனதில் சந்தோஷம் பொங்க, ஸ்ரீராமபிரான் இருக்கு மிடத்தை நோக்கித்தரை யைப் பார்த்தவண்ணமாய் நடந்து வந்து சேர்ந்தாள். இரா மர் சீதையை ஏறிட்டுப்பார்த்து ஒன்றுமே சொல்லாமல்,

சந்தோஷக் குறியு மில்லாமல் பராமுகமாய் இருந்தார். "காரணம்' இன்னதென்று யாருக்கும் தெரியவில்லை. அம்மன் மனம் துடித்தது. லக்ஷ்மணர் முதலியவர்கள், ஒன்றும் செய்யத் தோன்றாமல் மயங்கினார்கள். "இவ்வளவு தூரம் காரியங்களைச் சீராய் நடத்திய நாதன் இப்போது இவ்வித மிருப்பது ஏனோ?" என்று பிரமித்தார்கள்: எல்லோருடைய மனதி விருப்பதையும் ஒரு விதமாய் இராமபிரான் அறிந்துகொண்டு "நண்பர்களே! 'கொண்ட காதலியைக் கண்டவன் அபகரிக்க, அவளை மீட்க வகையின்றி, வெட்கம் கெட்ட இராமனும் அலைகின்றான்' என்கிற வசைச் சொல்லுக் கிடமின்றி உயர்ந்த க்ஷத்திரிய தர்மத்தை மேற்கொண்டு, அவ்விதம் செய்த துராத்மாவை ஹதம்செய்து, இட்சுவாகு குலத்தின் பேரையும், கீர்த்தியையும் நிலைநாட்டினனே யன்றி 'இவ்வளவு காலம் அரக்கனால் அபகரிக்கப்பட்டு, அரக்கர்கள் மத்தியிலேயே வாசம்செய்து வந்த ஒரு நங்கையைத் தன் 'தர்மபத்தினி' என்று கூசாமல் இராமன் சேர்த்துக்கொண்டான்' என்கிற அபவாதத்திற்கு நான் ஆளாகமாட்டேன்" என்றார். இதைக்கேட்ட உடன் எல்லாரும் இருந்தும் இறந்தவர்களே யானார்கள். என்ன செய்வார்கள்! அம்மனும் "அந்தோ! என்ன விந்தையிது? இவ்வித நிந்தனையான வார்த்தைகள் கேட்கவா உயிர்வைத் திருந்தேன்? என் நாதருக்கு அபகீர்த்தி உண்டாக்கவா இங்கு வந்தேன்? துஷ்டன் சிறையினின்றும் விடுபட்டேன்! நாதரைக் கண்டேன்! ஆனந்தங் கொண்டேன்! இனி அரைக்கணமேனும் உயிர் தரியேன்! தீக்குளித்தாவது உயிர் துறப்பேன்" என்று பிரதிக்ஞை செய்துகொண்டு, துக்க சாகரத்தில் மூழ்கியவளாய் லக்ஷ்மணரைப் பார்த்தாள்.

65. அக்கினி சாட்சியாய் அம்மனை ஏற்ருர்.

"உத்தம ஸ்திரீரத்னங்கள் அவமானம் உற்ற இடத்தில் உயிர் வழங்கும் தன்மையர்" என்பதையறிந்த இளைய பெருமான் அண்ணனை நோக்கிஞர். உடனே ஆங்கு அக்கினி வளர்க்கப்பட்டது. சீதா பிராட்டி தன் நாதரது திவ்ய நாமத்தையே ஸ்மரித்துக் கொண்டு, அக்கினி குண்டத்தை மும்முறை வலம் வந்து "நான் நிர்த்தோஷி; நிரபராதி; என் கணவனே 'தெய்வம்' எனக் கொண்டாடி வந்தேன். மனே வாக்குக் காயங்களில் எள்ளளவேனும் அனுஷ்டானத்திலிருந்து பிசகினவள் இல்லை' என்பதற்கு ஜோதிரூபமாகிய அக்கினி பகவானே! நீயே சாட்சி" என்று சொல்லிக்கொண்டு, அக்கினி மத்தியில் பாய்ந்து விட்டாள். கண்ட எல்லோரும் கதறினர்கள். 'என்ன! விபரீதம் நேர்ந்துவிட்டதே' என்று பதறினர்கள். அம்மனுக்காகத் துக்கமடைந்து' அக்கினிகுண்டத்தைப் பார்த்த வண்ணமா யிருந்தார்கள். மனிதர்க ளியற்றும் ஒவ்வொரு காரியத்திற்கும் சாட்சி பூதனுய் எள்ளுக்குள் எண்ணெயைப்போல் எதிலும் வியாபித் திருப்பவனுய், ஸகல உலக விவகாரங்களுக்கும் சாட்சி நாயகனுய், நடு நிலைமையினின்றும் வழுவாதவனுயுள்ள அக்கினிபகவான் அம்மனிடத்துக் குற்றமிருந்தா லல்லவோ சுட்டெரிப்பார்? மஹாபதிவிரதையானசாட்சாத் ஸ்ரீதேவியின் பாததூளிபட்டமாத்திரத்தில் இருகைகளாலும் ஏந்திக்கொண்டு "இதோ தங்கள் தர்ம பத்தினி; களங்க மற்றவள், கற்புக்கரசி; வீண் சந்தேகம் வேண்டாம்; திரிகரண சுத்தியாய்த் தங்களையன்றி வேருருவரை எக்காலத்திலும் நாடினதில்லை; இது ஸத்தியம்!

ஸத்தியம்!! ஸத்தியம்!!! தங்கள் கோபத்தைத் தணிக்க வேண்டும்; அம்மனை ஏற்றுக்கொள்ள வேண்டும். பரம தயாளு'' என்று துதித்து நின்றார். 'எனக்குவேண்டியதும் நின் சாட்சியமே' என்று அக்கினி பகவானை மிகவும் கொண்டாடி, மனக் கலக்கத்தை நீக்கிப், பரிவுடன் அணைத்து; ஆனந்த வாரிதியில் மூழ்கினவராய் 'வனவாசம் ஏற்பட்ட காலம் தொடங்கிக் கணக்குப் பார்க்கப் பதிஞன்கு வருஷமும் கழியும்சமயம், என்று கண்டு,பரதனைக் காணவேண்டுமென்றுசொல்லவே எல்லோரும் சந்தோஷமடைந்தார்கள். இராமரைக்கொண்டாடினார்கள். அம்மனை மெச்சினார்கள். அயோத்திக்குப் போக யத்தனங்களைச் செய்யலானார்கள். உடனே விபீஷணர் புஷ்ப விமானத்தைத் தயாரித்துக்கொண்டுவர ஏற்பாடு செய்தார்.

---

66. சென்றுநம் பரதனைத் தேற்றிடுவாயே.

சீதா லக்ஷ்மணசமேதராய் ஸ்ரீ இராமபிரான் திரண்ட வானரப் படைகள் சூழ, விபீஷணாழ்வார் பின் தொடர, விமானமேறி, அயோத்தி நோக்கிப் புறப்பட்டார். தண்டகாரண்ய ரிஷிகளின் கோரிக்கை முற்றும் நிறைவேறி விட்டது. தகப்பனார் வாக்குத் தத்தமும் விக்னமின்றி முடிந்து விட்டது. தாய்மார்ஞாபகமும், சகோதரவாஞ்சையும், பிரஜைகளின் அபிமானமுமே மேலிட்டவராய்ப்பரதனுக்குச் சொன்ன வண்ணம் நிறைவேற்ற அதிவேகமாய் வந்தார். முன்சஞ்சரித்தஇடங்களையெல்லாம் அம்மனுக்கும், மற்றவருக்கும் காட்டிக்கொண்டு, பழைய சங்கதிகளை ஞாபக

மூட்டிக்கொண்டும் வந்தார். பதினன்கு வருஷம் தீர்ந்து, "பரதனைக் காணுதற்குத் தாமதப்படுமோ! பரதன் தன் பிரதிக்கினைப்படி நிறைவேற்றி விடுவானே! பரதனைக் காண முடியுமோ முடியாதோ" என்ற ஏக்கத்தால் "எவ் விதத்திலும் முன்னதாகத் தன் வருகையை அவனுக்குத் தெரிவிக்கவேண்டும் என்றெண்ணி, 'யாரை அனுப்பலாம்' என்று யோசிக்கையில் ஆஞ்சநேயர் ஞாபகம் வந்துவிட்டது. உடனே மாருதியை நோக்கி "ஆஞ்சநேயா! ஆபத் சகாயா! என்னருமை நேயா! உன்னை யல்லாமல் உற்ற இடத்தில் உதவி புரிவார் யாருமில்லை. எவ்விதமாவது பரதனைத் தேற்ற வேண்டும். இன்றோடுபதினன்கு வருஷங் களும் கழிகின்றன. நாளைக்குச் சூரியோதயம். பரதன் என்ன செய்வானே; யார் கண்டார்? என் வருகையை அவனுக்கறிவிக்க வேண்டுமே" என்றார். ஐயன் கட்டளைப் படியே 'ஆகட்டும்' என்று சொன்னது தான் தாமதம். ஹனுமாரை அங்கே காணோம். வாயுவேகமோ, மனோ வேகமோ! உடனே நந்திக்கிராமம் வந்துசேர்ந்துவிட்டார்.

---

67. அமரர் துதித்திட அயோத்தி வந்தனர்.

"எங்கள் குலத்தைக் கெடுக்க வந்த கோடாரிக் காம்பாம் என் அன்னை ஏற்பட்டனளே! நாட்கள் கழிந்து விட்டன! என் தமையனார் ஏனோ இன்னும் வரவில்லை! அவருக்கு என்ன ஆபத்து நேர்ந்ததோ அல்லது 'இந்தப் பாவிகள்முகத்தில்விழிக்கவும் வேண்டுமோ' என்று வனத் திலேயே தங்கிவிட்டாரோ? ஏதேது இனி உயிரோடிருப்

பது தகாது' என்று பிரலாபித்து, முன்னரே தயாரித்திருந்த அக்கினி குண்டத்தை மும்முறை வலம் வந்து, 'என் அண்ணன் ஸ்ரீராமபிரானுக்கு எவ்வித ஆபத்தும் ஏற்படக்கூடாது' என்று இஷ்ட தெய்வத்தை வேண்டி, அக்கினிப் பிரவேசம் செய்யப் பரதர் பிரயத்தனப் பட்டார். உடனே யாரோ தம் பாதங்களைப் பற்றுவதுபோற் கண்டார். "வந்தார் இராமர்" என்கிற சுப செய்தியைக் கேட்டார். 'யார் இங்குவந்தது! இந்தச் சந்தோஷ சமாச்சாரம் சொன்னது' என்று திரும்பி, ஆஞ்சநேயரைக் கண்டு களித்து, "உத்தமனே! இராமரெங்கே? சற்குணனே! நீயார்? எனது மித்திரனே! நீ இங்கு வரக் காரணமென்ன?" என வினவினர். "பரத்வஜாது" ஆசிரமத்திலிருக்கிறார் உமது மூத்தோர். அவர் தாஸன் யான். அவரது திருவடிகளே தஞ்சமென்று நம்பி இருப்பவன்; ஹனுமான் என்று என்னைக் கூறுவர். எனதையரனுப்ப இங்கு வந்தேன்; அவர் இங்கு வரும் சமயமாயிற்று" என்றார் ஹனுமார். உடனே வசிஷ்ட வாமதேவாதி மஹரிஷிகளையும், சுமந்திரர்முதலிய மந்திரிகளையும், மற்றெல்லோரையும் பார்த்து, சந்தோஷ சமாச்சாரத்தைச் சொல்லி, அவர்களை முன்னிட்டுக்கொண்டு, அண்ணனை எதிர்கொண்டழைத்து வரப் புறப்பட்டார்; எதிரில் அண்ணன் திவ்விய ரதத்தைக் கண்டார்; ஆனந்தங்கொண்டார்; மெய்மறந்து ஆடினர்; பாடினர்; அண்ணனை வேண்டினர்; 'இன்றுதான் நான் தன்யனானேன்' என்றுகொண்டாடினர். இவ்விதமாய் மெய்மறந்திருக்கும் பரதனை இறுகத்தழுவி, ஆசீர்வதித்து, வந்தபெரியோர்களைத் தனித்தனிவந்தித்து, அவர்கள்ஆசீர்வசனங்களைப் பெற்று, மற்றவர்களையெல்லாம் அன்புடன் கொண்டாடி, அயோத்தி வந்து சேர்ந்தார் இராமர். உடனே

தாசரதி அன்னைமார்களிடம் சென்று, அவர்கள் பாத சேவை செய்து, அவர்களால்வாழ்த்தப்பெற்று வனவாசப் பெருமைகளை எல்லாம் சொல்லித் துக்கிக்க வேண்டிய சமயங்களில் துக்கிப்பதும், ஆனந்திக்கவேண்டிய சமயங் களில் ஆனந்திப்பதுமாய்க் காலம் கழித்தார். காரியத்தி லேயே கண்ணுயுள்ள பரதர் பெரியோர்களை வேண்டிப் பட்டாபிஷேகத்திற்கு ஆகவேண்டிய பிரயத்தனங்கள் செய்யும்படி சகல ஏற்பாடுகளையும் செய்தார்.

68. பரமார்த்த ராம பட்டாபிஷேகம்.

"வனஞ்சென்ற நாதன் அயோத்தி வந்தார்'' என்கிற ஆரவாரம் அயோத்தி எங்கும் மிகுந்த கோலாகலம். 'பட்டாபிஷேகம்' என்கிற குதூகலம். பரதர் தன் தமைய னிடத்து வைத்துள்ள பக்திக்காக எல்லோருக்கும் கொண் டாட்டம். ஆகவே எங்குப்பார்த்தாலும் வாழை, கமுகு

கள் நாட்டி, மகரதோரணங்கள் மாட்டி, சித்திரக்கோலங் கள் தீட்டி, வைகுந்தம்போல் விளங்கும் அயோத்திமா நகரின் சபாமண்டபத்தில் சந்தன தாம்பூலங்கள் தரித்து, திவ்ய ஆடையாபரணங்கள் பூட்டி, கூட்டம் கூட்டமாய் ராஜராஜாக்க ளெல்லாம் வந்து சேர்ந்தார்கள். அவரவர் அவாவர்களுக்காக அமைக்கப்பட்டிருந்த ஆசனங்களிலே அமர்ந்தார்கள். சுக்ரீவன் உத்திரவுப்படி திவ்ய புண்ய தீர்த் தங்கள் எல்லாம் வந்து சேர்ந்து விட்டன. கொலுமண்ட பம் எங்குப்பார்த்தாலும் மங்களகரமான தொனிகளே நிறைந்து இருந்தன. பட்டாபிஷேகத்திற்கு வேண்டிய மங்களகரமான சாமான்களே அதிகம் நிரம்பி இருந்தன. வசிஷ்ட வாமதேவாதி மஹரிஷிகளும், வேத பிராமணர் களும், சுமந்திரர் முதலிய மந்திரிமார்களும், வானரர் ளும், இராட்சதர்களும் அயோத்திமாநகர் வாசிகளு மாய்க் கூடியிருந்தார்கள். வேதகோஷமும், திவ்ய வாத் திய கோஷமும், ஜனங்களின் சந்தோஷகோஷமும் எத்திக் கிலும்முழங்க,தேவர்கள் ஆகாய மார்க்கத்திலிருந்து, கண்டு ஆனந்தித்து, புஷ்பமாரிசொரிய, ஹனுமார் பாதஸேவை செய்யத் தம்பிமார்கள் வெண்கொற்றக்குடை, வெண் சாமரை முதலிய விருதுகள் பிடிக்க, சகல ரிஷி கணங் களும், தேவகணங்களும் ஆசிர்வதித்துப் பல்லாண்டு கூறச் சுக்ரீவ விபீஷணாதிகள் கண்டுஆனந்தித்திருக்க, இட்சுவாகு குலகுருவாகிய வசிஷ்டர் சகல திவ்ய தீர்த்தங்களைக் கொண்டு 'உலகத்தாரை ஈடேற்ற வந்த உத்தமராகிய ஸ்ரீ சீதா சமேதராய்க் கொலுமண்டபத்தில் நவரத்தின கசிதமான சிம்ஹாசனத்தில் வீற்றிருக்கும் ஸ்ரீராமச் சந்திர ருக்குத் திவ்ய பட்டாபிஷேகத்தை மிகச் சிறப்பாய் நடத் தினர். பிறகு அநேக வருஷகாலம் சீதா லக்ஷ்மண பரத

சத்துருக்ன ஹனுமத் சமேதராகத் தானே இராமபிரான் தேவர்களும், மூவர்களும் கொண்டாட, உலகத்தார் உத்தம சன்மார்க்க நெறியில் வழுவாமல் நடந்துவர, வையகமே செழித்தோங்கி இன்புற்றிருக்க, மநுமுறை அணுவளவேனும் பிசகாது. தர்ம பரிபாலனம் செய்து வந்தார். நிற்க, பகவான் துஷ்டநிக்ரஹ சிஷ்டபரிபாலன காரியார்த்தமாய் எடுத்துள்ள அவதாரங்கள் பலவாயினும் அவற்றுள் பகுத்துவம் பொருந்திய மானுட ஜென்மத்தி லவதரித்து, மானுடர்களுக்கும், ரிஷிகளுக்கும், தேவர்களுக்கும் இதத்தைச் செய்து, பாவங்களை நசித்துப் புண்ணியங்களை ஸ்தாபிதப்படுத்திவைத்தது இராமாவதாரமும் கிருஷ்ணவதாரமுமே யாம். ஆகவே எவரொருவர் திரிகரண சுத்தியோடு ஸ்ரீ ராமாயணத்தையும், மகா பாரதத்தையும், பாகவத புராணத்தையும் பாராயணம் பண்ணுகிறார்களோ அவர்கள் "இம்மையில் அடையவேண்டிய சகல பாக்கியங்களையும் அடைந்து, மறுமைப் பயனையும் அநுபவிக்கத் தக்க புண்ணியர்கள் ஆவார்கள்" என்பது எவ்விடத்தும், எஞ்ஞான்றும் ஒரு எதார்த்த வசனமேயாம்.

வெண்பா.

மாலயனுய் மாபரனுய் வானுற்றுன் ராமனுங், கோ
பால கிருஷ்ண னுமாய்ப் பாருற்றுன்—மூலமறை
பேசொணுப் பேருற்றுன் பேதபுவ னாதிமுதல்
ஈசனு மெங்கட் கிறை.

முற்றிற்று.

வானுற்றுன் - அண்டாகார சொரூப முற்றுன். பாருற்றுன் - பிண்டாகார சொரூப முற்றுன், அதாவது:- மனுடசரீரமெடுத்தான்.

புதிய பிரசுரங்கள்

அமெரிக்காவின் மூன்று பெருமக்கள்	0—10—0
மனோன்மணீயம்	0—10—0
முப்பெரும் நண்பர்கள்	0— 8—0
இராமாநுஜர் சரித்திரம் படங்களுடன்	0—10—0
தம்பிரான்றோழர்	0—10—0
மணிமேகலை	0— 8—0
அபிமன்னன் வெற்றி	0— 6—0
கதைமணிக் கோவை	0— 5—0
பண்டைச் சிறு கதைகள்	0— 6—0
தமிழ்ப் புலவர் வரலாறு முதல் பகுதி	0—10—0
ஷை 2ம், 3ம் பகுதி தனித்தனி	0— 8—0
ஸ்ரீ கிருஷ்ணன் தூது வசனம்	0— 4—0
பாண்டியமன்னர்சரித்திரம் முதல்பாகம்	0—10—0
ஷை இரண்டாம் பாகம்	0— 8—0
மேகநாதன் அல்லது உத்தம புத்திரன்	0— 8—0
பாண்டவ வீரர்கள்	0— 8—0
அறிவு விளக்கக்கதைகள் முதல் பாகம்	0— 8—0
ஷை இரண்டாம் பாகம்	0— 6—0
ஷை மூன்றும் பாகம்	0— 7—0
சுந்தரர்	0— 5—0
சாவித்திரி தேவி	0— 5—0
பத்மினி	0— 3—0
மனோரமை	0— 5—0
நளன் சரிதை	0— 4—0
சிறுவர் பொக்கிஷம்	0— 4—0
கதாமணி மகுடம்	0— 4—0
சிறுவர் கதைகள்	0— 4—0
மௌரிய சக்கிரவர்த்தி	0— 7—0
நமது நாட்டுக் கதைகள்	0— 5—0

இ. மா. கோபாலகிருஷ்ணக்கோன்,
புத்தக வியாபாரம்,
ஸ்ரீ கோபால் மஹால், வடக்குச் சித்திரைவீதி, மதுரை.